www.padippakam.com

# புதிய கலாச்சாரம்

அக்டோபர் - 2002
ம.க.இ.க. மாத இதழ்
ரூ. 5.00



போலீசுக்கெதிராக ஒரு முதியவரின் போராட்டம்

மாணவர்களே, இந்தப் படத்தை நன்றாகப் பார்த்துக்கொள்ளுங்கள். இனி ஏழைச்சிறுமிகள் பள்ளிச் செல்லும்காட்சியை நாம் காண முடியாது. உங்கள்கல்லூரிகள் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டபின்உங்கள்தம்பி-தங்கைகள் அந்தக் கல்லூரிகளை வேடிக்கை பார்க்க மட்டும்தான்முடியும்.



# மாணவர்களே... போராடுங்கள்!

படிப்பகம்

www.padippakam.com



## வாசகர் கடிதம்

◆ யாரோ ஒரு ஆள் சொன்னானாம் பூனை கருப்பாய் இருந்தால் என்ன வெள்ளையாய் இருந்தால் என்ன, எலி பிடித்தால் சரி என்று! துட்டு வரும் என்றால் அவுத்துப் போட்டும் ஆடுவோம், அவுக்காமலும் ஆடுவோம் இதுதான் இன்றைய சினிமா தத்துவம். எங்கள் கேள்வி: அழகி சண்முகம் மனத்துக்கண் மாசில்லாத பாத்திரமா?

— பெத்தண்ணன், சேடப்பட்டி.

◆ மலேசியாவில் சிறுபான்மை இனத்தவர்களின் (சீனர்கள், இந்துக்கள், கிறிஸ்தவர்கள்) கோயில்களைப் பராமரிக்க, அங்குள்ள இஸ்லாமிய அரசே நிதி ஒதுக்குகிறது என்ற செய்தியை (தினமணி 23.9.02) படித்து மகிழ்ந்தேன். உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடு என்று பறைசாற்றும் இந்தியாவில் பாபர் மசூதியை தேதி குறித்து இடித்துத் தரைமட்டமாக்கிய கயவர்கள், இன்று நாட்டின் அதிகார பீடத்தில் அமர்ந்து இருப்பது ஒவ்வொரு இந்தியனும் வெட்கித் தலைகுனிய வேண்டிய விசயம்.

— நியூஸ் ரிசர்ச் கவுன்சில், கீழக்கரை.

◆ இது பேயாட்சிதான். விலைவாசி, கட்டண உயர்வால் மக்கள், தங்கள் உரிமைகளுக்குப் போராடும் விவசாயி, நெசவாளி, வணிகர், அரசு ஊழியர், போக்குவரத்து ஊழியர், ஆசிரியர், மாணவர், வழக்கறிஞர், புதிதாக சாலைப்பணியாளர்கள் என அனைத்துத் தரப்பினரும் சுயநலன் பார்க்காது ஓரணியில் திரண்டால் தமிழகம் தாங்காது.

— கா. ஷஃபீ, வேலூர்.

◆ பாபாவும் பக்தகேடிகளும் – கட்டுரை ரஜினி ரசிகர்களுக்கு மட்டுமல்ல, தமிழக மக்களுக்கும் நல்ல பாடம். திருச்சி நகரமே பாபா நகரமாக மாறுவதற்கு ஷாகுல் ஹமீது, கலீல் போன்ற முஸ்லீம்கள் உதவியாக இருந்தது இஸ்லாமியர்களான எங்களுக்கு மிக வேதனையளிக்கிறது! இறைவன்தான் அழிவிலிருந்து அவர்களைக் காப்பாற்ற வேண்டும்!

— R.M.K. இம்தாதி, கோயம்புத்தூர்.

◆ பிராணிக்கு ருசி அவசியமில்லை. பே ாட்டதைத் தின்று ஜீரணித்துவிடும். ஆனால் உப்பு, புளி, காரம், இனிப்பு போன்ற சுவையறிவு மனிதனுக்குண்டு. இவைகளில் எதுவொன்று போதவில்லை அல்லது அதிகம் என்றாலும் வெளிப்படுத்தியாக வேண்டும். ஆறாவது அறிவின் பணிகளில் இதுவும் ஒன்று. 'அழகி' விமர்சனத்தில் 'ஒருவேளை' என்ற சொல் பயன்படுத்தப்படிருப்பது அவ்வாறுதான் என்பதை ரமேசுகுமார் புரிந்து கொள்ள வேண்டும். 'காமெடி டிராக் சேர்க்கப் பட்டபோது' தங்கர் பச்சான் கலங்கி நின்றது யாருக்காக? அவருக்காக! வாடிக்கையான அனைத்து வியாபார அம்சங்களையும் திட்டமிட்டு படமாக்கிவிட்டு, காமெடி டிராக்குக்காக மட்டும் கலங்குவதில் பயனென்ன? நற்சிந்தனை இருப்பின், மக்களுக்கு நல்லதைச் சொல்வதற்கு சினிமாவிலும் முடியும் என்பதை களஞ்சியம் அறிந்து கொள்ள வேண்டும். அவரையும் அவரைப் போன்றவர்களையும் மட்டுமே கணக்கில் கொண்டு ஆரூடம் சொல்லக்கூடாது; இயலாமையை இயல்பாக்கிக் கொள்ளக்கூடாது.

— ருத்ரன், காவேரிப்பட்டினம்.

◆ 'அழகி' விமர்சனக் கடிதத்தில் வாசகர் இரமேசுகுமார் 'ஒரு வேளை' என்ற யூகத்தை மறுத்துக் கூறுமிடத்திலெல்லாம் அவர் படத்திற்கு மட்டுமல்ல, படத்தில் வரும் கதாபாத்திரங்களுக்கும் அடிமையாகிவிட்டார் என்பதைத் தெளிவாக அறிய முடிகின்றது. 'ஒருவேளை' என்று கூறுமிடத்தில் ஆண்களின் இரண்டாவது முகம் புரியாமல் போனதற்குக் காரணம் என்னவோ? இவருக்கு நான் கொடுக்கும் வேண்டுகோள் என்னவென்றால், இனியாவது ஒரு படைப்பைப் படிக்கும் பொழுதும் சரி, ஒரு படத்தைப் பார்க்கும் பொழுதும் சரி, படைப்பில் முழுமையாக மூழ்கிவிடாதீர்கள்!

— வெ.கணேசமூர்த்தி, பரமக்குடி

◆ 'ஒருவேளை வளர்மதிக்கு ஒரு முன்னாள் காதலன் இருந்திருந்தால்' என்ற கருத்து அநேக ஆணாதிக்கவாதிகள் பொறுத்துக் கொள்ள முடியாத அளவு அவர்களின் இதயத்தை ஊடறுத்துச் சென்றுள்ளது. ஆகவே மேலும் தெளிவடைவதற்கு 'அழகி'யின் இரண்டாவது விமர்சனக் கட்டுரை ஒரு நல்ல வாய்ப்பு!

— நிர்மலா, திருச்சி.

◆ ஆகஸ்ட் மாத பு.க.வில் வெளியான வாசகர் கடிதம் பகுதியில் வெளியான, மதுரை வாசகர் சாக்ரடீஸ் அவர்களின் வாசகர் கடிதத்தைப் படித்தவுடன் மனதில் நெருடல் ஏற்பட்டது. முதலில் ''மனதில் ஈரத்தை வற்றாமல் பாதுகாப்பது'' பற்றிய அவரின் கருத்து சரியா, தவறா எனச் சிந்திக்க வைத்தது. பிறகு எங்கோ இடிக்கிறது என யோசித்தாலும் முழுமையாக எதிர்வாதங்களை வைக்க இயலவில்லை. ஆசிரியர் குழுவின் பதில், நான் சொல்ல முடியாத, ஆனால் உணர்ந்த பல விசயங்களை வெளிக்கொணர்ந்ததில் உற்சாகமடைகிறேன். புரட்சியை நேசிக்கும் புதிய தோழர்கள் எப்படி ஒரு முழு கம்யூனிஸ்டாக வளர்தெடுக்கப்படுகிறார்கள், அவர்களே தங்களை வளர்த்தெடுத்துக் கொள்கிறார்கள் என்பதையும், அதில் ஏற்படும் இயங்கியல் வளர்ச்சியையும் மிக ஆழமாகப் படம் பிடித்துக் காட்டியுள்ளீர்கள். இந்த நிகழ்ச்சிப் போக்கிற்குத் தானே சொந்தமாக ஆட்பட்டிருக்கும் எவரும் இதை மேலும் ஆழமாகப் புரிந்து கொள்ள முடியும்.

— புரட்சித் தூயன், தருமபுரி.

◆ திருவாளர் களஞ்சியத்திற்கு,

'அழகி' விமர்சனம் குறித்த உங்களது பதில் கண்டேன் ஒரு கலை இலக்கியப்படைப்பை ''அப்படிச்செய், இப்படிச்செய்,'' என்று கூற யாருக்கும் உரிமையில்லை என்று எங்களிடம் கூறும் நீங்களோ அல்லது தங்கர் பச்சனோ, ஏன் அதனைக் கோடம்பாக்கத்து முதலாளிகளிடம் கெஞ்சியாவது செய்திருக்கக் கூடாது? பஞ்சப் பராரிகளான உழைக்கும் மக்களது கருத்தைக் கேட்க வேண்டியது இல்லை என்ற ஆணவம்தானே? ஆனால் காலமும், வரலாறும் மக்களது கையில் வந்து சேரும். அன்று நீங்களும் இருப்பீர்கள். சினிமாவும் மக்களுக்கானதாக மாறும். அதனை நீங்கள் அடக்குமுறை என்பீர்கள். நாங்கள் ''பண்பாட்டுப் புரட்சி'' என்போம்.

— பீட்டர் பெர்னாண்டோ, சென்னை.

*10 ஆண்டுகளுக்கு முன்னால் புரட்சிகர அமைப்பைச் சேர்ந்த (RYL) தோழர் ஒருவர் கூறினார்: ''புரட்சி எனும் தீபத்தை நீங்கள்தான் இன்னும் அணையாமல் உயர்த்திப் பிடித்துக் கொண்டிருக்கிறீர்கள்.'' இன்று அவர் புரட்சிகர அமைப்பில் இல்லை. சமீபத்தில் இரு வேறு தோழர்களின் தந்தையும், தாயும் இறந்த போது இரு தோழர்களும் சாதி, சடங்கு, சம்பிரதாயங்களை எதிர்த்து நின்று விஞ்ஞானப்பூர்வமாக எதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்தனர். இதற்கெல்லாம் காரணமாக - அடித்தளமாக இருப்பது புதிய கலாச்சாரத்தில் வெளிவந்த – வெளிவரும், ''இதயத்தை ஈரமாக்குவது இலக்கியமா அரசியலா,'' ''உங்களுக்குள் குரோனியே இல்லையா,'' ''மகிழ்ச்சியின் தருணங்கள்'' போன்ற மற்றும் பிற சித்தாந்த உறுதியளிக்கும், உரசிப்பார்த்துக் கொள்ள வைக்கும் கட்டுரைகள்தான். குறிப்பாக ஒரு தோழர் கூறினார்: ''என்னை மீண்டும் இயக்கப் பணிகளைச் செய்ய வைக்க குஜராத்தில் 2000 பேர் கொலை செய்யப்பட்டு பு.க.வில் ஒரு கட்டுரையும் வெளிவர வேண்டியிருந்தது என்றால், நான் எவ்வளவு கேவலமாக இருந்திருக்கிறேன்.''*

— பகத்சிங், கோயம்புத்தூர்.

www.padippakam.com

கலை இலக்கியம்
யாவும் மக்களுக்கே

• புதிய கலாச்சாரம்
• மக்கள் கலை இலக்கியக் கழக மாத இதழ்

• போர்: 20
• குரல்: 5
• அக்டோபர் - 2002

உள்நாடு
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டுச் சந்தா: ரூ. 60.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டுச் சந்தா: US$ 9

மின் அஞ்சல் முகவரி:
puthiyakalacharam@hotmail.com
தொ.பேசி எண்: 044-3718706

சந்தா,
படைப்புகள் அனுப்பவும்
தகவல்களுக்கும்:

இரா. சீனிவாசன்,
18, முல்லைநகர் வணிக வளாகம்,
2-வது நிழற்சாலை,
15-வது தெரு அருகே,
அசோக் நகர், சென்னை-600 083.

அலுவலக நேரம்:
காலை 10 முதல் 2 மணி வரை
ஞாயிறு விடுமுறை

# மாணவர்களே போராடுங்கள்!

எண்ணெய் காணாத தலை, சாயம் போன சட்டை, வாத்தியாரின் பாராட்டை எதிர்பார்த்து ஆவலும், வெட்கமும் ஒருங்கே தேங்கிய விழிகள்.

அட்டைப்படத்தில் தோன்றும் இந்தச் சிறுமி யாரென்று தெரிகிறதா? மாணவர்களே, மாணவிகளே அது நீங்கள்தான். சத்துணவில் சேர்ந்து, ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் படித்து, பிறகு அரசு மேல்நிலைப்பள்ளி வழியாக கல்லூரியில் கால் வைத்திருக்கும் மாணவர் நீங்களென்றால், அந்தச் சிறுமியும் நீங்களேதான்.

அவளுடைய கையிலிருந்து சிலேட்டையும், கண்களிலிருந்து கல்வி கற்கும் ஆசையையும் பிடுங்கி விடலாமென முடிவு செய்திருக்கிறது ஜெயலலிதா அரசு. ஆரம்பப் பள்ளிகள் மூடப்படுகின்றன; அரசுக் கல்லூரிகள் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்படுகின்றன. அனைத்துக்கும் அடிப்படை ஒன்றுதான். கல்வி அளிக்கும் கடமையிலிருந்து அரசு கழற்றிக் கொள்கிறது.

60,70 ஆண்டுகளுக்கு முன்னால் இந்தச் சிறுமி பள்ளிக்கூடத்தை கண்ணால் கூட பார்த்திருக்கமாட்டாள். தன் வயதையொத்த சிறுவர்கள் அழகழகாகப் பள்ளிக்கூடம் போவதை சாணி பொறுக்கிய படியே ஏக்கத்துடன் நிமிர்ந்து பார்த்திருப்பாள்; அவ்வளவுதான்.

சாணி பொறுக்குபவனும், ஆடு மேய்ப்பவனும், துணி வெளுப்பவனும், முடி திருத்துபவனும் அவரவர் குலதர்மத்தைப் பின்பற்றுவதுதான் லோக சேஷமத்துக்கு நல்லதென நமக்கு உபதேசித்தார் இராஜாஜி. 'ஒரு குலத்துக்கு ஒரு நீதி' எனும் இந்த மனுநீதியைப் பெரியார் எதிர்த்து நின்றதன் விளைவாகத்தான் சவரக்கத்தி பிடிப்பவன் கையில் சிலேட்டுக் குச்சி வந்தது; ஆடு மேய்த்த பையன்கள் அரசு ஊழியரானார்கள், அப்புறம் ஆபீசரும் ஆனார்கள்.

இன்று காலம் மாறிவிட்டது. கல்வி, இட ஒதுக்கீடு, வேலை, சம்பளம் வசதியெல்லாம் வந்தபிறகு பலபேருக்கு அந்தக் காலம் மறந்து விட்டது. இன்னும் அந்தக் காலத்திலேயே, சிக்கிக்கொண்டிருக்கும் தங்கள் சொந்தக்காரர்களையும் மறந்துவிட்டது. தனியார் கல்லூரியிலும், சுயநிதிக் கல்லூரியிலும் ஆயிரக்கணக்கில் பணம் கட்டி அவர்கள் தங்கள் பிள்ளைகளுக்குத் தரமான கல்வி கற்றுக் கொடுக்கிறார்கள்.

அரசுக்கல்லூரி மாணவர்கள் தெருவில் நின்று கத்துவதைத் தொலைக்காட்சியில் பார்த்து விட்டு எரிச்சலுடன் வேறு சேனலுக்கு மாறுகிறார்கள்.

''இவர்களுக்கு வேறு வேலை இல்லை; பணம் கட்டிப் படித்தால் தானே கல்வியின் அருமை புரியும்'' என்று அலுத்துக் கொள்கிறார்கள்.

இதே வசனத்தைத் தான் அன்று இராஜாஜியின் குலத்துக்காரர்கள் பேசினார்கள், ''காசில்லாமல் படிப்பு சொல்லிக் கொடுத்தால் படிப்புக்கே மதிப்புப் போய்விடும்'' என்று அவர்கள் பதறினார்கள்.

படிப்புக்கொன்றும் மதிப்பு போய்விடவில்லை. நர்சரி பள்ளியிலிருந்து கல்லூரி வரை ஆயிரம், பத்தாயிரம், லட்சம் என்று 'மதிப்பு' கூடிக் கொண்டேதானிருக்கிறது. ''இப்படி நாள்தோறும் மதிப்புக் கூடிவரும் கல்வியை அரசாங்கம் இலவசமாக அள்ளித்தரலாமா?'' என்று இப்போது மாற்றிப் பேசுகிறார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



''தடியடியையும், துப்பாக்கித் தோட்டாவையும் தவிர வேறெதையும் மக்களுக்கு இலவசமாக வழங்கக் கூடாது'' என்று ஜெயலலிதா அரசுக்கு உத்தரவிட்டிருக்கிறது, உலகவங்கி. இராஜாஜியைப் போல ஒவ்வொரு குலத்துக்கு ஒரு நீதியென்றெல்லாம் உலகவங்கி பேசுவதில்லை. ''பணம் உள்ளார் பெரியோர், இல்லாதார் இழிகுலத்தோர்'' என்பதுதான் உலகவங்கியெனும் புதிய ஜகத்குரு விடுத்திருக்கும் விதி.

இந்தப் படத்தை இன்னொருமுறை நன்றாகப் பார்த்துக் கொள்ளுங்கள். இனி ஏழைச்சிறுமிகள் பள்ளி செல்லும் காட்சியை நாம் காண முடியாது. உங்கள் கல்லூரிகளை இன்னொருமுறை நன்றாகப் பார்த்துக் கொள்ளுங்கள். அவை பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டபின் உங்கள் தம்பி, தங்கைகள் அந்தக் கல்லூரிகளை வேடிக்கை பார்க்க மட்டும்தான் முடியும்.

முந்தைய தலைமுறையைக் காட்டிலும் பிந்தைய தலைமுறை கல்வியில் முன்னேறியிருக்கும் என்ற நியதி இனிச் செல்லாது. நமது எதிர்காலச் சந்ததிகள் ஒரே அடியில் இறந்த காலத்தின் கரைகளில் ஒதுக்கப்படுவார்கள்.

கல்வி மறுக்கப்படும் இந்தச் சிறுமியின் குடிசைக்குத்தான் மின்சாரம் மறுக்கப்படவிருக்கிறது; இவளுடைய குடும்பத்துக்குத் தான் ரேசன் அரிசியும் மறுக்கப்படவிருக்கிறது; அறுத்த நெல்லை அரசு வாங்க மறுப்பதால் அடுத்தது என்ன என்று நிலைகுலைந்து நிற்கப்போகிறவனும் இவளுடைய தந்தைதான்!

கல்வி, மின்சாரம், தண்ணீர், ரேசன், கொள்முதல்... இந்தச் சொற்கள்தான் வேறு. இவையனைத்தையும் பறிகொடுக்க இருக்கும் வர்க்கம் ஒன்றுதான்.

அவள் யாரோ ஒரு சிறுமியல்ல – மாணவர்களே, அது நீங்கள் தான். போராடுங்கள். போராட்டத் தீயை அணைய விட்டுவிடாதீர்கள். உங்கள் போராட்டம்தான் எல்லோருடைய போராட்டமும்.

அனைவரையும் வென்றடக்கிய திமிரில் இறுமாந்திருக்கிறது இந்தப் பேயாட்சி. விவசாயிகள், தொழிலாளர்கள், வேலை இழந்த சாலைப்பணியாளர்கள், ஆசிரியர்கள், ஏதுமில்லாத ஏழைகள்... அனைவரும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் வெற்றி பெறுவதற்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த உலகவங்கியின் கைக்கூலி ஆட்சிக்கெதிராக நீங்கள் கொடுக்கும் அடி அவர்கள் அனைவரையும் கிளர்ந்தெழச் செய்யும்.

கூச்சமும் வெட்கமும் நிரம்பிய அந்தச்சிறுமியின் விழிகள் கோபத்தில் சிவக்குமானால் கல்வியை அவள் கையிலிருந்து யாரும் பறிக்கவியலாது. ●

அட்டை வடிவமைப்பு: ஸ்பார்ட்டகஸ்

## சாமி பெயருக்கு ஒரு அர்ச்சனை

எம்பெருமான் ஆலயத்தை
எழுத்துக் கூட்டிப் படித்து நுழையும் போதே
''தங்கள் பாத அணிகளை இங்கே விடவும்''
என்று படம் வரைந்து உவமையணியோடு
கால் வாங்குகிறது குத்தகைத் தமிழ்.

உள்ளே அடியெடுக்க
உடனே தட்டுப்படும் உண்டியலோ
தனித்தமிழில்.

இதோ ''அர்ச்சனைச் சீட்டு வழங்குமிடம்''
நெம்பித்தள்ளும் அம்புக்குறிக்குள்
நிர்வாகத் தமிழ்.

''சாமி பிரசாதம் கிடைக்குமிடம்''
மடப்பள்ளியும், விலைப்பட்டியலும்
மணக்கும் தமிழில்.

''அர்ச்சனை செய்து தங்களுக்கு
அஞ்சலிலேயே அனுப்பி வைக்கப்படும்
ஆகும் செலவு ஒரு நூறு''
சுண்டியிழுக்கும் விளம்பரமோ
சோடியம் தமிழில்.

''கோயில் திருப்பணிக்கு
அம்பாளின் அருள்பெற
நன்கொடை தருபவர்கள்
தாராளமாய்த் தரவேண்டிய முகவரி...''
அடிக்கோடிட்டு அன்னைத் தமிழில்.

உள்ளே வந்து ஆண்டவன் நினைப்பில்
ஒன்றிக் கிடக்கையில்
''சாமிய வேண்டிண்டு
தட்சணை போடுறவா போடுங்கோ!''
கலைக்கும் ஒரு குரல் கட்டாயத் தமிழில்.

மெய்ப்பொருளை அடைய
மேலானது சமஸ்கிருதமென்றால்
எங்கள்
கைப்பொருளைப் பிடுங்கமட்டும்
கன்னித் தமிழைக் காட்டுவது
வெட்கமாயில்லையா
விளங்காத பரம்பொருளே!

● துரை. சண்முகம்



படிப்பகம்

www.padippakam.com

# குஜராத்: இந்துத்துவத்தின் சோதனைச் சாலை

3

● மருதையன்

**இந்திராவின் அவசரநிலைப் பாசிச ஆட்சி, அதற்கெதிராகக் குரல் கொடுத்த இன்னொரு பிரிவு ஆளும் வர்க்கக் கட்சிகளுக்கு ஜனநாயக ஒளிவட்டத்தை வழங்கியது.**

**குறிப்பாக இந்துமதவெறிப் பாசிஸ்டுகளான ஜனசங்கக் கும்பல் இத்தகையதொரு அரசியல் அங்கீகாரத்தை நாடு தழுவிய அளவில் அறுவடை செய்து கொண்டனர்.**

''இதுநாள் வரை குஜராத்தில் தனது கட்சியின் சமூக அடித்தளமாக இருந்து வந்த சாதிகளையும் வர்க்கங்களையும் காங்கிரசுக் கட்சி ஆர்.எஸ்.எஸ்.இன் கையில் ஒப்படைத்தது'' - என்று ஆகஸ்டு இதழில் இந்தத் தொடரை முடித்தி ருந்தோம்.

நவநிர்மாண் இயக்கத்தினூடாக நடைபெற்ற இந்த மாற்றம் அவ்வளவு எளிமையான முறையில் நடந்துவிடவில்லை; இந்துத்துவச் சக்திகளை உடனே ஆட்சிய திகாரத்தில் ஏற்றிவிடவும் இல்லை.

குஜராத்தின் சமூக அரசியல் தளங்களில் ஏற்பட்டு வந்த மாற்றங்கள் மட்டுமின்றி அனைத்திந்திய அரசியலில் ஏற்பட்ட மாற்றங்களும் இதில் பெரும் பங்காற்றின.

அனைத்திந்திய அளவில் பார்ப்பன பனியா கும்பலின் கட்சியாகவும், வணிக வர்க்கத்தின் கட்சியாகவும், முன்னாள் மன்னர்களின் எடுபிடிகளாகவுமே கருதப்பட்ட ஜனசங்கம், தூய இந்துத்துவக் கொள்கைகளை முன்வைத்து அதன் மூலம் மக்களைத் திரட்டவோ செல்வாக்கைப் பெறவோ இல்லை.

ஹிட்லர் உள்ளிட்ட பாசிஸ்டுகள் செய்ததைப் போலவே ஜனசங்கமும் மக்கள் நலனுக்குப் போராடும் கட்சியாகத் தன்னைச் சித்தரித்துக் கொண்டது. விலைவாசி உயர்வை எதிர்ப்பது, காங்கிரசின் இலஞ்ச ஊழலை எதிர்ப்பது போன்ற மதச்சார்பற்ற கோரிக்கைகளுக்கான போராட்டங்கள் மூலம் தனது மக்கள் தளத்தை விரிவுபடுத்திக் கொள்ள அது முயன்றது.

70-களின் துவக்கத்தில் தோன்றிய கடும் பொருளாதார நெருக்கடியும், இந்தியாவிலுள்ள அமெரிக்க ஆதரவு ரசிய ஆதரவு ஆளும் வர்க்கப் பிரிவுகளிடையே வளர்ந்து வந்த முரண்பாடும் ஓட்டுக் கட்சிகளிடையேயான அணி சேர்க்கையைத் துரிதப்படுத்தின.

ரசியச் சார்பு இந்திரா அரசுக்கு எதிராக சிண்டிகேட் காங்கிரசு, ஜனசங்கம், பாரதீய லோக்தள், சோசலிஸ்டுகள் ஆகியோர் ஜெயப்பிரகாஷ் நாராயண் தலைமையில் ஒன்றுபடும் நிகழ்ச்சிப் போக்கு துவங்கியது. 'இந்து மதவெறியர்கள்' என்று மற்ற கட்சிகளால் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த ஜனசங்கம் மதச்சார்பற்ற கட்சியாக அங்கீகரிக்கப்படும் விபரீதமும் நடந்தது.

''முதன் முதலில் குஜராத்தில் தன்னை வெளிப்படுத்திக் கொண்ட சமூக - அரசியல் போராட்டத்தின் உச்ச கட்டம்தான் ஜெயப்பிரகாஷ் நாராயணின் இயக்கம்'' என்கிறார் குஜராத்தைச் சேர்ந்த சமூகவியலாளர் கன்ஷ்யாம் ஷா.

குஜராத் நவநிர்மாண் இயக்கத்தைத் தொடர்ந்து அதைக் காட்டிலும் அதிகமான அளவிலும், திட்டமிட்ட ரீதியிலும் பீகாரில் மாணவர் போராட்டத்தை ஒழுங்கமைத்தது ஜனசங்கம். இதன் மாணவர் அமைப்பான அகில பாரதீய வித்யார்த்தி பரிஷத்தும் சோசலிஸ்டுக் கட்சியின் இளைஞர் பிரிவும் மற்றவர்களும் இணைந்து உருவாக்கிய ''போராட்டக் குழு'' ஜெயப்பிரகாஷ் நாராயணின் ஆதரவைக் கோரியது.

''கட்சி சார்பற்ற அறநெறி வழுவாத ஒரு இயக்கத்தை அரசுக்கு எதிராக உருவாக்க வேண்டும்'' என்று பேசி வந்த ஜெயப்பிரகாஷ் நாராயண் இந்தச் சோசலிஸ்டு இந்துத்துவக் கூட்டணியை ஏற்றுக் கொண்டார். ஜெ.பி.க்கு ஆள் பலம் தேவைப்பட்டது; இந்துத்துவச் சக்திகளுக்கோ முன்னாள் சோசலிஸ்டு என்றும், சர்வோதயத் தலைவரென்றும் காந்தீயவாதியென்றும் மதிக்கப்பட்ட ஜெ.பி.யின் அங்கீகாரம் தேவைப்பட்டது.

இந்த மாணவர் போராட்டம் மற்றும் மக்கள் போராட்டத்தின் நோக்கம் காங்கிரசு ஆட்சியை வீழ்த்தி மாற்று ஆட்சியை அமைப்பது அல்லவென்றும், மொத்தத்தில் அரசியலையும் பொது வாழ்க்கையையும், சமூகத்தையும் சுத்திகரிப்பதே இதன் நோக்கம் என்றும் கொள்கை விளக்கம் தந்தார் ஜெ.பி. இத்துடன் சீர்திருத்தங்கள், தீண்டாமை ஒழிப்பு, காந்தி கண்ட கிராம ராச்சியம் அனைத்தையும் தனது ''முழுப்புரட்சி''க் கோட்பாட்டில் சேர்த்துக் கொண்டார் ஜெ.பி.

''காந்தி, வினோபா, கோல்வால்கர் போன்ற மாபெரும் தலைவர்களின் வழியில் ஜெயப்பிரகாஷ் நாராயண் தன் கடமையைச் செய்கிறார். அந்தக் காலத்து முனிவர்கள் சமூகத்தை விட்டு விலகியிருந்தாலும் ஆட்சியாளர்கள் தவறிழைக்கும்போது மக்களுக்குத் தலைமையேற்றார்கள். அத்தகைய முனிவரைப் போன்றவர் ஜெயப்பிரகாஷ் நாராயண்'' என்று பாராட்டினார் ஆர்.எஸ்.எஸ். தலைவர் தேவரஸ். (இன்று அயோத்திப் பிரச்சினையில் சங்கராச்சாரி தலையிட்டு அரசுக்கு வழிகாட்டுவதை நியாயப்படுத்த இதே சொற்றொடர்களை அத்வானி பயன்படுத்துவதை வாசகர்கள் பொருத்திப் பார்க்கவும்)

ஜெ.பி.யை அழைத்ததில் ஆர்.எஸ்.எஸ்.ஸின் நோக்கம் முழுமையாக நிறைவேறிவிட்டது. பீகார் இயக்கத்தின் நோக்கமும் ஆர்.எஸ்.எஸ்.ஸின் பணிகளும் ஒன்றுதான் என்றும், மக்களின் சிந்தனையையும் செயலையும் செம்மைப்படுத்தி நாட்டை முன்னேற்றுவதுதான் அந்தப் பொது லட்சியம் என்றும், ஆர்.எஸ்.எஸ். பயிற்சி முகாமுக்கே சென்று சான்றிதழ் கொடுத்தார் ஜெ.பி.

இவ்வாறு சர்வோதயமும் கோல்வால்கரிசமும் பிசிறின்றி ஒன்று சேர்ந்தன. இன்றைய தேசிய ஜனநாயக முன்னணிக்கான முன்வரைவு ஜெ.பி.யால் உருவாக்கப்பட்டு விட்டது. ஆனால் ஜெ.பி. கூறிக்கொண்டதைப் போல ''ஆட்சியைக் கைப்பற்றும் நோக்கமில்லாத மக்கள் இயக்கம்'' என்ற கட்டுக் கதையை அவரே தனது சொந்த நடைமுறையின் மூலம் மறுத்துவிட்டார்.


படிப்பகம்

www.padippakam.com

நவநிர்மாண் இயக்கத்தின் விளைவாக இந்திரா காங்கிரசு அரசு வீழ்த்தப்பட்டுக் குடியரசுத் தலைவர் ஆட்சி குஜராத்தில் பிரகடனம் செய்யப்பட்டிருந்தது. ஆனால் காங்கிரசுக்கெதிரான எதிர்க்கட்சிகளின் முன்னணி எதுவும் அங்கே உருவாகவில்லை.

ஜன'75-இல் குஜராத் சென்ற ஜெ.பி. மொரார்ஜியுடன் சேர்ந்து எதிர்க்கட்சிகளின் பொது முன்னணி ஒன்றை இந்திரா காங்கிரசுக்கு எதிராக உருவாக்கினார்.

மாணவர் போராட்டத்தால் தனது முதல்வர் பதவியை இழந்த கல்வி வியாபாரி சிமன்பாய் படேலும், அந்த மாணவர் இயக்கத்தை ஆதரித்த ஜனசங்கமும் இந்த ''ஜனதா முன்னணி''யில் சேர்க்கப்பட்டனர். முன்னணியின் 'அறநெறி வழுவாத' அரசியலுக்கு இதுவே முதற் சான்று.

அடுத்து நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலின் முடிவுகள் நவநிர்மாண் இயக்கத்தின் ஓட்டாண்டித்தனத்தை நிரூபித்தன. காங்கிரசைக் காட்டிலும் நான்கு இடங்கள் மட்டுமே அதிகமாகப் பெற்ற ஜனதா முன்னணி, சுயேச்சைகள் பிழைப்புவாதிகள் ஆகியோரை ஒன்று திரட்டி தன்னுடைய முதல் கூட்டணி ஆட்சியை குஜராத்தில் அமைத்தது.

கடைந்தெடுத்த பிற்போக்குச் சக்திகளான மொரார்ஜியின் சிண்டிகேட் காங்கிரசும், ஜனசங்கமும் தங்கள் பலத்தை அதிகரித்துக் கொள்ள மட்டும்தான் இந்தத் தேர்தல் பயன்பட்டது. ஏற்கனவே வெறும் 16 இடங்களை வென்றிருந்த சிண்டிகேட் 56 இடங்களையும், வெறும் மூன்று இடங்களை மட்டுமே வைத்திருந்த ஜனசங்கம் 18 இடங்களையும் கைப்பற்ற இத்தேர்தல் வழிவகுத்தது.

ஜூன்'75-இல் இந்திராவால் பிரகடனம் செய்யப்பட்ட அவசரநிலை ஆட்சியில் தி.மு.க. அரசு கலைக்கப்பட்டது; ஆனால் இந்த ஒழுக்கவாதிகளின் முன்னணியோ பதவி வேட்டைக்காரர்களின் மோதலால் தானே கவிழ்ந்தது.

இருந்தாலும் இந்திராவின் அவசரநிலைப் பாசிச ஆட்சி, அதற்கெதிராகக் குரல் கொடுத்த இன்னொரு பிரிவு ஆளும் வர்க்கக் கட்சிகளுக்கு ஜனநாயக ஒளிவட்டத்தை வழங்கியது. குறிப்பாக இந்துமதவெறிப் பாசிஸ்டுகளான ஜனசங்கக் கும்பல் இத்தகையதொரு அரசியல் அங்கீகாரத்தை நாடு தழுவிய அளவில் அறுவடை செய்து கொண்டனர்.

1975 டிசம்பரில் சண்டிகரில் நடைபெற்ற காங்கிரசு மாநாட்டில் இந்திரா கீழ்க்கண்டவாறு பேசினார். ''ஜனசங்கம் ஆட்சிக்கு வந்தால் அவர்களுக்கு அவசரநிலை தேவைப்படாது. அவர்கள் ஒரேயடியாகத் தலைகளைச் சீவிவிடுவார்கள்; வங்காள தேசத்திலும் சிலியிலும் அதுதான் நடந்தது. அங்கே யாரும் கைது செய்யப்படவில்லை. கொலை செய்யப்பட்டு விட்டார்கள்.''

தற்போது இந்திராவின் இந்தப் பேச்சைப் படிப்பவர்களுக்கு இது ஒரு தீர்க்கதரிசனம் போலத் தோற்றமளிக்கலாம். ஆனால் சிறை, சித்திரவதை, படுகொலை என்று புரட்சியாளர்களையும், ஜனநாயகவாதிகளையும், எதிர்க்கட்சியினரையும் வேட்டையாடிய அந்தப் பாசிசக் காட்டேரியின் வாயிலிருந்து உதிர்ந்த இந்த உண்மையை அன்று சீந்துவாரில்லை. இந்திராவின் பாசிசம் இந்து மதவெறிப் பாசிஸ்டுகளுக்கு ஜனநாயகத் தோற்றம் வழங்குவதற்குத்தான் பயன்பட்டது.

**இந்திராவின் வாயால் பாசிச சக்திகள் என்று கூறப்பட்ட காரணத்தினாலேயே ஜனசங்கம் ஜனநாயக ஒளியைப் பெற்றது போல, பிழைப்புவாதிகளின் வாயால் உச்சரிக்கப்பட்ட காரணத்தினாலேயே மதச்சார்பின்மை என்ற சொல் மதிப்பிழந்தது.**

இந்தக் காலகட்டத்தில் குஜராத், மத்தியப் பிரதேசம், பீகார் ஆகிய மாநிலங்களில் மக்கள் திரள் போராட்டங்கள் மூலம் ஆர்.எஸ்.எஸ். தனது அடித்தளத்தை விரிவுபடுத்திக் கொண்டது. இந்திராவின் பாசிசக் கொடுங்கோன்மையை ஆதரித்துக் காவடி தூக்கிய வலது கம்யூனிஸ்டுக் கட்சி, பீகாரில் மாணவர்கள் மத்தியிலும் மக்கள் மத்தியிலும் தான் பெற்றிருந்த அடித்தளத்தை ஜெ.பி. இயக்கத்திற்கும், அதன் வழியே ஜனசங்கத்திற்கும் பலி கொடுத்தது.

முசுலீம் மக்களையும் ஜனசங்கத்தினை நோக்கித் தள்ளிவிடும் வேலையை இந்திராவே செய்து கொடுத்தார். அவசரநிலைக் காட்டாட்சியின் காரணமாகப் பொதுவாக எல்லா மக்கள் பிரிவினரையும் போலவே முசுலீம்களும் காங்கிரசுக்கு எதிராகத் திரும்பியிருந்தனர். கூடுதலாக, டெல்லி துருக்மான் கேட் பகுதியில் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த ஏழை முசுலீம்களின் குடிசைகளை இடித்ததும், எதிர்த்துப் போராடியவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்திக் கொன்றதும், கட்டாயக் கருத்தடை என்ற பெயரில் விலங்குகளைப் போல மக்களைக் கொண்டு சென்று காயடித்ததும் முசுலீம் மக்களிடையே பெரும் கொந்தளிப்பைத் தோற்றுவித்தது.

இந்திரா எதிர்ப்புச் சக்திகளுடன் கூட்டு சேர்ந்த டெல்லி ஜும்மா மசூ



**பீகார் இயக்கத்தின் நோக்கமும், ஆர்.எஸ்.எஸ்.இன் நோக்கமும் ஒன்றுதான் என்று சான்றிதழ் அளித்த ஜெயப்பிரகாஷ் நாராயண், பாட்னாவில் பேசுகிறார்.**



படிப்பகம்

www.padippakam.com

**1969 முசுலீம் படுகொலையையும், 1972–இல் நில உச்சவரம்புச் சட்ட எதிர்ப்பையும், இன்று குஜராத் படுகொலையையும் முன்நின்று நடத்திய இந்து 'மேல்சாதி' மேல்தட்டு வர்க்கம்தான் 1980–இல் தாழ்த்தப்பட்டோருக்கு எதிரான கலவரத்தையும் முன்நின்று நடத்தியது.**

தியின் இமாம் புகாரி, ''ஆர்.எஸ்.எஸ். மீதான தடையை அகற்று'' என்று கோருவதற்கும், பின்னர் ஜனதாவில் சேருவதற்கும் இது வழிவகுத்தது

இவ்வாறு எல்லாத் திசைகளிலிருந்தும் ஜனநாயக அங்கீகாரத்தைப் பெற்ற ஜனசங்கம், அவசர நிலைக்குப் பிந்தைய ஜனதா அரசில் தனிப் பெருங் கட்சியாக உருவெடுத்தது. ஜனதாவின் 295 பாராளுமன்ற உறுப்பினர்களில் 93 பேர் ஜனசங்கத்தினர்.

மொரார்ஜி, இந்து மதவாதக் கண்ணோட்டத்தில் வல்லபாய் படேலை ஒத்தவராக இருந்ததால் ஜனதாக் கட்சியையே தான் விரும்பிய திசையில் கொண்டு செல்ல முடியுமென ஆர்.எஸ்.எஸ். நம்பியது. ''ஜெயப்பிரகாஷ் நாராயணைக் காட்டிலும் மொரார்ஜிதான் நமது (ஆர்.எஸ்.எஸ்.) சிந்தனை முறைக்கு நெருக்கமாக இருக்கிறார்'' என்று குறிப்பிட்டார் அத்வானி. இந்த மதிப்பீடு சரியென்பதை நிரூபித்தன மொரார்ஜியின் செயல்பாடுகள்.

பசுவதைத் தடைச் சட்டத்தை அறிமுகப்படுத்தினார் மொரார்ஜி. இதனை முழுமனதாக ஆதரித்தார் வினோபா பாவே. பசுவதைத் தடை என்பது இந்து மதவாதக் கண்ணோட்டமல்ல என்பதுதான் ஜெயப்பிரகாஷ் நாராயணின் கருத்தாகவும் இருந்தது. காந்தீயவாதிகளும் இந்துத்துவவாதிகளும் ஒன்றுபடும் இந்தக் கோரிக்கையை ஜனதாக் கட்சிக்குள் இருந்த மதுலிமாயி உள்ளிட்ட முன்னாள் சோசலிஸ்டுகள் எதிர்த்ததன் காரணமாக இது சட்டமாக்கப்படாமலேயே கைவிடப்பட்டது.

தூய காந்தீயவாதிகளும், இந்துத்துவவாதிகளும் ஒன்றுபட்டு நிற்கும் இரண்டாவது பிரச்சினை - மதமாற்றத் தடைச் சட்டம். (மதமாற்றம் குறித்து ஆர்.எஸ்.எஸ்-இன் கருத்தும் காந்தியின் கருத்தும் ஒன்றே என்பது புதிய கலாச்சாரம் வெளியீடான **'கண்ணை மறைக்கும் காவிப்புழுதி'** என்ற நூலில் ஆதாரங்களுடன் விளக்கப்பட்டுள்ளது.)

பழங்குடி மக்களைக் கிறித்தவ நிறுவனங்களிடமிருந்து காப்பாற்றுவதற்காகவும், ஆசை காட்டியோ, மோசம் செய்தோ, கட்டாயப்படுத்தியோ மத மாற்றம் செய்வதைத் தடுப்பதற்காகவும் கொண்டு வரப்பட்டதாகக் கூறப்பட்ட இந்தச் சட்டத்தை கிறித்தவ மக்களும், சிறுபான்மைக் கமிசனும் கடுமையாக எதிர்த்ததால், வேறு வழியின்றி இதுவும் கைவிடப்பட்டது.

பாடத்திட்டத்தையும் மொரார்ஜி விட்டு வைக்கவில்லை. ஆர்.எஸ். சர்மா எழுதிய ''புராதன இந்தியா'' என்ற நூல் பாடத்திட்டத்திலிருந்து நீக்கப்பட்டது. இந்திய வரலாற்று ஆராய்ச்சிக் கழகத்தின் ஆர்.எஸ்.எஸ்.ஸிடம் ஒப்படைத்தது. 'சரஸ்வதி சிசு மந்திர்' என்று ஆர்.எஸ்.எஸ். உருவாக்கிய ஆரம்பப் பள்ளிகளின் துவக்கவிழாவில் அன்றைய குடியரசுத் தலைவர் சஞ்சீவரெட்டியும் அமைச்சர் ஜகஜீவன்ராமும் கலந்து கொண்டு வாழ்த்தினர்.

முசுலீம் மக்களுக்கு எதிரான கலவரங்களின் எண்ணிக்கையும், வீச்சும் ஜனதா ஆட்சியில் பெருமளவில் அதிகரிக்கத் தொடங்கியது. 1978-இல் அலிகாரில் நடைபெற்ற மிகப் பெரும் கலவரத்தை ஆர்.எஸ்.எஸ்.-தான் தூண்டியதென்று பகிரங்கமாகக் குற்றம் சாட்டினார், ஜனதாக் கட்சியைச் சேர்ந்த மதுலிமாயி. ''அதற்கு ஆதாரமில்லை'' என்று மறுத்தார் மொரார்ஜி. பிழைப்புவாதிகளின் தலைவரான சந்திரசேகரோ ''ஆர்.எஸ்.எஸ்.காரர்களைக் கொஞ்சம் கட்டுப்படுத்தி வையுங்கள்'' என்று முன்னாள் ஜனசங்கத்தினருக்கு



**ஜெ.பி.யை இந்து முனிவர்களின் வரிசையில் வைத்து மகிழ்ந்த (படுக்கையிலிருக்கும்) ஆர்.எஸ்.எஸ். தலைவர் தேவரசுடன் அளவளாவும் அத்வானி.**

பொறுப்பிலிருந்து அவரும் நீக்கப்பட்டார். ரோமிலா தபார், பிபன் சந்திரா போன்ற வரலாற்று ஆய்வாளர்களின் நூல்கள் முகலாய ஆக்கிரமிப்பைப் போதுமான அளவுக்குக் கடுமையாகக் கண்டிக்கவில்லை என்பதால் அவர்களது நூல்களும் பாடத்திட்டத்திலிருந்து நீக்கப்பட வேண்டுமென்றும், கல்வித்துறையிலிருந்து மார்க்சிய அறிவுஜீவிகளைக் களையெடுக்க வேண்டுமென்றும் ஆர்.எஸ்.எஸ். வற்புறுத்தியது.

அதே நேரத்தில் முதியோர் கல்வித் திட்டத்தை ஜனதா அரசே வேண்டுகோள் விடுத்தார்.

இன்று மோடிக்கெதிராகக் கூட்டணிக் கட்சிகளும் எதிர்க்கட்சிகளும் நடத்தி வரும் எதிர்ப்பு நாடகத்தின் முன்வரைவு அன்று இவ்வாறு நிகழ்த்தப்பட்டது. மொரார்ஜியிடமிருந்து பிரதமர் பதவியைக் கைப்பற்ற இயலாமல் தோற்றுப் போன சரண்சிங், மதச்சார்பின்மைக் கொள்கையின் மாவீரனாகத் தன்னைச் சித்தரித்துக் கொண்டார். இன்று வாஜ்பாயின் ஓடும் பிள்ளையாகப் பணியாற்றும் பெர்னாண்டஸ் அன்று சரண்சிங்குடன் சேர்ந்து மதச்சார்பின்மைக்குக் குரல் கொடுத்தார்.


படிப்பகம்

www.padippakam.com

இந்திராவின் வாயால் பாசிச சக்திகள் என்று கூறப்பட்ட காரணத்தினாலேயே ஜனசங்கம் ஜனநாயக ஒளியைப் பெற்றது போல, பிழைப்புவாதிகளின் வாயால் உச்சரிக்கப்பட்ட காரணத்தினாலேயே மதச் சார்பின்மை என்ற சொல் மதிப்பிழந்தது.

ஜனதா ஆட்சி கவிழ்ந்ததும், அதன்பின் 1980-இல் இந்திரா காங்கிரசு அறுதிப் பெரும்பான்மையுடன் ஆட்சியைக் கைப்பற்றி, ஜனதாக் கட்சி ஆட்சி செய்த எல்லா மாநில அரசுகளையும் கவிழ்த்ததும் அதன்பின் நடந்த அரசியல் நிகழ்வுகள்.

எனினும் இந்த மூன்றாண்டு காலத்தில் சிண்டிகேட் காங்கிரசுக்கும் ஜனசங்கத்துக்குமிடையே இருந்த சித்தாந்த ரீதியான ஒற்றுமை வலுப்பெற்று விட்டது. மக்கி மடிந்து கொண்டிருந்த சிண்டிகேட் கட்சி, ஜனசங்கத்தின் வளர்ச்சிக்கு உரமானது.

பதவியில் இருந்த மூன்றே ஆண்டுகளில் குஜராத் ஜனதா அரசு தான் சார்ந்திருந்த வர்க்கங்கள் நவ நிர்மாண் இயக்கத்தின்போது வைத்த கோரிக்கைகள் அனைத்தையும் நிறைவேற்றிவிட்டது. பணக்கார (படேல்) விவசாயிகளின் கோரிக்கைப்படி உணவுத் தானிய விற்பனை மற்றும் போக்குவரத்தின் மீதிருந்த கட்டுப்பாடுகள் அகற்றப்பட்டன. நிலக்கடலை மற்றும் கடலை எண்ணெய் கொள்முதல் கைவிடப்பட்டு வர்த்தகச் சூதாடிகளுக்கு முழுச் சுதந்திரம் வழங்கப்பட்டது. குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டத்திற்குத் தடை விதிக்கப்பட்டது; நிலப்பிரபுக்களின் நிலங்களிலிருந்து சிறுவிவசாயிகள் வெளியேற்றப்பட்டனர்.

நவநிர்மாண் இயக்கத்தில் தொடங்கி, 70-களின் இறுதிக்குள் காங்கிரசுக் கட்சி சாதீய ரீதியில் தனது சமூக அடித்தளமாக இருந்த பார்ப்பன, பனியா, படேல் சாதியினரை இவ்வாறு பறி கொடுத்தது.

தனது சோசலிச வாய்ச்சவடாலுக்குப் பொருத்தமாகப் புதியதொரு ஓட்டு வங்கியை உருவாக்கிக் கொள்ளும் முயற்சியையும் 70-களின் மத்தியிலேயே காங்கிரசு தொடங்கி விட்டது. இந்தப் பத்தாண்டுகளில் அழிந்துபோன சுதந்திராக் கட்சியின் பின்பலமாக இருந்த சத்திரியச் சாதிகளுடன் (பிற்படுத்தப்பட்டோர்), தாழ்த்தப்பட்டவர்கள், பழங்குடிகள், முசுலீம்கள் இணைந்த 'காம்' (KHAM) எனும் புதியதொரு ஓட்டு வங்கியின் உதவியுடன் 1980 தேர்தலில் வெற்றி பெற்றுக் குஜராத்தில் ஆட்சியைக் கைப்பற்றியது.

1980-இல் குஜராத் காங்கிரசு அரசு அறிமுகப்படுத்திய இடஒதுக்கீட்டுக் கொள்கைக்கு எதிராக வெறிபிடித்த சாதிக்கலவரம் அகமதாபாத்தில் தொடங்கியது.

1969 - முசுலீம் படுகொலையையும், 1972-இல் நில உச்சவரம்புச் சட்ட எதிர்ப்பையும், இன்று குஜராத் படுகொலையையும் முன்நின்று நடத்திய இந்து 'மேல்சாதி' மேல்தட்டு வர்க்கம்தான் 1980-இல் தாழ்த்தப்பட்டோருக்கு எதிரான கலவரத்தையும் முன்நின்று நடத்தியது. ''சாண்ட்ரோ காரிலிருந்து இறங்கி முசுலீம் கடைகளைச் சூறையாடுகிறார்களே'' என இன்று பத்திரிகைகள் அதிர்ச்சி தெரிவிக்கின்றனவே, அதே கவுரவமான படித்த மேல்தட்டு வர்க்கத்தைச் சேர்ந்த பேராசிரியர்களும், வக்கீல்களும், டாக்டர்களும், அரசு ஊழியர்களும்தான் ''சக்கிலியனுக்கு டாக்டர் படிப்பு எதற்கு?'' என்று பகிரங்கமாகக் கேள்வி எழுப்பினார்கள்.

— தொடரும்


## புதிய கலாச்சாரத்தின் புதிய வெளியீடுகள்!

திருச்சியில் செப். 14, 2002 அன்று நடந்த ''மறுகாலனியாதிக்கப் பயங்கரவாத எதிர்ப்பு!'' கருத்தரங்க ஒலிப்பேழைகள்





● இலவச மின்சாரம் சலுகையல்ல; உழவனின் உரிமை.

*டாக்டர் சிவசாமி, தலைவர், தமிழக விவசாயிகள் சங்கம்.*

விலை: ரூ. 30/-

● பக்கம் - 1
சிவில் சட்டத் திருத்தம்: கட்டப் பஞ்சாயத்துக்குச் சட்ட அங்கீகாரம்.

*வழக்குரைஞர் தோழர். பானுமதி.*

பக்கம் - 2
கல்லூரி ஆசிரியர் போராட்டம் ஏன்?

*பேரா. சாந்தாராம், தலைவர், அரசுக் கல்லூரி ஆசிரியர் மன்றம்.*

விலை: ரூ. 30/-




● போ என்றால் போய் விடுமா ? போராடு! - இது பேயாட்சி!

*தோழர். மருதையன், ம.க.இ.க.*

விலை: ரூ. 60/-

**ஒலிப்பேழைகள் கிடைக்குமிடம்**

இரா. சீனிவாசன், 18, முல்லைநகர் வணிக வளாகம்,
2-வது நிழற்சாலை, 15-வது தெரு அருகே,
அசோக்நகர், சென்னை - 600 083.

தபால் செலவு விவரம்: 1 முதல் 5 பேழைகள் வரை தபால் செலவு ரூ. 17 ஆகும். 5 முதல் 10 பேழைகள் வரை ரூ. 34 ஆகும். பதிவுத் தபால் செலவு கூடுதலாக ரூ. 15 அனுப்ப வேண்டும்.


### சந்தாதாரர்கள் கவனத்திற்கு

அக்டோபர்-02 இதழுடன் முடிவுறும் சந்தா எண்கள் : 3, 5, 9, 15, 16, 48, 52, 57, 58, 59, 141, 143, 232, 235, 246, 247, 249, 250, 253, 254, 255, 256, 257, 258, 259, 260, 261, 268, 269, 270, 272, 374

நவம்பர்-02 இதழுடன் முடிவுறும் சந்தா எண்கள் : 8, 10, 24, 51, 53, 54, 55, 56, 60, 62, 63, 64, 65, 66, 67, 68, 153, 154, 161, 263, 264, 265, 266, 267, 273, 274, 276, 278, 280, 372, 373

ஒவ்வொரு மாதத்தின் 25-ஆம் தேதிக்கு முன்பே சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ள / புதிய சந்தாவை அனுப்ப வேண்டுகிறோம். தவறாமல் சந்தா எண்ணைக் குறிப்பிடவும்.



படிப்பகம்

www.padippakam.com



# கரையான் புற்றுக்குள் கருநாகம் கருவறைக்குள் பார்ப்பனர்கள்

கரூர் அருகே உள்ளது திருமுக் கூடலூர் அகத்தீசுவரர் கோயில். அதன் பரிவார சன்னதிகளில் ஒன்று மணிமுத்தீசு வரர் கோயில். பராமரிப்பு இல்லாமல் கிடந்த அக்கோயிலைக் கிராம மக்களும் சில சிவனடியார்களும் கூடி உழவாரப் பணி செய்து, தமிழ் முறைப்படி குட முழுக்குச் செய்வது என்று முடிவெடுத் துள்ளனர்.

அதுவரை பாழடைந்து கிடந்த அக்கோயில் புனரமைக்கப்பட்டதும் பார்ப்பன அர்ச்சகர்களுக்குத் திடீரென்று அக்கறை பொத்துக் கொண்டு பீறிட்டது. கரையான் புற்றெடுக்கக் கருநாகம் புகு வதுபோல ஆவேசமடைந்தனர். ஓடுகாலி காஞ்சி சங்கராச்சாரி தலைமையில் ஒன்று திரண்டார்கள்.

''ஆகம விதிப்படியே கும்பாபி ஷேகம் நடக்கவேண்டும், தமிழ்முறைக் குடமுழுக்கு நடத்தக் கூடாது'' என்று தமிழ்நாடு அர்ச்சகர்கள் சங்கமும், சங்க ராச்சாரியும் தமது எதிர்ப்பைத் தெரிவித்த னர்.

தமிழக அரசின் இந்து அறநிலையத் துறை அதிகாரிகள் தலையிட்டு, உரிய அனுமதி பெறாததைக் காரணம் காட்டிக் குடமுழுக்கு நடத்தக் கூடாது என்று தடுத் ததோடு, அந்த வட்டாரப் போலீசிடம் புகார் கொடுத்தனர். அவர்களின் எதிர்ப்பை மீறிக் குடமுழுக்கு நடத்துவ தற்கு அக்கிராம மக்களும் சிவனடியார் களும் திரண்டனர். அதைத் தடுப்பதற்கு அரசு அதிகாரிகள் எத்தனித்த போது இரண்டு சிவனடியார்கள் கோயில் கோபு ரங்களில் ஏறித் தற்கொலை செய்து கொள்ளப் போவதாக எச்சரித்தனர்.

வேறு வழியின்றி அரசு அதிகாரிகள் பின்வாங்கினர். அன்று இரவே முதற்கால பூசையும், அடுத்தநாள் காலை குட முழுக்கும் தமிழ்த் திருமறை ஓதி நடத்தப் பட்டது. தொடர்ந்து சில நாட்கள் தமிழ் வழிபாட்டு முறைப்படி மண்டலப் பூசைகள் சிவனடியார்களால் நடத்தப்பட் டன. இதனால் ஆத்திரமுற்ற அர்ச்சகர்கள், சிவனடியார்கள் கோயில் கருவறைக்குள் நுழைந்து தமிழில் பூசைகள் நடத்துவதை எதிர்த்து, அரசு இந்து அறநிலையத்துறை அதிகாரிகளிடமும் போலீசிடமும் புகார் கொடுத்தனர். இதற்கிடையே தமிழ் முறைக் குடமுழுக்கு உரிமைக்குப் போராடி கோயில் கோபுரங்களில் ஏறிய இரு சிவனடியார்கள் மீது தற்கொலை முயற்சி வழக்கு பதிவு செய்யப்பட்டது.

அர்ச்சகர்களின் புகாரை ஏற்ற அரசு அதிகாரிகளும் போலீசும் கூடி, ''அற நிலையத்துறை விதிகளின்படி கோயில் கருவறைக்குள் சிவனடியார்கள் எந்தச் சூழலிலும் செல்லக் கூடாது. அர்ச்சகர்கள் மட்டுமே சென்று ஆகம விதிப்படி தவ றாமல் பூசை செய்யவேண்டும். மண்டல அபிஷேக நிறைவு நாளன்று காலையில் தமிழ்முறைப்படி சிவனடியார்களும், மாலையில் ஆகம விதிப்படி கோயில் அர்ச்சகர்களும் பூசை செய்து கொள்ள வேண்டும்'' என்று கட்டளைப் போட்டார்கள்.

இதைப் பயன்படுத்திக் கொண்ட பார்ப்பன அர்ச்சகர்கள், ''சம்ரோக் ஷனம்'' எனப்படும் தீட்டுக்கழிப்புப் பூசை நடத்தி விட்டார்கள். அதாவது பார்ப்பனரல்லாத சிவனடியார்கள் தமிழ் முறைக் குடமுழுக்கு நடத்தியது, கோயில் கருவறைக்குள் நுழைந்து தமிழ்முறை வழிபாடு, பூசைகள் செய்தது, பார்ப்ப னர்கள் கருத்துப்படி, ''சூத்திரர்கள், நீச பாஷை''யில் கடவுளுக்கு தீட்டை ஏற்படுத்திவிட்டதாகும். எனவேதான் தீட்டுக்கழித்துள்ளார்கள்.

இதற்கிடையே, ''சமஸ்கிருதத்தில் மந்திரம் சொல்லிக் கும்பாபிஷேகம் நடத்த வேண்டும். தமிழ் மந்திரம் சொல்லி நடத்தியது தவறு'' என்று கூறிய காஞ்சி மடாதிபதி சங்கராச்சாரிக்குக் கடும் கண்டனம் தெரிவித்து கருணாநிதி பேசி இருக்கிறார். ''நம்முடைய மொழி தெரியாத ஆண்டவனுக்கு நம்மிடத்தில் என்ன வேலை'' என்று கருணாநிதி நியா யமாகவே கேள்வி எழுப்பினார்.

அடுத்தநாளே, ஓடுகாலி சங்கராச்சாரி தலைமையில் மாநில பா.ஜ.க., விசுவ இந்து பரிசத், இந்து முன்னணி ராம



படிப்பகம்

www.padippakam.com

கோபாலன், பார்ப்பன அர்ச்சகர்கள் சங்கம் ஆகியோர் திரண்டு கருணாநிதியைத் தாக்கி அறிக்கை, பேட்டிகள் தந்தனர். கருணாநிதி எழுப்பிய கேள்விகளுக்குப் பதில் கூற வக்கில்லாத இந்தக் கும்பல், ''அவர் நாத்திகர் என்பதால் கடவுள் குறித்துப் பேச அவருக்கு எவ்விதத் தகுதியும் இல்லை. கடவுள் வழிபாட்டில் அவர் தலையிடத் தேவையில்லை. தெய்வீகத் தமிழ் குறித்து அவர் பேசவேண்டியதில்லை என்று தனது ''ஊத்தவாயால்'' அருளுரை வழங்கினார் சங்கராச்சாரி. ''கருணாநிதியின் நாத்திகம் கூடப் போலியானதே. இந்து மத நம்பிக்கைகளைத் தவிர, மற்ற மதங்களின் நம்பிக்கைகளை ஏற்கிற அவருடைய வாய்ஜாலம், நாத்திகவாதம் அல்ல – இந்துமத துவேஷம்'' என்கிறார், சோ.

ஓடுகாலி சங்கராச்சாரி தலைமையில் பார்ப்பனக் கும்பல் ஒன்று திரண்டு, தமிழ் முறை வழிபாட்டை எதிர்ப்பதைக் கண்டு அதிர்ச்சியுற்ற தமிழ் ஆர்வலர்கள், ஆன்மீகவாதிகள் சுமார் அறுபதுக்கும் மேற்பட்டோர் கோவை அருகே சூலூரில் கூடினர். சூலூர் குமரன் கோட்டம் சாமிநாத சுவாமி கோயிலில் தமிழ்முறைக் குடமுழுக்கு நடத்தினர். அதில் கலந்து கொண்ட முன்னாள் அறநிலையத் துறை அமைச்சர் வீரப்பன், தமிழ்க்குடிமகன், புதுவை டி.ராமச்சந்திரன் ஆகியோர் எம்.ஜி.ஆர் – ஜெயலலிதா ஆகிய பார்ப்பனத் தாசர்களுக்கு ஆதரவாகப் பேசினாலும் மற்றவர்கள் தமிழ்முறைக் குடமுழுக்கை எதிர்க்கும் பார்ப்பனருக்குக் கண்டனமும் சவாலும் விட்டுப் பல கேள்விகள் எழுப்பினர்.

''சமஸ்கிருதம் பெரும்பாலானோருக்குப் புரிவதில்லை. தமிழ், சமஸ்கிருதத்தைவிடப் புனிதம் குறைந்ததில்லை. கும்பாபிஷேகத்தை தமிழில் நடத்துவதால் குறைபாடு ஒன்றுமில்லை. பிராமணர்கள் சமஸ்கிருதத்தை வலியுறுத்துவதற்குக் காரணம் அவர்களுக்குத்தான் அது புரியும் என்பதும், அவர்களது வேலைகளையும், வருமானத்தையும் காப்பாற்றவும்தான். சமஸ்கிருதத்தைவிடத் தமிழ் புராதனமானது. வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் பல கோயில்களில் தமிழ் மந்திரங்கள் ஓதி, குடமுழுக்கு, வழிபாடுகள் நடைபெற்றுள்ளன. அதனால் அக்கோயில்களுக்குக் கேடு எதுவும் நிகழ்ந்து விடவில்லை'' என்று விளக்கினர்.

இத்தனைக்குப் பிறகும், காஞ்சி ஓடுகாலி தனது சாக்கடை மொழியால் தமிழர்கள் அனைவருக்கும் எதிரான அவதூறுகளையும், பொய்களையும் அவிழ்த்து விட்டுள்ளார்: ''சைவத்திலே ஸ்தோத்திரம், சாஸ்திரம் என்று இரண்டு இருக்கின்றன. தேவாரம் முதலிய தமிழ் ஸ்தோத்திரங்களைப் பாடி கடவுள்களிடம் வேண்டி வழிபடலாம். ஆனால் அவை அபிஷேகமும், உற்சவங்கள், கிரியைகள், கர்மாக்கள் என்று பலவித ரிச்சுவல்களை (சடங்குகள்) செய்வதற்கானவை அல்ல. சாஸ்திரங்கள் செய்வதற்கான சிவாகமங்கள் சமஸ்கிருதத்தில்தான் உள்ளன. நாயன்மார்கள்கூட கோயில்களில் போய் ஸ்வாமியைத் தொட்டு அர்ச்சனைகள், அபிஷேகங்கள் செய்தார்கள் என்று சைவ பாரம்பரியத்திலேயே கிடையாது.''



**கோபுரத்திலிருந்து தற்கொலை செய்வதாக எச்சரித்த சிவனடியார்கள்.**

'' இங்கே பிரச்சினை மொழி அல்ல. சிவாகம வழிமுறையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பது முக்கியமே தவிர, அந்தப் பாஷை புரிந்ததா புரியவில்லையா என்பது வீட்டுக்குள் பேச வேண்டியது. ஸ்வாமிகிட்ட அதெல்லாம் பேசக் கூடாது. தமிழ் பற்றாளர்கள் என்ற பெயரில் நாத்திகம் நடத்தும் அரசியல்வாதிகளால்தான் பிரச்சினை தொடர்கிறது. கருணாநிதிக்கு ஈக்வல், நான் கிடையாது. நான் இருக்கிற இடத்துக்கு அவர் வரமுடியாது. அவர் அவர்தான்; நான் நான்தான்'' என்று கூறி அந்த ஓடுகாலி எக்காளமாகச் சிரித்திருக்கிறார்.

— இந்த ஓடுகாலி தான் சாதி வெறியன் என்பதை இதன் மூலம் வெளிப்படுத்தி உள்ளார்.

தொன்றுதொட்டுக் கடைப்பிடித்து வரும் ஆன்மீக மரபை மாற்றக் கூடாது, ஆன்மீக சாஸ்திரப்படிதான் எல்லாம் நடக்க வேண்டும் என்கிறார். தண்டத்தை வீசிவிட்டுத் தலைக் காவிரிக்கு இரவோடு இரவாக ஓடி ஒளிந்து கொண்டதும், அதற்கு எவ்வித விளக்கமும், தீட்டும் கழிக்காமல் திரும்பவும் மடாதிபதி – துறவி என்று ஆனதும் சாஸ்திரப்படி ஏற்கக் கூடியதா? பார்ப்பான் கடல்கடந்து செல்லக்கூடாது, சந்நியாசி – துறவி என்பவர் ஆதிசங்கரனைப்போல எங்கு போனாலும் நடந்தே போகவேண்டும், கார் – விமானம் போன்ற நவீன வாகனங்களில் ஏறக்கூடாது என்ற நியதியை, மரபை மீறி குளுகுளு கார், விமானம், ரயில் என்று ஊர்சுற்றி – உல்லாச – ஊதாரி வாழ்க்கை நடத்துகிறாரே அது பாரம்பரியத்தைக் கைவிடுவதில்லையா?

ஆன்மீகப் பிரச்சாரமும், வேதபாடசாலைகளும் நடத்த வேண்டிய சங்கராச்சாரிகள், அரசியல் – தொழில் தரகுவேலைகள் செய்கின்றனர்; நவீனக் கல்வி வியாபாரங்கள், கொள்ளை இலாபமடிக்கும் மருத்துவமனைகள் நடத்துகின்றனர்; இவற்றின் அதிகாரிகள் – நிர்வாகிகளாகப் பார்பனர்களை மட்டுமே நியமிப்பதோடு, சாதி அடிப்படையில் மாணவர் தங்கும் விடுதிகளில் தீண்டாமை பாராட்டுவது துறவிகள் செய்யக்கூடிய வேலையா, அல்லது சுயநலச் சாதிவெறியர்களின் செயல்களா?

குடமுழுக்கு, உற்சவங்கள், கிரியைகள், கர்மாக்கள் தமிழில் செய்தால் கேடுவிளையும், நன்மை – பலன் ஏற்படாது என்கிறார்கள். சில ஆண்டுகளுக்கு முன்பு சமஸ்கிருதத்தில்தான், ஆச்சார முறைப்படிதான் தஞ்சைப் பெரிய கோயிலில் குடமுழுக்கு, பூசைகள் நடத்தினர். அவை முடிவதற்குள் தீ விபத்து, பெருநாசம் ஏற்பட்டுப் பல பக்தர்களும் கருகி மாண்டனர். கடந்த ஆண்டு, சோளிங்கர் கோயில் விழாவில் இதே சங்கராச்சாரி பூசை செய்து துவக்கி வைத்த தேர் குடை கவிழ்ந்து பார்ப்பன அர்ச்சகரே தேர்ச்சக்கரத்தில் சிக்கி மாண்டு போனார்.

கோயில்களில் கொள்ளைகள் நடப்பதும், கடவுள் சிலைகளே களவாடப்படுவதும் நடக்கின்றனவே அவற்றுக்கு என்ன காரணம்?

''பழைமை வாய்ந்த, பாரம்பரிய மரபுகளைப் பின்பற்றாமல் மொழியை மாற்றுவதால், ஆகம விதிமுறைகள் மீறப்படுவதால் தீமைவரும்'' என்று இந்தப் பார்ப்பனக் கூட்டம் சாபமிடுவதைப் போல பேசுகிறது. இவர்களின் முந்தைய தலைமுறைக்கு எதிராகத்தான் பெரியார், அம்பேத்கர் போன்ற சீர்திருத்தவாதிகள் போராட்டங்கள் நடத்திப் பார்ப்பனரல்லாதவர், குறிப்பாக, சூத்திரர்களும், பஞ்சமர்களும் கோயிலுக்குள் நுழையக்கூடாது என்ற தடையை நீக்கச் செய்தனர்.

அதேபோல டாக்டர் முத்துலட்சுமி போன்றவர்களின் முயற்சியால் தேவதாசி முறை ஒழிக்கப்பட்டது. இவை இரண்டும் சாஸ்திரங்கள், ஆகம விதிமுறைகளை மீறிச் செய்தவைதாம். சாஸ்திர ஆகம விதிகளை அப்படியே கடைப்பிடிப்பது என்றால் சூத்திரர்களும் பஞ்சமர்களும் கோயிலுக்குள் நுழைவதைத் தடை செய்ய வேண்டும்; தேவதாசி நிலையை



படிப்பகம்

www.padippakam.com

ஏற்படுத்த வேண்டும். இதுதான் ஓடுகாலி சங்கராச்சாரி, சோ முதலிய பார்ப்பனர்களின் வாதமா?

பார்ப்பனரல்லாதார் கருவறைக்குள் நுழைவதால் என்ன கேடு நேரும்? பார்ப்பனரின் சூழ்ச்சி – தந்திரம் கருவறை மர்மம் அம்பலப்பட்டுப் போகும்; அவர்களின் சுயநலனுக்குத் தான் கேடுநேரும்.

இங்கே பிரச்சினை அதுவல்ல. தமிழை நீச மொழி என்றும், கருவறைக்குள் இம்மொழி ஒலிப்பதற்குக் கூட அருகதையற்றது என்றும், தமிழன் தீண்டத்தகாதவன், கருவறைக்குள் நுழையவோ, ''கடவுள் சிலை''யைத் தொடவோ தகுதியில்லாதவன் என்றும் ஒதுக்கப்படுகிறார்கள். அதாவது தமிழைக் கேட்டால் கேடு, தமிழன் தொட்டால் தீட்டு, அவன் கணணில் பட்டால் பாவம் என்று ஒதுக்கப்படுகிறார்கள். அதைச் செய்வதும் இதனால் ஆதாயம் அடைவதும் பார்ப்பனர்கள் மட்டும்தான். இப்படிச் செய்து கொண்டே, சமுதாயத்தில் மிகச் சிறுபான்மையினரான இந்தப் பார்ப்பனர்கள், தம் பலத்தைக் கூட்டிக் கொள்வதற்காக முசுலீம்களுக்கும், நாத்திகர்களுக்கும் எதிராக இந்துக்கள், ஆத்திகர்கள் என்ற பெயரில் தம் பின்னே ஒன்று சேரும்படி பார்ப்பனர் அல்லாதவரை அழைக்கின்றனர்.

''மந்திரங்களின் அர்த்தத்தை விட அவற்றை உச்சாடனம் செய்யும்போது எழும் ஒலியின் தாக்கம்தான் முக்கியம். பண்டைய இந்துக் கோயில்களைக் கட்ட பிரபஞ்ச சக்தியைப் பிடித்து வைத்து கற்களைத்தான் பயன்படுத்துகின்றார்கள். கும்பாபிஷேகத்தின்போது ஓதப்படும் மந்திரங்கள் அத்தகைய சக்திகள் கோயிலில் நிரந்தரமாகக் குடியிருக்க உதவும்'' என்று ஓடுகாலி சங்கராச்சாரி புதுக்கதை விடுகிறார்.

இங்கே ''பண்டைய இந்துக் கோயில்'' என்பதே ஒரு வரலாற்றுப் புரட்டாகும். இந்து என்ற ஒன்றே இந்த நாட்டில் இருந்தது கிடையாது. வெளியிலிருந்து வந்த வேற்றுமதத்தினர்தாம், சில நூற்றாண்டுகளுக்குப் பின்னர்தாம் சிந்து நதிக்கு இந்தப்பக்கம் வாழ்ந்த மக்களைப் பிரித்து அப்படிப் பெயரிட்டு அழைத்தனர். ஆனால் இவர்கள் அனைவரும் ஒரே மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்ததில்லை. சைவம், வைணவம் முதலிய ஆறு மதங்களாக வேறுபட்டு இருந்தார்கள். இம்மதங்களில் இருந்த தீண்டாமை முதலிய கொடுமைகளை எதிர்த்த மக்கள் பௌத்த, சமண மதங்களிடம் தஞ்சமடைந்தனர். பார்ப்பனீயச் சனாதன மதம் வீழ்ச்சியடைந்தது. பிறகு வந்த சங்கராச்சாரி முதலிய பார்ப்பனர்

**சூத்திர – பஞ்சம சாதி மக்களும் பெருமளவில் இடைவிடாது கருவறை நுழைவுப் போராட்டங்களை நடத்தி நவீன அசுரர்கள், அரக்கர்களாகத் தமிழர்கள் மாறுவதுதான் அவசியமானது.**

களின் சதியால் ஆட்சியாளர்கள் சமஸ்கிருதச் சடங்கு சாஸ்திரங்களைக் கோயில்களில் புகுத்தினர். இதனால் தமிழ்முறை வழிபாடுகள் பின்னுக்குத் தள்ளப்பட்டன. இது நடந்த ஏழாம் நூற்றாண்டுக்கு முன்பு வரை தமிழ் முறை வழிபாடே தமிழக – தென்னகக் கோயில்களில் பின்பற்றப்பட்டு வந்தது.

இந்த உண்மையைச் சுட்டிக்காட்டி ''தமிழ்நாட்டுக் கோயில்களில் பண்டு தமிழ் வழிபாட்டு முறையிலிருந்து பிறகு அது வடமொழி வழிபாட்டு முறைக்கு மாற்றப்பட்டதா? அல்லது இதற்கு மாறான முறையில் அது நிகழ்ந்ததா?'' என்பது உட்பட 17 கேள்விகளை காஞ்சி சங்கராச்சாரியிடம் பேராசிரியர் மா.நன்னன் எழுப்பியுள்ளார். அவற்றுக்குப் பதில் கூற வக்கற்ற ஓடுகாலி வெறும் சவடால் அடிக்கிறார்.

சங்கராச்சாரி சொல்வதற்கெல்லாம் ஆதாரம் எதுவும் கிடையாது. ஆதாரமில்லாத இத்தகைய கற்பிதங்கள் எல்லாவற்றையும் நம்பிக்கை, மரபு, ஐதீகம் என்று கூறி, அதை மறுக்கும் உரிமை, தகுதி யாருக்கும் கிடையாது என்று வெறியோடு வாதிடுகிறார்கள். நம்பிக்கைகளில் எவை அறிவியல் பூர்வமானவை, எவை மூட நம்பிக்கைகள் என்று கேட்பதற்கு உரிமையில்லையா? அதற்குத் தகுதி வேண்டுமா? உண்மையில் இந்தத் தடையென்பதே ஒரு பார்ப்பனச் சூழ்ச்சிதான். தமது பித்தலாட்டங்கள் அம்பலப்பட்டுவிடும் என்கிற பயத்தில் போடப்படும் மூடுதிரை.

ஆனால், இப்போது தமிழ்முறை வழிபாட்டுக்காக ஆதரவு தெரிவிக்கும் பார்ப்பனரல்லாத மடாதிபதிகள், ஆதீனங்கள், சன்னிதானங்களில் பலரும், தமது சுய நலனுக்காக இத்தகைய நம்பிக்கைகள், மரபு, ஐதீகம் ஆகியவற்றை ஏற்று, அவர்களும் ஒரு மூடுதிரை போட்டுக் கொள்கிறார்கள். சமஸ்கிருத மந்திரங்கள் ஓதுவதும், தீண்டாமை பாராட்டுவதும் செய்கிறார்கள். பார்ப்பனர் அல்லாதவர்களுக்குள்ளும் ஒரு குறிப்பிட்ட மேல் சாதியினர் மட்டுமே, அதிலும் குறிப்பாக, சைவப் பிள்ளைமார் மட்டுமே மடாதிபதிகள், ஆதீனங்களாகவும் வந்து கோயில் சொத்துக்களை ஆண்டு அனுபவிக்கிறார்கள். பிற சாதியினர், தமக்குப் போட்டியாக வந்துவிடக் கூடாது என்பதற்காக பார்ப்பனர்கள் மேற்கொள்ளும் எல்லா தந்திரங்களையும் சூழ்ச்சிகளையும் கடைப்பிடிக்கிறார்கள்.

ஆகவே, தமிழ்முறை வழிபாட்டு உரிமைக்கான போராட்டம், தீண்டாமைக்கு எதிரானதாகவும் இருக்க வேண்டும். கோயில்களில் தீண்டாமையை ஒழித்து, தமிழ் வழிபாட்டு உரிமையை நிலைநாட்ட வேண்டுமானால், அதற்கான போராட்டத்தைப் பார்ப்பனர்களுக்கு எதிராக மட்டுமல்ல, அவர்களுக்கு முற்றிலும் சாதகமாக உள்ள அரசியல் சட்டத்தையும் எதிர்த்துப் போராட வேண்டும்.

1970-களில் கருவறை நுழைவுப் போராட்டம் நடத்தப் போவதாகப் பெரியார் ஈ.வெ.ரா அறிவித்தார். அப்போதிருந்த தி.மு.க ஆட்சியினர், அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகும் சட்டத்தை நிறைவேற்றியது. இதற்கு எதிராக சங்கராச்சாரியின் தூண்டுதலால் பார்ப்பன அர்ச்சகர்கள் உச்சநீதி மன்றத்தில் வழக்குப் போட்டனர். உச்ச நீதி மன்றமோ அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகும் சட்டம் அரசியல் சட்டத்தின் 25(1)வது பிரிவின் கீழ் செல்லுபடியாகாது என்று தீர்ப்பளித்தது.

அதன் பிறகு, கோயில்களில் பார்ப்பன ஆதிக்கமும் சாதி வெறியும், தீண்டாமையும் சட்டபூர்வ அங்கீகாரத்துடன் நீடிக்கிறது. சிதம்பரம் கோயில் சிற்றம்பல மேடையில் நின்று தமிழில் பாடிய சிவனடியார், கோயில் தீட்சிதர்களால் அடித்து விரட்டப்பட்டிருக்கிறார். புதுவையில் தமிழர் இசைக்கருவிகளை முழக்கி, வழிபாடு செய்த கலைஞர்கள் அடித்து விரட்டப்பட்டுள்ளனர். 1991-இல் சிறீரங்கம் கோயில் கருவறைக்குள் நுழைந்த மக்கள் கலை இலக்கியக் கழகத்தினரை, கோயில் குண்டர்களான அர்ச்சகர்கள் தாக்கினர். பின்னர் கருவறையில் தீட்டுப்பட்டு விட்டதாகக் கூறி ''சம்ப்ரோக்ஷனம்'' (தீட்டுக்கழிப்பு) நடத்தினர்.

அரசியல் சட்டமும், அடுத்தடுத்து வரும் ஆட்சியாளர்களும் தரும் அரவணைப்பினால்தான் சங்கராச்சாரி, சோ போன்றவர்களின் பார்ப்பனத் திமிர்த்தனம் இந்த அளவுக்கு வளர்ந்துள்ளது. ஆகவே, தமிழ்முறைக் குடமுழுக்குகள் மட்டும் போதாது. சூத்திர – பஞ்சம சாதி மக்களும் பெருமளவில் இடைவிடாது கருவறை நுழைவுப் போராட்டங்களை நடத்தி நவீன அசுரர்கள், அரக்கர்களாகத் தமிழர்கள் மாறுவதுதான் அவசியமானது.

● கா.மு



படிப்பகம்

www.padippakam.com

# இனிய நேரம்: மாநகரப் பண்பலையா? மத்தியானத்து வக்கிரமா?

மத்தியானம் ஒரு ரெண்டு மணியிருக்கும். ''வணக்கம் இனிய நேரம்'' என்று மாநகரப் பண்பலை வரிசையிலிருந்து ஒரு குரல் கேட்க, சரி கொஞ்ச நேரம் ரேடியோ பக்கம் ஒதுங்குவோமே என்று செவி மடுக்க ஆரம்பித்தேன். அடுத்த ஒருமணி நேரமும் ''என் இதயம் என்னிடம் இல்லை என்பார்களே'' அதுபோல என் மூளை என் வசம் இல்லை. மாநகரப் பண்பலை முதல் அலைவரிசையின் இனிய நேரம் என்ற நிகழ்ச்சியின் சிறப்பு அது.

நிகழ்ச்சியை அமைத்து வழங்குபவர்களில் ஒருவரான ரமா இப்படிச் சொல்கிறார், ''சார் இன்ஜினியரிங் காலேஜ் கவுன்சிலிங் போனேன்.'' உடனே பதிலுக்கு சர்க்கரை முருகேசப் பாண்டியன் (இவரும் நிகழ்ச்சியை அமைத்து வழங்குபவர்களில் ஒருவர்) ''என்னங்க ரமா! நீங்களுமா? முதியோருக்கெல்லாம் கிடையாதே'' இதைக் கேட்டு உங்களுக்கே சிரிப்பு வரவேண்டும், வரவில்லையா, பரவாயில்லை ரமாவே சிரித்துக் கொள்வார். இப்படியே சிறிது அரட்டை முடிந்தவுடன் சர்க்கரை முருகேசப் பாண்டியன் வாயிலிருந்து ஒரு தத்துவமும், தகவலும் பிறக்கிறது.

''அதாவது பெற்றோர்கள் எல்லோரும் ஒரே கோர்ஸை நாடிப் போறாங்க. யாரும் படிக்காத கோர்ஸுக்குப் போனா தானே நெருக்கடி இருக்காது. அதுக்குத்தான் எதையும் தெளிவா சிந்திக்கணும். அப்புறம் நிகழ்ச்சியில் அடுத்து ஒரு திரைப்பாடல் கேட்போமா'' நிகழ்ச்சியில் தெளிவாக இருக்கும் ரமா ''சார் தேவா சார் பாட்டு ஒண்ணு'', ''என்ன பாட்டு தெரியுமா?''

''சேத்து மடை திறந்து செவ்வாழ மீன் பிடிக்க
தாவிக் குதித்த மீனு தாவணிக்குள்ள விழுந்துவிட''

தெளிவான சிந்தனைக்கும் இந்தப் பாடலுக்கும் என்ன சம்பந்தம்? ஒரே கோர்ஸில் மாணவர்கள் போய் விழ யார் காரணம்? என்றெல்லாம் நீங்கள் சிந்திப்பவரா? உஷ். உடனே உங்கள் யோசனையை நிறுத்துங்கள். இல்லையேல் உங்களால் இனிய நேரத்தை ஒரு மணி நேரம் ரசிக்க முடியாது.

அடுத்து ஒரு நேயர் கடிதத்தின் மூலம் வானொலி வழி ஒரு அரிய தகவல் ரமா எழுத்து கூட்டிப் படிக்கிறார். ''சார் வெள்ளிக் கொலுசு கறுப்பா ஆயிடுது பாத்தீங்களா அதை புளிக் கரைசல்ல போட்டா பளீர்னு ஆயிடும்னு ஒரு நேயர் எழுதியிருக்கிறார்.'' அடுத்த சில நிமிடங்களிலேயே ''ஆமாம் சார்! இந்த நேயர் சொன்ன மாதிரியே போட்டுப் பார்த்தேன். என் கொலுசுதானாங்குற அளவுக்குப் பளீர்ங்குது'' என்கிறார், அடுத்த தொலைபேசி நேயர்.

வீட்டில் குழம்பு வைக்க புளி கரைக்க முடியாத குடும்பமா? நீங்கள் இனிய நேரத்தில் தப்பித்தவறி அலைவரிசைக்குள் நுழைந்து அரசாங்கம், விலைவாசி பற்றிப் பேச ஆரம்பித்தால் போதும் ''நேயரே இப்படியெல்லாம் தாக்கிப் பேசக்கூடாது. காரமா பேசி யாரையும் புண்படுத்தக் கூடாது என்று நீங்கள் பேசிக் கொண்டிருக்கும்போதே சர்க்கரை முருகேசப் பாண்டியன் எறும்பாய் ஊர்ந்து உங்களை தொலைபேசி இணைப்பிலிருந்தே துண்டித்து விடுவார்.

இப்படி வரிசையாக அறுவை ஜோக், நேயர் கடிதம், நேயர் கவிதை, தகவல்கள், விடுகதை என்று ஒரு வாரப்பத்திரிகையில் உள்ள மசாலாத்தன்மை குறையாமல் கேட்பவர்கள் மூளையில் தொடர்ந்து குப்பையைத் தள்ளிக் கொண்டிருப்பதுதான் இனிய நேரத்தின் இனிய நோக்கம்.

நிகழ்ச்சியைக் கேட்பவர்களுக்குத்தான் அறிவு தேவையில்லை என்று நீங்கள் நினைத்தால் தவறு. நிகழ்ச்சி நடத்துபவர்களுக்கும் அறிவு தேவையில்லை என்று பறைசாற்றுகிறார் நிகழ்ச்சியை நடத்தும் சர்க்கரை முருகேசப்பாண்டியன். ஒருநாள் ஒரு கைத்தறி நெசவுத் தொழிலாளரிடம் ''ஒரு நாளைக்கு எத்தனை புடவை நெய்வீங்க?'' என்று ச.மு. பாண்டியன் கேட்க, தொழிலாளிக்குத் தூக்கி வாரிப் போட்டது.

இன்னொரு நாள் பெண்கள் பேருந்தில் வரும்போது ஆண்களால் இடிபட்டு ஈவ்டீசிங் கொடுமைக்கு ஆளாவதைப் பற்றி ரமா உருக்கமாக விவரிக்க ''அதுக்குத்தான் நம்ப பொம்பளைங்க என்ன பண்ணனும் பேசாம ஆட்டோவில வேலைக்கு வந்துடணும்'' என்கிறார் ச.மு. பாண்டியன். வேலைக்குப் போகும் பெண்கள் எல்லாம் மயிலாப்பூர் பண்பலையில் பணியாற்றும் மாமிகள் என்ற நினைப்பு பாண்டியனுக்கு.



சரி. டி.வி. போல நிகழ்ச்சி ஆபாசமில்லாமல் இருக்கிறது என்று நினைப்பவரா நீங்கள், ''பசங்க திருந்த வே மாட்டாங்க'' என்று சொல்லிவிட்டு அடுத்து நிகழ்ச்சியில் ஒளிபரப்பும் பாடல் ''வை ராஜாவ, வலது கையை வை'' என்ற பஞ்ச தந்திரம் பாடல். இந்த முரண் பாட்டைவிடப் பெரிய ஆபாசம் வேறு என்ன?



படிப்பகம்

www.padippakam.com



அது மட்டுமா நாள் முழுதும் பாரம் இழுத்து விட்டு மதியம் வீட்டுக்குப் போய் சாப்பிட நேரமும், வழியுமின்றி தேநீர்க் கடைசில் ஒரு பொறையும், டீயும் குடிக்கும்போது இனிய நேரத்தில் விளக்கப்படும் நெய்ப்புலவும், தொந்தியைக் குறைக்க உதவும் பப்பாளிக் கூட்டையும் கேட்டால் அது உங்கள் மீது ஏவப்படும் பண்பாடற்ற அலை என்பது அனுபவத்தில் புரியும்.

அறுவை ஜோக் என்ற பெயரில் உழைக்கும் மக்களைக் கேவலப்படுத்தவும் செய்கிறது. உதாரணத்திற்கு ஒருநாள் ஒலிபரப்பில் வந்த அறுவை ஜோக் இது.

**''முதலாளி:** செக்யூரிட்டி வேலை கேக்குறியே உனக்கு என்ன தகுதி?

**தொழிலாளி:** ஒரு சின்ன சத்தம் கேட்டாலும் முழிச்சிக் குவேன்!''

இப்படி உழைக்கும் மக்களை எள்ளி நகையாட அனுமதிக்கும் இனிய நேரம், ஆசிரியர்கள், வழக்கறிஞர்கள், நீதிபதி என்று இவர்களைப் பற்றி யாராவது ஜோக் சொல்ல ஆரம்பித்தால் 'நேயரே இது வேண்டாம்' என்று சடாரென முழித்துக் கொள்கிறார் ச.மு. பாண்டியன்.

புதிய பொருளாதாரக் கொள்கையின் விளைவாக வேலை வாய்ப்பிழந்து கைத்தொழில், நலிவுற்ற டெய்லர்கள், தேநீர்க் கடை ஊழியர்கள், தறி நெய்யும் பெண்கள், இவர்கள் கை தான் வேலை செய்கிறதே, காதைக் கொஞ்சம் கொடுத்து வைப்போமே என்று மாநகர அலைவரிசையை நாடினால் அவர்கள் தங்களுக்கான பிரச்சினையைப் பற்றிச் சிந்திக்கவிடாமல் தலையில் தொடர்ந்து குப்பையைத் தள்ளிக் கொண்டிருப்பதுதான் இனிய நேரத்தின் வர்த்தக நோக்கம்.

சமூகத்தில் வேலை வெட்டி இல்லாத, உற்பத்தியில் ஈடுபடாத உபயோகமற்ற ஒரு சிறு கும்பல் இதனை ஊடகமாகப் பயன்படுத்தி, உழைக்கும் மக்கள் மீது சோம்பேறி வர்க்கத்தின் கலாச்சாரத்தைத் திணிப்பதுதான் இனிய நேரத்தின் பண்பாட்டுப் பயங்கரம்.

ஒருபுறம் மக்களது சிந்தனையை மழுங்கடிப்பது, மறுபுறம் வர்த்தக நோக்கில் பேஜர் நிறுவனங்களுக்கு அலைவரிசைகளை வாடகைக்கு விடுவது என்பதும் பண்பலைகளின் கேந்திரமான நோக்கங்கள்.

ஒரு காலத்தில் வானொலி என்பது அரசுக் கொள்கைகளை அறிவிக்கவும், சிறிது பொழுதுபோக்க உதவும் ஊடகமாகவும் இருந்தது. இன்றோ, ''காட்சி ஊடகங்களோடு போட்டி போட்டு வர்த்தக இலக்கை அடைய இன்னும் சீரழிப்பேன், எத்தனை அலைவரிசை பந்தயம்'' என்கிறது ஆளும் வர்க்கம்.

பழைய காலத்தில் பண்ணையார்கள், பெரும்புள்ளிகள் ஊரில் வேலை வெட்டி இல்லாதவன் எங்கே நமக்கு எதிராகச் சிந்தித்து விடப் போகிறானோ என்று காந்தி பூங்கா, கண்கவர் பூங்கா எனக் கட்டிவிட்டது போல, வேலை வெட்டி இல்லாதவர்களின் மண்டையைக் காலியாய் வைப்பது ஆபத்து என்ற நோக்கில் பண்பலைகளின் இனிய நேரங்கள் உருவாக்கப்படுகின்றன.

''என்ன சாப்டீங்க? எப்படி சாப்டீங்க?'' என்பதற்கு மேல் ''மேலே பேசுங்க'' என்றால் விக்கித்து நிற்கிறது சோம்பேறி வர்க்கம்.

இது ஒன்றும் புதிதல்ல, அக்கிரகாரத்துத் திண்ணையில் ஒரு திண்ணிச் செம்பை வைத்துக் கொண்டு, வெத்தலைப் பாக்கு டப்பியுடன் உட்கார்ந்திருக்கும் சோம்பேறி அம்பிகள், தெருவில் வேலைக்குப் போகிறவர்களை வலியக் கூப்பிட்டு ''ஏய் மணி என்ன வேலைக்கா, ரொம்பப் பொறுப்பா போற'' என்று வம்பு பேசும் காட்சியை நீங்கள் பார்த்ததுண்டா? அலைவரிசையில் அதிநவீனக் கருவிகளுடன் அப்படியொரு பரந்த அக்கிரகாரத்துத் திண்ணையைத் திருத்தமாக வடிவமைக்கிறது இனிய நேரம். புரிகிறதா, இனிய நேரம் யாருக்கென்பது?

● **துரை. சண்முகம்**


# செப்-11 அமெரிக்கப் பயங்கரவாதத்தை நினைவு கூர்வோம்



புதிய கலாச்சாரம்
டிசம்பர் 2001
சிறப்பிதழ்

விலை: ரூ. 10.00
அஞ்சல் செலவு
ரூ. 5.00

''ஜனநாயகம் ஒழித்து மறுபடியும் மன்னராட்சி

பாராளுமன்றம் ஒழித்து இராணுவச் சர்வாதிகாரம்

மதச்சார்பற்ற ஆட்சி ஒழித்து மதவெறி ஆட்சி

— இப்படி உலகம் முழுவதும் ஜனநாயக விரோத ஆட்சியை உருவாக்கி உலக ரவுடியாக வலம் வரும் முதல் எதிரி அமெரிக்கா''

*சிறப்பிதழின் உள்ளே:*

- அமெரிக்கப் பயங்கரவாத வரலாறு
- அமெரிக்கா நடத்திய ஆக்கிரமிப்புப் போர்களின் பட்டியல்
- உலக பயங்கரவாதியின் குகைக்குள்ளே: அமெரிக்கச் சமூகம் (சொர்க்கம்) பற்றிய மாயைகளை அகற்றும் 10 கட்டுரைகள்.
- அமெரிக்கப் பயங்கரவாதப்படை: சி.ஐ.ஏ.!
- அமெரிக்காவின் ஆப்கன் போர்: 20 ஆண்டு வரலாறு.
- இசுலாமியச் சர்வதேசீயம்: ஒரு மாயமான்.




படிப்பகம்

www.padippakam.com

நல்லகாமன் கதை என்பது அசப்பில் நல்லதங்காள் கதை என்பது போல உங்கள் காதில் ஒலிக்கலாம். இரண்டு கதைகளுக்குமிடையே ஒற்றுமையும் உண்டு; வேற்றுமையும் உண்டு. வறுமையின் காரணமாக மானமிழந்து வாழச் சம்மதிக்காத நல்லதங்காள் தற்கொலை செய்து கொண்டாள். நல்லகாமனும் மானமிழந்து வாழச் சம்மதிக்கவில்லை. போலீசு அராஜகத்திற்கெதிராக இந்தக் கணம் வரை போராடிக் கொண்டிருக்கிறார் இந்த முன்னாள் இராணுவ வீரர்.

அப்பாவி மக்கள் போலீசால் தாக்கப்படுவதொன்றும் அதிசயமில்லை. ஆனால் அவ்வாறு தாக்கப்பட்டவர்கள் போலீசுக்கு எதிராகப் போராடுவது அதிசயம். அதிலும் மனித உரிமை அமைப்புக்கள், கட்சிகள் போன்ற யாருடைய ஆதரவுமின்றி தன்னந்தனியாக ஒரு மனிதன் போலீசை எதிர்த்து நின்று இருபது ஆண்டுகளாகப் போராடுவது பேரதிசயம்.

இது அத்தகையதொரு அதிசயத்தின் கதை. அநீதிக்குத் தலை வணங்காத தன்மான உணர்வின் கதை. அதிகாரத் திமிருக்கு அடிபணியாத நெஞ்சுரத்தின் கதை. ஒரு உண்மை மனிதனின் கதை.

●●●

அடிப்படையில் இது ஒரு சாதாரண சிவில் வழக்கு. மதுரை மாவட்டம் வாடிப்பட்டியில் ஆசிரியையாகப் பணிபுரிந்து வந்த நல்லகாமனின் மனைவி சீனியம்மாள், அதே ஊரில் சும்மா கிடந்த ஒரு வீட்டை 5,000 ரூபாய்க்கு ஒத்திக்கு வாங்கி, உரிமையாளரின் அனுமதியுடன் ரூ. 4,000 வரை செலவு செய்து பழுது பார்த்து, கழிப்பறை போன்றவற்றைக் கட்டி 1976 முதல் அங்கே வசித்து வந்தார்.

வீட்டைக் காலி செய்யச் சொன்னார் அதன் உரிமையாளர். காலி செய்வதென்றால் ஒத்திப் பணத்தைத் திருப்பித் தர வேண்டும் என்பது ஊருக்கே பொருந்தும் நியாயம். ஆனால் இது போலீசுக்காரனுக்குப் பொருந்துமா? ''பணம் கொடுக்க முடியாது. காலி செய்'' என்றார் வீட்டின் உரிமையாளரான பைரவ் சிங் என்ற உதவி சப்-இன்ஸ்பெக்டர் (ஆயுதப்படைப் பிரிவு)

### காக்கிச்சட்டையின் கட்டப்பஞ்சாயத்து!

வாடிப்பட்டி போலீசு நிலையம் மூலம் பலவிதமாக மிரட்டியும் நல்லகாமன் பணியவில்லை.

1.2.82 காலை நல்லகாமனை போலீசு நிலையத்துக்குக் கொண்டு வந்த வாடிப்பட்டி எஸ்.ஐ பிரேம்குமார் ''உடனே வீட்டைக் காலி செய்'' என்று மிரட்டினார். பணத்தைக் கொடுக்கச் சொல்லுங்கள் காலி செய்கிறேன் என்றார் நல்லகாமன்.

''உன்னைக் கைது செய்கிறேன்'' என்றார் பிரேம்குமார். இதை எதிர்பார்த்து முன்ஜாமீன் பெற்றிருந்த நல்லகாமன் நீதிமன்ற உத்தரவை நீட்டினார். அதைச் சிறிதும் சட்டை செய்யாத பிரேம்குமார் நல்லகாமனின் ஆடைகளை அவிழ்த்து அவரை உள்ளாடையுடன் நிறுத்திவிட்டு, பெண் காவலர்களை அனுப்பி நல்லகாமனின் மனைவியையும் பள்ளிக்கூடத்திலிருந்து ஸ்டேசனுக்குக் கொண்டு வந்தார். ''பணம் தராமல் காலி செய்ய முடியாது'' என்று சீனியம்மாளும் பதில் சொல்லவே பிரேம்குமாருக்கு வெறி பிடித்தது.

அவருடைய சேலை முந்தானையைப் பிரேம்குமார் இழுக்க, குறுக்கே வந்து தடுத்தார் நல்லகாமன். அந்தக் கணமே தொடங்கியது மிருகத்தனமான தாக்குதல். நல்லகாமனுக்குக் கைவிலங்கும், காலில் சங்கிலியும் மாட்டி, அதனை மற்ற போலீசார் பிடித்துக் கொள்ள துப்பாக்கிக் கட்டையால் கண்மூடித்தனமாகத் தாக்கப்பட்டார் நல்லகாமன்.

தனது பெற்றோரை ஸ்டேசனில் வைத்து அடிக்கிறார்கள் என்று கேள்விப்பட்டு ஸ்டேசனுக்குத் தேடிவந்து பிரேம்குமாரின் காலில் விழுந்து கெஞ்சினார் நல்லகாமனின் மகன். மகனுக்கும் கைவிலங்கு, சித்திரவதை.

### ரத்தயாத்திரை

உடம்பெல்லாம் ரத்தம் வழிய நல்லகாமனைச் சங்கிலியால் பிணைத்து அவருடைய மனைவி, மகன் ஆகியோருடன் கடை வீதியில் ஊர்வலமாக இழுத்துச் சென்றார் பிரேம்குமார். பிரேம்குமாரின் கையில் தோட்டாக்கள் நிரப்பப்பட்ட ரிவால்வர்; கூடவே துப்பாக்கி ஏந்திய போலீசு. தெருவெல்லாம் நல்லகாமன் மீது விழுந்த அடியில் லத்திக் கம்புகள் உடைந்தன. ஆத்திரமும் அச்சமும் கலந்த நிலையில் ஊரே இதைப்பார்த்துப் பதறியது.

இந்த ஊர்வலம் முடிந்து மீண்டும் போலீசு நிலையம். மீண்டும் இரண்டாவது சுற்றுத் தாக்குதல் கடைசியாகப் பொய்வழக்கு. ''நல்லகாமனும் அவர் மகனும் போலீசு நிலையத்தில் பிரேம்குமாரைக் கொலை செய்த முயற்சிக்காக''ப் பொய் வழக்குப் போடப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டனர்.

### பிரேம்குமார் மீது அரசு தொடுத்த கிரிமினல் வழக்கு

மறுநாளே இந்த அநீதிக்கெதிராகப் போராடத் தொடங்கினார்கள் வாடிப்பட்டி மக்கள். 2.2.82 அன்று ஆசிரியர்களும் பொதுமக்களுமாக சுமார் 500 பேர் கண்டன ஊர்வலம் நடத்தினர்; 3-ஆம் தேதி வாடிப்பட்டியில் கடையடைப்பு; 4-ஆம் தேதி பிரேம்குமாருக்கு எதிராக மீண்டும் கண்டன ஊர்வலம்; 5-ஆம் தேதி தொடக்கப்பள்ளி ஆசிரியர் சங்கத்தினர் மாவட்ட ஆட்சியரைச் சந்தித்து மனுக் கொடுத்தனர்.

## போலீசுக்கு எதிராக

# நல்லகா



20 ஆண்டு போராட்டத்தில் மனைவி சீனியம்மாளை இழந்தும் நீதிக்காகப் போராடும் முதியவர் நல்லகாமன்

**இது அத்தகையதொரு அதிசயத்தின் கதை. அநீதிக்குத் தலை வணங்காத தன்மான உணர்வின் கதை. அதிகாரத் திமிருக்கு அடிபணியாத நெஞ்சுரத்தின் கதை. ஒரு உண்மை மனிதனின் கதை.**



படிப்பகம்

www.padippakam.com

அடுத்தடுத்து வளர்ந்து வரும் மக்கள் எதிர்ப்பைக் கண்ட மாவட்ட ஆட்சியர், ஆர்.டி.ஓ விசாரணைக்கு உத்தரவிட்டார். 11 நாட்கள் நடைபெற்ற இந்த விசாரணையில் மொத்தம் 212 பேர் சாட்சியம் கூறினர்.

விசாரணை நடத்திய உசிலம்பட்டி ஆர்.டி.ஓ. மாலிக் பெரோஸ் கான் 18.4.82 அன்று தனது அறிக்கையை மாவட்ட ஆட்சியருக்குச் சமர்ப்பித்தார். ''சப்-இன்ஸ்பெக்டர் பிரேம்குமார், தலைமைக் காவலர் செல்லையா, காவலர்கள் ராமகிருஷ்ணன், சுப்பிரமணியன் ஆகியோர் நல்லகாமனையும் அவரது மகனையும் கொடூரமாகச் சித்திரவதை

## முதியவரின் போராட்டம்



*''எம்மேல ஏற்கெனவே 10 கேஸ் இருக்கு, எந்தக் கோர்ட்டும் என்.... கூட புடுங்க முடியாது''* - பிரேம்குமார், எஸ்.பி.

**அப்பாவி மக்கள் போலிசால் தாக்கப்படுவதொன்றும் அதிசயமில்லை. ஆனால் அவ்வாறு தாக்கப்பட்டவர்கள் போலீசுக்கு எதிராகப் போராடுவது அதிசயம், அதிலும் மனித உரிமை அமைப்புக்கள், கட்சிகள் போன்ற யாருடைய ஆதரவுமின்றி தன்னந் தனியாக ஒரு மனிதன் போலிசை எதிர்த்து நின்று இருபது ஆண்டுகளாகப் போராடுவது பேரதிசயம்.**

செய்ததற்கான மறுக்க முடியாத ஆதாரங்கள் உள்ளன'' என்பது அவரது முடிவு.

போலீசாரின் சாட்சிகள் அனைத்தும் பித்தலாட்டமாக இருக்க, நூற்றுக்கணக்கான மக்கள் அளித்த சாட்சிகள் அனைத்தும் எவ்வித முரண்பாடும் இல்லாமலிருப்பதை அவர் சுட்டிக் காட்டுகிறார்:

''கடைவீதியில் அவர்கள் கண்ணால் கண்ட இந்த ரத்தத்தை உறைய வைக்கும் சித்திரவதையைப் பற்றி நினைவு கூர்ந்த மாத்திரத்திலேயே பல சாட்சிகள் கண்ணீர் விடத் தொடங்கினர்... அவர்களுடைய வார்த்தைகள், உணர்ச்சிகள், கண்ணீரில் தோய்ந்த அவர்களது குரல் – இவற்றில் உண்மை இருக்கிறது, நாணயம் இருக்கிறது...''

நல்லகாமன் தேவர் சாதியைச் சேர்ந்தவர்; பிரேம்குமார் ரெட்டியார் சாதி. எனவே சாதி என்ற கோணத்தில் போலீசார் இதைத் திசைதிருப்பக்கூடும் என்பதை ஊகித்து அதையும் தெளிவுபடுத்துகிறார் ஆர்.டி.ஓ:

''சாட்சி கூறியவர்கள் எந்தக் குறிப்பிட்ட சாதியையும் சேர்ந்தவர்கள் அல்ல. கோனார், தேவர், பிள்ளை, முசுலீம், முதலியார், ரெட்டியார், சேர்வை, நாடார், நாவிதர் என எல்லாச் சாதியினரும், வங்கி ஊழியர்கள், பெண்கள், விவசாயிகள், வியாபாரிகள், தொழிலாளர்கள், அரசியல்வாதிகள் எனப் பல தரப்பினரும் சாட்சி கூறியுள்ளனர்.''

எனவே பிரேம்குமாரும் பிற காவலர்களும் குற்றவாளிகள் என்பதில் சந்தேகமேயில்லை என உறுதி செய்கிறார் ஆர்.டி.ஓ. இந்த விசாரணை முடிவின் அடிப்படையில் பிரேம்குமார் மற்றும் 3 போலீசார் மீது ''கொடுங்காயம் விளைவித்தல், கொள்ளையடித்தல், பெண்ணைக் கடத்துதல் மற்றும் கொலை முயற்சி'' உள்ளிட்ட ஏழு குற்றப் பிரிவுகளில் (இ.த.சட்டப் பிரிவு – 392,323,325,367,355,320,307) வழக்குப் பதிவு செய்ய மாவட்ட ஆட்சியர் உத்தரவிடுகிறார். 1983-இல் மதுரை அமர்வு நீதிமன்றத்தில் வழக்கும் பதிவு செய்யப்படுகிறது.

இதற்கு இணையாக பிரேம்குமார் மற்றும் 11 போலீசார் மீது கொலை முயற்சி உள்ளிட்ட 13 கிரிமினல் குற்றப் பிரிவுகளின் கீழ் நீதிமன்றத்தில் தனியே ஒரு வழக்குப் பதிவு செய்கிறார் நல்லகாமன்.

தமிழக அரசினாலேயே (ஆர்.டி.ஓ) கிரிமினல் என்று குற்றம் சாட்டப்பட்ட பிரேம்குமார் எஸ்.ஐ.யும், 3 போலீசாரும் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்படுகின்றனர்.

●●●

இதுவரை நீங்கள் படித்தது 20 ஆண்டுகளுக்கு முந்தைய கதை. இந்த 20 ஆண்டுகளில் சாட்சிகளில் பலர் இறந்துவிட்டனர்; பலர் பிழைப்புக்காக ஊரை விட்டுச் சென்றுவிட்டனர். நீதிக்காகப் போராடிய நல்லகாமனின் மனைவி இறந்து விட்டார்.

எம்ஜியார் ஆட்சி, ஜானகி ஆட்சி, கருணாநிதி ஆட்சி, ஜெயலலிதா ஆட்சி, மீண்டும் கருணாநிதி, மீண்டும் ஜெயலலிதா என்று இந்த 20 ஆண்டுகளில் தமிழகம் எல்லா ஆட்சிகளையும் பார்த்துவிட்டது. ஆனால் 70 வயதான முதியவர் நல்லகாமன் இன்னும் நீதியைக் கண்ணால் பார்க்கவில்லை.

தமிழக அரசினால் **'கிரிமினல்'** என்று குற்றம் சாட்டப்பட்ட பிரேம்குமாரோ இன்று துணை ஆய்வாளர் (எஸ்.ஐ) பதவியிலிருந்து நாலு கால் பாய்ச்சலில் உயர்ந்து தஞ்சை மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர் (சூப்பரிண்டெண்டெண்டு) ஆகிவிட்டார்.

தஞ்சையில் பிரேம்குமார் பதவி ஏற்ற இரண்டே ஆண்டுகளில் போலீசுக் காவலில் 5 மரணங்கள் நடந்துள்ளன என்றும் இவை குறித்து நீதி விசாரணை வேண்டுமென்றும் மனித உரிமை அமைப்புக்கள் கோரியுள்ளன.

மரியாதைக் குறைவாகவும் திமிர்த்தனமாகவும் நடந்து கொண்ட ஒரு துணை ஆய்வாளரை எதிர்த்துப் பேசிய ஒரே குற்றத்துக்காக தஞ்சை ஆட்டோ ஓட்டுநர் பாதுகாப்புச் சங்கத்தைச் சேர்ந்த ஜோசப், தாமஸ், தமிழ்ப்பாண்டி ஆகிய எமது தோழர்கள் மூன்று பேரை இரும்புக் கம்பியால் அடித்துச் சித்திரவதை செய்துவிட்டு, அவர்கள் மீது கொலை முயற்சி வழக்கும் போட்டுச் சிறையில் தள்ளியிருக்கிறார் பிரேம்குமார்.

''என்னடா... கேஸ் போடுவீங்களா போடுங்க. எம்மேல ஏற்கெனவே 10 கேஸ் இருக்கு, எந்தக் கோர்ட்டும் என்.... கூட புடுங்க முடியாது'' என்பது பிரேம்குமார் கடைசியாக எமது தோழர்களிடம் உதிர்த்த பொன்மொழி.

''வழக்கமாக எல்லாப் போலீசுக்காரனும் பேசும் திமிர்ப் பேச்சு'' என்று இதை ஒதுக்க முடியாது. இது பிரேம்குமார் தனது சொந்த அனுபவத்தில் கண்டறிந்த உண்மை. மதுரை அமர்வு நீதிமன்றத்தில் தொடங்கி டெல்லி உச்சநீதி



படிப்பகம்

www.padippakam.com

மன்றம் வரையில் எந்தக் கோர்ட்டும் பிரேம்குமாரின்... கூடப் பிடுங்கவில்லை என்பதுதான் கடந்த 20 ஆண்டுகளாக நல்லகாமன் நடத்திவரும் போராட்டம் நமக்குக் காட்டும் உண்மை.

பல லட்சம் ரூபாய் செலவு, ஓயாத அலைச்சல், இழுத்தடிக்கப்படுவதால் தோன்றும் மன உளைச்சல், சலிப்பு, குடும்பப் பிரச்சினைகள், மனைவியின் மரணம், 'வேண்டாமப்பா விட்டு விடு' என்று நண்பர்கள் கூறும் அறிவுரை, வழக்கை வாபஸ் வாங்கிக் கொள்வதற்குத் தரகர்கள் நடத்திய பேரம், ஆசை வார்த்தைகள், அச்சுறுத்தல்கள்... ஆகிய அனைத்தையும் மீறி முதியவர் நல்லகாமன் நடத்திவரும் இந்தப் போராட்டம் ஒரு அதிசயம்.

இனி இந்த அதிசயத்தின் கதைக்கு மீண்டும் செல்வோம்.

●●●

1983–இல் ஆர்.டி.ஓ கிரிமினல் வழக்குப் பதிவு செய்தவுடன் துணை ஆய்வாளர் பிரேம்குமாரும் 3 போலீசாரும் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டனர்.



இராணுவத்தில் பணியாற்றியபோது நல்லகாமனும் அவரது மனைவி சினியம்மாளும்

**போலீசாரின் சாட்சிகள் அனைத்தும் பித்தலாட்டமாக இருக்க, நூற்றுக்கணக்கான மக்கள் அளித்த சாட்சிகள் அனைத்தும் எவ்வித முரண்பாடும் இல்லாமலிருப்பதை ஆர்.டி.ஓ. விசாரணை சுட்டிக்காட்டியது.**

### 1985 – டி.எஸ்.பியாகப் பதவி உயர்வு!

அமர்வு நீதிமன்றத்தில் விசாரணை தொடங்கிவிடும் என்று எண்ணியிருந்தார் நல்லகாமன். மாறாக, பிரேம்குமார் துணைக் கண்காணிப்பாளராக (டி.எஸ்.பி.யாக) பதவி உயர்வு பெற இருக்கிறார் என்ற அதிர்ச்சியூட்டும் செய்தி வந்தது.

அரசாலேயே கிரிமினல் குற்றம் சாட்டப்பட்ட ஒரு நபருக்கு அந்த அரசே எப்படிப் பதவி உயர்வு வழங்க முடியும்? குறைந்தபட்சம் அந்தக் கிரிமினல் வழக்கின் விசாரணை முடியும் வரை இந்தப் பதவி உயர்வை நிறுத்தி வைக்க வேண்டுமென்று சென்னை உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்தார் நல்லகாமன். இந்தப் ***பதவி உயர்வு தற்காலிகமானதுதான்*** என்பதால் இதை நிறுத்தி வைக்கத் தேவையில்லை எனக் கூறியது உயர்நீதி மன்றம்.

''ஒரு அரசு ஊழியர் மீது துறை சார்ந்த விசாரணை (Departmental Enquiry) நிலுவையில் இருந்தால் கூட அவ்விசாரணை முடிவடையும் வரை அந்த ஊழியருக்குப் பதவி உயர்வு வழங்கப்படக்கூடாது'' என்ற நன்னடத்தை விதி எல்லா அரசு ஊழியர்களுக்கும் பின்பற்றப்படுகிறது. பிரேம்குமார் மீது நிலுவையிலிருந்ததோ அரசே தொடுத்த கிரிமினல் வழக்கு. அந்த வழக்கு நிலுவையிலிருக்கும் போதே அரசிடமிருந்து பதவி உயர்வையும், நீதிமன்றத்திடமிருந்து தனக்குச் சாதகமான தீர்ப்பையும் வாங்கி விட்டார் பிரேம்குமார்.

### 1987 – வழக்கு தள்ளுபடி

வழக்குச் செலவுக்கும் காசில்லை, வாழ்க்கைச் செலவுக்கும் காசில்லை என்று நல்லகாமன் திண்டாடிக் கொண்டிருந்த நிலையில் 1987-இல் உயர்நீதி மன்றத்தில் தனது அடுத்த தாக்குதலைத் தொடுத்தார் பிரேம்குமார்.

''ஒரே குற்றச்சாட்டிற்கு இரண்டு வழக்குகள் தொடர்வது (Double Jeopardy) தவறு. எனவே நல்லகாமன், ஆர்.டி.ஓ. ஆகிய இருவர் என்மீது தொடுத்துள்ள வழக்குகளில் ஆர்.டி.ஓ.வின் வழக்கை ரத்து செய்ய வேண்டும்'' என்று கோரினார். உயர்நீதி மன்றமும் வழக்கை ரத்து செய்தது.

பொதுவாக போலீசு அராஜகங்களுக்கெதிராக மக்கள் போராடும் போது, அரசு நடத்துகின்ற ஆர்.டி.ஓ விசாரணை என்பது வெறும் கண்துடைப்பு நடவடிக்கையாகவே இருக்கிறது; ஆனால் அரிதினும் அரிதாக நல்லகாமன் வழக்கில் மாலிக் பெரோஸ் கான் என்ற ஆர்.டி.ஓ நேர்மையாக விசாரணை நடத்தி வழக்கும் பதிவு செய்திருந்தார். அதையும் குழிதோண்டிப் புதைத்துவிட்டது இந்தத் தீர்ப்பு.

### உச்சநீதிமன்றம் நோக்கி...

இத்தீர்ப்பு நல்லகாமனை எத்தகைய அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கும் என்பதை விவரிக்கத் தேவையில்லை. இனி மேல்முறையீடு செய்வதென்றால் டெல்லிக்குத்தான் செல்ல வேண்டும். மனைவியின் நகைகளை விற்று, டெல்லி சென்று உயர்நீதி மன்றத் தீர்ப்புக்கு எதிராக மேல் முறையீட்டு மனுவையும் தாக்கல் செய்து விட்டு ஊருக்குத் திரும்பினார் – நல்லகாமன்.

ஆனால் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நாளில் நல்லகாமனின் வழக்குரைஞர் ஆஜராகத் தவறியதால் வழக்கைத் தள்ளுபடி செய்தது உச்சநீதி மன்றம். வசதி வாய்ப்புகள் இல்லாத ஒரு எளிய மனிதன் தனது சக்திக்கு மீறி உச்சநீதி மன்றம் வரை தட்டுத் தடுமாறி ஏறிச் சென்றும், கடைசியில் உச்சியிலிருந்து கால் இடறி விழுந்து விட்டார்.

இனி கையூன்றி எழுந்திருக்க வேண்டுமென்றாலே காசு வேண்டும். பணத்துக்கு எங்கே போவது?

### நல்லகாமனுக்கு வேலைவாய்ப்பு மறுப்பு!

தமிழக அரசால் கிரிமினல் குற்றம் சாட்டப்பட்ட பிரேம்குமாருக்கு அரசே பதவி உயர்வும் தந்து விட்டது. ஆனால் பிரேம்குமாருக்குப் பொருந்திய இந்த நீதி நல்லகாமனுக்குப் பொருந்தவில்லை. முன்னாள் இராணுவ வீரர்களுக்கான இட ஒதுக்கீட்டின் கீழ் அரசு வேலை வாய்ப்புகளுக்கு நல்லகாமன் போட்ட விண்ணப்பங்கள் எல்லாம் திரும்பி வந்தன. நல்லகாமன் மீது பிரேம்குமார் போட்டிருந்த கொலைமுயற்சி வழக்கைக் காரணம் காட்டி அவருக்கு வேலை மறுக்கப்பட்டது.

இந்த அநீதிக்கெதிராக சென்னை உயர்நீதி மன்றத்தில் இன்னொரு ரிட் மனுவைத் தாக்கல் செய்தார் நல்லகாமன்; வேலை வாய்ப்புக்கு விதிக்கப்பட்ட தடை நீங்கியது; அரசு வேலை கிடைத்தது. ஆனால் அதற்குள் அவருக்கு வயதாகிவிட்டதால் நான்கே ஆண்டுகளில் ஓய்வு பெற வேண்டியதாயிற்று.



படிப்பகம்

www.padippakam.com

### 1989: மீண்டும் உச்சநீதி மன்றம்!

வேலை கிடைத்தவுடனேயே உச்சநீதி மன்றத்தில் தள்ளுபடியான தனது மனுவை மீண்டும் விசாரணைக்குக் கொண்டு வரும் முயற்சியில் இறங்கி விட்டார் நல்லகாமன். டெல்லியில் வேறொரு வழக்குரைஞரைப் பார்த்து, தள்ளுபடியான பழைய மனுவை விசாரணைக்கு எடுப்பதற்கும் ஏற்பாடு செய்து விட்டார்.

அப்போது டெல்லி திகார் சிறையில் வேலை செய்து வந்த பிரேம்குமார், பல விதமான திரைமறைவு வேலைகள் மூலம் நல்லகாமனின் வழக்குரைஞரைக் 'கலைக்க' முயன்றிருக்கிறார்.

ரங்கநாத் மிஸ்ரா, சாவந்த், ராமசாமி ஆகியோரடங்கிய பெஞ்ச், சென்னை உயர்நீதி மன்றம் பிரேம்குமாருக்கு ஆதரவாக வழங்கிய தீர்ப்பை ரத்து செய்தது. ஆர்.டி.ஓ. போட்ட வழக்கு, நல்லகாமன் போட்ட வழக்கு மற்றும் நல்லகாமன் மீது போலீசு போட்ட வழக்கு ஆகிய மூன்றையும் மதுரை செசன்சு நீதிமன்றம் ஒரே நேரத்தில் சேர்த்து விசாரிக்க வேண்டுமென 7.11.89 அன்று உத்தர விட்டது.

ஒரு சாதாரணக் குடிமகன் சட்டப்பூர்வமான வழிகளில் அதிகபட்சமாக என்ன செய்ய முடியுமோ அதைச் செய்து விட்டார் நல்லகாமன். உச்சநீதி மன்றத்திற்கு மேல் வேறு நீதிமன்ற மில்லை. அந்த உச்சநீதி மன்றம் 1989-இல் உத்தரவிட்ட பின்னரும் ஜூன் 2002 வரை மதுரை செசன்சு நீதிமன் றத்தில் விசாரணை தொடங்கவே யில்லை.

### தலைமறைவாகிறார் பிரேம்குமார்!

ஆர்.டி.ஓ. போட்ட வழக்கை நடத்துவதற்கு அரசு வழக்குரைஞரை நியமிக் காமல் காலம் கடத்துவது, குற்றம் சாட்டப் பட்ட பிரேம்குமாரும் மற்ற போலீசாரும் ஒருவர் மாற்றி ஒருவர் வாய்தாவிற்கு வராமலிருப்பது போன்ற பல தந்திரங்கள் மூலம் விசாரணை தொடங்கவே முடியாமல் முடக்கினர்.

நல்லகாமன் மட்டும் ஒவ்வொரு வாய்தாவிற்கும் ஆஜரானார்; நடையாய் நடந்தார்; ஏனென்றால், அவர் சட்டத் திற்கு அடங்கி நடக்க வேண்டிய குடி மகன். வாய்தாவுக்கு வராத சட்டம் ஒழுங்கின் காவலரான பிரேம்குமார் மீதோ அடுக்கடுக்காகப் பிடிவாரண்டுகள் பிறப்பிக்கப்பட்டன.

போலீசின் மொழியில் சொன்னால் பிரேம்குமார் தலைமறைவாயிருந்த குற்றவாளி. இந்தத் தலைமறைவுப் பேர்வழியை ஒருமுறை கூடப் போலீசால் 'தேடிப் பிடித்துக்' கைது செய்ய முடிய வில்லை.

### தலைமறைவுக் குற்றவாளிக்குப் பதவி உயர்வு!

ஆனால் 'தலைமறைவாயிருந்த' டி.எஸ்.பி. பிரேம்குமாரைத் தேடிப் பிடித்துப் பதவி உயர்வு வழங்குவதற்கு மட்டும் அரசு தவறவில்லை. 16.9.97 அன்று பிடிவாரண்டுக்குச் சிக்காத தலைமறைவுப் பேர்வழி என்று மதுரை நீதிமன் றத்தால் குறிப்பிடப்படும் நபர் 1998-இல் கூடுதல் கண்காணிப்பாளராகப் (Addl. Supdt) பதவி உயர்வு பெற்றார்; பிறகு 1999-இல் கண்காணிப்பாளர் (Supdt) பதவியையும் கைப்பற்றி விட்டார்.

இந்த இருபது ஆண்டுகளில் எஸ்.ஐ. பிரேம்குமார், எஸ்.பி. பிரேம்குமாரானார். நல்லகாமனோ சில லட்சம் ரூபாய்களை இழந்தார்; வயது முதிர்ந்த காலத்தில் தன் மனைவியையும் இழந்தார்; தன்மானத்திற்காகத் தனது கணவன் நடத்திய போராட்டத்தில் தோளோடு தோள் நின்ற சீனியம்மாள், நீதியின் சாயலைக் கூடக் கண்ணால் காண முடியாமல் கண்ணை மூடிவிட்டார். நல்லகாமனும் போய்விட்டால் வழக்கைச் சுமுகமாக முடித்துவிடலாம் என்பது பிரேம்குமாரின் ஆசையாக இருந்திருக்கும்.

### மீண்டும் உயர்நீதி மன்றம்!

உயர்நீதி மன்றத்தில் ஒரு ரிட் மனு. 2000-வது ஆண்டில் தாக்கல் செய்யப் பட்ட அந்த ரிட் மனுவில் கலப்படமில்லாத பொய்களை, மிகவும் உருக்கமாகத் தெரிவித்திருக்கிறார் பிரேம்குமார். ''நல்லெண்ணத்துடன் கடமையைச் செய்ய முயன்ற எனக்குப் பொய் வழக்குத்தான் பரிசா?'' என்று தனது மனுவில் குமுறுகிறார். ''வழக்கை இழுத்தடிப்பது நல்லகாமன்தான்'' என்று குற்றம் சாட்டுகிறார். தன்மீது ஆர்.டி.ஓ. போட்டிருக்கும் வழக்கை மட்டும் தள்ளுபடி செய்து விடும்படி மன்றாடுகிறார்.

நல்லகாமனுக்குத் தெரியாமல் ஆர்.டி.ஓ.வை மட்டும் எதிர்மனுதாரராகப் போட்டு வழக்கை முடித்து விடலாம் என்பது பிரேம்குமாரின் சதித் திட்டம்! ஆனால் வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிபதி கற்பகவிநாயகம், நல்லகாமனுக்கும் நோட்டீசு அனுப்புமாறு உத்தரவு பிறப் பித்து விட்டார்.

எல்லா ஆவணங்களையும் உயர்நீதி மன்றத்தின் முன் சமர்ப்பித்தார் நல்ல காமன். திருவாளர் பிரேம்குமார் உயர்நீதி மன்றத்தை ஏமாற்றி மோசடி செய்து தனக்குச் சாதகமான தீர்ப்பைப் பெற முயன்ற உண்மை வெட்டவெளிச்சமானது.

**பல லட்சம் ரூபாய் செலவு, ஓயாத அலைச்சல், இழுத்தடிக்கப் படுவதால் தோன்றும் மன உளைச்சல், சலிப்பு, குடும்பப் பிரச்சினைகள், மனைவியின் மரணம், 'வேண்டாமப்பா விட்டு விடு' என்று நண்பர்கள் கூறும் அறிவுரை, வழக்கை வாபஸ் வாங்கிக் கொள்வதற்குத் தரகர்கள் நடத்திய பேரம், ஆசைவார்த் தைகள், அச்சுறுத்தல்கள்... ஆகிய அனைத்தையும் மீறி முதியவர் நல்லகாமன் நடத்திவரும் இந்தப் போராட்டம் ஒரு அதிசயம்.**

### காறித்துப்புகிறது உயர்நீதி மன்றம்!

பிரேம்குமாரின் மனுவைத் தள்ளுபடி செய்த உயர்நீதி மன்ற நீதிபதி கற்பக விநாயகம், அவருக்கெதிராகக் கடும் கண்டனங்களைப் பதிவு செய்துள்ளார். அதன் சாராம்சம் வருமாறு:

''23.1.2001 முதல் இந்தக் கணம் வரை இந்த நபர் மீது ஜாமீனில் வெளிவர முடியாத பிடிவாரண்டு உள்ளது. உயர் போலீசு அதிகாரி என்பதால் பிரேம் குமாரைக் கைது செய்ய போலீசு முயற் சிக்கவே இல்லை.

''வழக்கை இழுத்தடித்தது நல்ல காமன் அல்ல, பிரேம்குமார் தான். 1995 முதல் 2000 வரையிலான 6 ஆண்டு களில் மட்டும் பிரேம்குமார் மீது 13 முறை பிடிவாரண்டு பிறப்பிக்கப்பட்டி ருக்கிறது.

''குற்றவாளிகள் (பிரேம்குமாரும் பிற போலீசாரும்) ஒருவர் மாற்றி ஒருவர் நீதி மன்றத்துக்கு வராமலிருப்பதன் மூலம் வேண்டுமென்றே வழக்கை இழுத்தடித் துள்ளனர். அரசாங்கமும், சிறப்பு வழக்கு ரைஞரை நியமிக்கத் தவறியுள்ளது. தாம தத்துக்கு இவர்கள்தான் காரணம்.



படிப்பகம்

www.padippakam.com

''சட்டத்தின் மீதோ, உண்மையின் மீதோ பிரேம்குமாருக்குக் கடுகளவு கூட மரியாதை இல்லை. பொய் சொல்லி இந்த நீதிமன்றத்தை ஏமாற்றி, நல்லகாமனுக்குத் தெரியாமல் எப்படியாவது இந்த வழக்கை ஒழித்துவிட வேண்டும் என்பதே இவரது நோக்கம்.

''அமர்வு நீதிமன்றத்தில் இவர்மீது உள்ள வழக்குகள் முடியும் வரை ''இவருக்கு அளிக்கப்பட்ட டி.எஸ்.பி. பதவி உயர்வே தற்காலிகமானதுதான்'' என உயர்நீதி மன்றம் ஏற்கெனவே கூறியுள்ளது. அவ்வாறிருக்க இவர் எப்படிப் பதவி உயர்வு பெற்றார் எனத் தெரியவில்லை. 'பதவி உயர்வை வாங்கியாகிவிட்டது; இனி விசாரணையை நடத்தவிடக் கூடாது; எப்படியாவது வழக்கை இல்லாமல் செய்துவிட வேண்டும்' இதுதான் பிரேம்குமாரின் உள்நோக்கம் என்று தெளிவாகத் தெரிகிறது.

ஒரு முன்னாள் இராணுவ வீரரையும் அவரது மனைவியையும் கொடூரமாகத் தாக்கியது, அவரது மனைவியின் தாலியை அறுக்க முயன்றது, அவர்களை அடித்து ஊர்வலம் விட்டது போன்ற இந்தக் குற்றங்கள் நிரூபிக்கப்படுமானால் இப்படி ஒரு ஆளை போலீசுத் துறையில் இத்தனை நாளும் வைத்திருந்ததே மிகப் பெரிய வெட்கக்கேடாக இருக்கும் — இவையெல்லாம் பிரேம்குமாரைப் பற்றி சென்னை உயர்நீதி மன்றம் சென்ற ஜூன் மாதம் தெரிவித்துள்ள கண்டனங்கள்.

**காக்கி உடையைக் கழற்றவில்லை!**

இந்தத் தீர்ப்புக்குப்பின் மதுரை விரைவு நீதிமன்றத்தில் விசாரணை தொடங்கியிருக்கிறது. ஆனால் இந்தக் கணம் வரை. பிரேம்குமாரோ மற்றப் போலீசாரோ பதவி நீக்கம் செய்யப்படவில்லை.

இதே கண்டனங்கள் வேறொரு சாதாரணக் குடிமகனுக்கெதிராவோ அரசு ஊழியருக்கெதிராகவோ தெரிவிக்கப்பட்டிருந்தால் அவர்கள் அந்தக் கணமே சிறை வைக்கப்பட்டிருப்பார்கள்; வேலை நீக்கம் செய்யப்பட்டிருப்பார்கள்.

**இவர்கள் காக்கி உடுப்புடன் அரசு வாகனங்களில் வந்திறங்கி நீதிமன்ற வளாகத்தைக் கலக்குகிறார்கள். சாட்சிகளைக் கலைப்பதும் பொய்சாட்சி தயாரிப்பதும்தானே போலீசின் குலத்தொழில்!**



ஆனால் இவர்கள் காக்கி உடுப்புடன் அரசு வாகனங்களில் வந்திறங்கி நீதிமன்ற வளாகத்தைக் கலக்குகிறார்கள். 'சட்டத்தையும் உண்மையையும் மதிக்காதவர்' என்று நீதிமன்றத்தின் சான்றிதழ் பெற்ற பிரேம்குமார் சாட்சிகளை மிரட்டமாட்டார் என்பதற்கு என்ன உத்திரவாதம்? சாட்சிகளைக் கலைப்பதும் பொய்ச்சாட்சி தயாரிப்பதும் தானே போலீசின் குலத்தொழில்!

பிரேம்குமாரையும் குற்றம் சாட்டப்பட்ட 3 போலீசாரையும் உடனே கைது செய்து நீதிமன்றக் காவலில் வைக்க வேண்டும்; அவர்களைப் பதவி நீக்கம் செய்ய வேண்டும்; பிரேம்குமாருக்கு வழங்கப்பட்ட பதவி உயர்வுகளை ரத்து செய்து அவை குறித்து விசாரணை நடத்த வேண்டும்.

இவையனைத்தும் மிகவும் நியாயமான சட்டபூர்வமான கோரிக்கைகள். இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்காக எல்லா வாசகர்களும் மனித உரிமை ஆர்வலர்களும், வழக்குரைஞர்களும் பத்திரிக்கையாளர்களும் குரல் கொடுக்க வேண்டும்.

இது நல்லகாமன் என்ற தனிமனிதரின் பிரச்சினை அல்ல; போலீசு அராஜகத்தாலும் கட்டைப் பஞ்சாயத்துக்களாலும் அன்றாடம் பாதிக்கப்படும் நம் ஒவ்வொருவருடைய பிரச்சினை. இதற்கு நாம் குரல் கொடுக்கத் தவறினால் தன் வாழ்க்கையைப் பணயம் வைத்து நல்லகாமன் என்ற முதியவர் நடத்தி வரும் போராட்டம் பொருளற்றதாகி விடும்.

இந்த இருபதாண்டுப் போராட்டத்தின் கதையைக் கேட்டறிந்த பிறகு முதியவர் நல்லகாமனைக் கேட்டேன்: ''இந்த வயதில் தனியாக நடமாடுகிறீர்களே, உங்களுக்குப் பயமாக இல்லையா?''

''பயமா?'' என்று கேட்டுவிட்டுச் சிரித்தார் நல்லகாமன்.

''அப்புறம் அந்த வீட்டை என்ன செய்தீர்கள்?'' என்றேன். ''5000 ரூபாயைக் கோர்ட்டில் கட்டினான். அப்புறம்தான் காலி செய்தேன்'' என்றார்.

இந்த மனவுறுதியை விளக்கப் பொழிப்புரை தேவையில்லை. இந்த இருபதாண்டுப் போராட்டத்தின் துன்பத்தை உங்கள் இதயத்தில் பாய்ச்ச உணர்ச்சிமயமான சொற்றொடர்களைத் தயாரித்து இக்கட்டுரையில் ஒட்டவும் தேவையில்லை.

உங்கள் வாழ்க்கையின் இருபது ஆண்டுகளின் மீது நல்லகாமனின் இருபது ஆண்டுகளை ஓடவிட்டுப் பாருங்கள். சங்கிலியால் பிணைக்கப்பட்ட நிலையில் சொந்த ஊரில் உங்களையே மனக்கண்ணில் ஊர்வலம் விட்டுப் பாருங்கள். இரண்டிலொன்று தெரிந்துவிடும்.

பயம் உதிர்ந்து விடும்; அல்லது தன்மானம் உதிர்ந்து விடும்.

● சூரியன்



படிப்பகம்

www.padippakam.com

# வேதாளம் சொல்லும் புதிய விடுகதை !

***தன் முயற்சியில் சற்றும் மனம் தளராத விக்கிரமாதித்தன் மீண்டும் முருங்கை மரத்திலேறி வேதாளத்தைச் முதுகில் சுமந்து கொண்டு இறங்கினான். மவுனம் கலைந்த வேதாளம் ''விக்கிரமனே, நான் சொல்லும் கதைக்குச் சரியான விடை தெரிந்திருந்தும் சொல்லாவிட்டால் உன் தலை வெடித்துச் சுக்கு நூறாகி விடும்'' என்று எச்சரித்தது, கதையைச் சொல்லத் தொடங்கியது.***

**''கந்து வட்டிக்குக் கூடக் காசு கிடைக்காமல் கஞ்சித் தொட்டிக்கு அலைமோதும் நாட்டில், ஒரு கோடி ரூபாய் பணத்தை வைத்துக் கொண்டு வருந்தி வருந்திக் கூப்பிட்டாலும் வேண்டாமென்று ஓடுகிறார்களே விவசாயிகள் — அது ஏன்?**

தமிழ்நாடு என்ற சீரும் சிறப்பும் வாய்ந்த நாட்டை கோமளவல்லி என்ற செருக்கும் திமிரும் கொண்ட அரசி ஆண்டு வந்தாள். ''கோமளவல்லி அரியணையில் அமர்ந்தாலே மாதம் மும்மாரி பெய்யும்'' என்று நம்பிக் கொண்டிருந்த குடியானவர்கள் அரும்பாடுபட்டு அவளை அரசியாக்கியிருந்தார்கள்.

ஆனால் கோட்டையிலே கோமளவல்லியின் கொடி பறக்கத் தொடங்கிய நாளிலிருந்து நாட்டு மக்கள் பஞ்சத்தால் பரிதவிக்கத் தொடங்கினார்கள். பஞ்சத்துக்குக் கஞ்சித் தொட்டி வைத்தால் கோமளவல்லியின் கவுரவம் அதில் கரைந்து விடும் என்று அஞ்சிய காவலர்கள் பஞ்சத்தில் அடிபட்ட மக்கள் மீது பாய்ந்து குதறிக் கொண்டிருந்தார்கள்.

மீட்டர் வட்டி, வாரவட்டி, கந்து வட்டி என்று ஒரு வேளைக் கஞ்சி குடிக்கவே வட்டிக்காரனிடம் தவமிருந்தார்கள் மக்கள். நகை நட்டை வைத்துக் கடன் வாங்க முடியாதவர்கள் பெத்த பிள்ளையை வைத்துக் கடன் வாங்கினார்கள். அரிசி மில், தறி, வீட்டு வேலை, செங்கல் சூளை என வந்த விலைக்கு பிள்ளையை அனுப்பி வைத்தார்கள். அதுவும் முடியாதவர்கள் சிறுநீரகத்தை அறுத்து விற்றுப் பசியாறினார்கள்.

இப்பேர்ப்பட்ட பஞ்சபூமியில அரசிப்பட்டி என்று ஒரு கிராமம். அந்தக் கிராமத்தில் ஒரு ஏழைக் குடியானவன் வாழ்ந்து வந்தான். வாழ்ந்து வந்தான்னு சொல்வதைவிட செத்து வந்தான் என்று சொல்வதே பொருத்தம்.

ரோட்டுல ஜீப்புச் சத்தம் கேட்டால் கடன் ஜப்திக்கு ஆள் வருதோன்னு பயந்து செத்தான்; பைக் சத்தம் கேட்டா கந்து வட்டிக்காரனை நெனச்சு நடுங்கிச் செத்தான். தெருவில நாலு ஆள் தலயக் கண்டா சொந்தக்காரன் வந்தால் சோத்துக்கென்ன வழின்னு கலங்கிச் செத்தான்.

வெள்ளாமை இல்ல, வேலையும் இல்லங்கிறதால அந்தக் குடியானவன் திண்ணையில உக்காந்து தினம் யோசிச்சுப் பார்ப்பான். அப்பன் தந்த சொத்து அஞ்சு ஏக்கர் நிலம். அதுல நாம பண்ணுன வரவு செலவு என்ன, கடன் என்னன்னு யோசிப்பான்; அதை யோசிச்சு முடிக்கிறதுக்குள்ள கந்துவட்டிக்காரன் நெனப்பு வரும்; அடுத்த மாசம் சொந்தக்காரன் வூட்டு கல்யாணத்துக்கு மொய் செய்யணுமேன்னு பயம் வரும்.

இப்படி ஒருநாள் பலவிதமான நெனப்புகளில் அலபாய்ந்து ஒரு முடிவும் தெரியாமல் விட்டத்தை வெறித்தபடி படுத்துக் கிடந்தான் அந்த விவசாயி. அந்த நேரம் பாத்து ஒரு சினிமாப் பாட்டைச் சீட்டியடித்துக் கொண்டு வீட்டுக்குள்ளே நுழைந்தான் அந்தக் குடியானவனின் மகன். ''அப்பா, ஏன் முகம் வாடியிருக்கிறீர்கள்?'' என்று கேட்டான்.

குடியானவனுக்கு வந்தது கோபம். மகனைக் கண்டமேனிக்கு வைய வேண்டும் என்று நினைத்தான். ஆனால் எதுக்கு வைய, என்ன சொல்லி வைய என்று புரியாததால் பதில் சொல்லாமல் மவுனமாக இருந்தான். பிறகு வெடித்தான்.

''வச்ச வெள்ளாமை எதுவும் வெளா[ய]கல; கையில காசில்ல; நெலத்த அடகு வச்சுக் கடன் வாங்கலாம்னா 'உன் நெலத்த வச்சு நா என்ன பண்றது? பத்திரத்த வச்சு நாக்கு வழிக்கவா' என்று கேக்குறான் பைனான்சுக்காரன். இனி எப்படி வாழறது, எத வச்சுப் பொழக்கிறது. அதான் கவலை, வேறென்ன கவலை''ன்னு சொல்லிவிட்டுப் புரண்டு படுத்தான் குடியானவன்.

''அப்பா, கவலையை விடுங்கள். இவர்கள் கடன் தராவிட்டால் என்ன? கோமளவல்லியின் அரசாங்கம் நம்மைக் கைவிட்டு விடுமா? ''புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்'' என்ற பெயரில் ஒன்றியத்துக்கு ஒரு கோடி ரூபாய் கடன் தருகிறார்கள். வீடு தேடி வந்து கடன் கொடுக்க ஒன்றியம் முழுவதும் அலைந்து கொண்டிருக்கிறார்கள் அதிகாரிகள். இந்த அரசாங்க அறிவிப்பைக் கேள்'' என்று சொல்லி செய்தித்தாளைப் படிக்கலானான்.

''நாட்டு மக்களுக்கோர் நற்செய்தி. வறுமையில் வாடும் விவசாயிகளுக்கு லாபகரமான விலை கிடைக்கவும், வேலையின்றித் தவிக்கும் விவசாயக் கூலிகளுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கவும், படித்த கிராமப்புற இளைஞர்களைத் தொழில் செய்ய ஊக்குவிக்கவும் ஒரு திட்டம்!''

''கிராமத்தில் விளையும் காய்கறிகள் மற்றும் மூலிகைகளை மூலப் பொருளாகக் கொண்ட தொழில்களுக்கு முன்னுரிமை. தனிநபராகவோ, கூட்டாகவோ தொழில் செய்ய விரும்புவோர் கடனுக்கு விண்ணப்பிக்கலாம் - இங்ஙனம் மாவட்ட ஆட்சியர்.''

படித்து முடித்த மகனைப் பார்த்து ஏளனமாக ஒரு சிரிப்பு சிரித்தான் குடியானவன். ''கேப்பையில் நெய் வடியுதென்றால் கேக்குறவனுக்குப் புத்தி வேணாம். அரசாங்கம் கடன் கொடுக்க வேண்டாம். ஜப்தி செய்யாமலிருந்தால் போதாதா? கண்ட பேப்பரையும் படிச்சு மனசைக் கெடுத்துக்காம போய் ஏதாவது வேலையைத் தேடு. நாலு காசு சம்பாரிக்க வழியப் பாரு'' என்று மகனை விரட்டினான்.

படிப்பறிவோ, வாழ்க்கையில் முன்னேற வேண்டுமென்ற துடிப்போ இல்லாத அப்பனை எண்ணி மன



படிப்பகம்

www.padippakam.com

நொந்த மகன் அங்கிருந்து அகன்றான். காதும் காதும் வைத்தாற்போல ஒரு கடன் விண்ணப்பத்தையும் அரசுக்கு அனுப்பி வைத்தான்.

விண்ணப்பித்த மூன்றாவது நாளே குடியானவனின் வீட்டு வாசலில் ஜீப் ஒன்று வந்து நின்றது. ஜப்திக்கு வந்த ஜீப்போ என்று அஞ்சிய ஊர்க்காரர்கள் கண் மறைவாக நின்று குடியானவனின் வீட்டைக் கவனித்தார்கள். ''தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்'' என்று எழுதிய அந்த ஜீப்பிலிருந்து வாயெல்லாம் பல்லாக இறங்கினார்கள் அதிகாரிகள்.

சொந்தக்காரனிடம் கூட கால்காசு கடன் வாங்க முடியாத இந்தக் காலத்தில் இப்படியா? குடியானவன் கண்ணைக் கசக்கி விட்டுக் கொண்டான். மகனோ அதிகாரிகளுக்கு சோடா கலர் உடைத்துக் கொடுப்பதில் மும்முரமாக இருந்தான்.

''இந்தக் கிராமத்துலேர்ந்து இப்படி ஒரு புராஜக்ட நாங்க எதிர்பார்க்கவே இல்லை சார். உங்கள மாதிரி ஆர்வமான இளைஞர்களத்தான் நாங்க தேடிக்கிட்டிருக்கோம்'' என்று குடியானவனின் மகனைத் தட்டிக் கொடுத்தார் ஒரு அதிகாரி.

''மூலிகை சட்னி, தக்காளி சாஸ் தயாரிக்க லோன் கேட்டிருக்கீங்க. 5 லட்ச ரூபாய் போதுமா? புதுசா வேற ஐடியா இருந்தாலும் சொல்லுங்க'' என்றார் இன்னொரு அதிகாரி.

''இது மாதிரி நெறய ஐடியா இருக்கு சார். பணம்தான் ஒரே பிரச்சினை'' என்றான் மகன்.

அப்படியா என்று ஆச்சரியப்பட்ட அதிகாரி ''இன்னிக்கு ஹெர்பல்லுக்கு (மூலிகைக்கு) நல்ல மார்க்கெட் இருக்கு சார். ஹெர்பல் அயிட்டம்னா வெளிநாட்டுக்காரன் என்ன வெல கொடுக்கவும் தயாரா இருக்கான்'' என்றார். ''மூலிகைச் சட்னி எப்படித் தயார் பண்றீங்க? மூலிகை எங்கேயிருந்து வாங்குவீங்க?'' என்று ஆர்வமாகக் கேள்வி கேட்டார் இன்னொருவர்.

உடனே ஒரு பேராசிரியரின் தோரணையில் பேசத் தொடங்கினான் குடியானவனின் மகன். புதினா, கொத்தமல்லி மற்றும் கருவேப்பிலையைத் தண்ணீர் விடாமல் அரைத்துத் தயாரிப்பதாகவும் இந்த மூன்றையும் குறிப்பிட்ட விகிதத்தில் கலப்பதுதான் தொழில்நுட்ப ரகசியமென்றும் இதைக் குழம்புக்குப் பதிலாகவோ நேரடியாகவோ சாப்பிடலாமென்றும் விளக்கினான். ''வாயுத் தொல்லை வராது. பயணத்தின் போது வாந்தி மயக்கம் வராது. 40 நாள் வரை கெடாது'' என்று மூலிகைச் சட்னியின் அருமை பெருமைகளை ஆங்கிலத்திலும் தமிழிலும் அளந்து விட்டான்.

''இது பாரம்பரியத் தொழில்நுட்பம்னு எழுதியிருக்கீங்களே வேறென்னென்ன ஐயிட்டம்லாம் வச்சிருக்கீங்க?'' என்று கேள்வி எழுப்பினார் ஒரு அதிகாரி.

உடனே கதவுக்குப் பின்னால் நின்று கொண்டிருந்த 'பாரம்பரியத்தை' வெளியே அழைத்தான் குடியானவனின் மகன். 70 வயதுக் கிழவியான குடியானவனின் ஆத்தா வெளியே வந்தாள்.

''இவுங்கதான் சார் எனக்குக் கத்துக் கொடுத்தாங்க. எங்க ஊட்ல யாருக்கு என்ன நோய் வந்தாலும் மருந்து மாத்திரை சாப்பிடுறதில்ல. எல்லாம் இவங்களே பாத்துக்குவாங்க'' என்று பெருமை பொங்கக் கூறினான்.

''அப்படியா நல்ல அனுபவசாலியா இருப்பாங்க போலிருக்கே. வேற என்னம்மா செய்யலாம்?'' என்று கேட்டார் ஒரு அதிகாரி.

பலவிதமான துவையல்கள், ஊறுகாய்களின் செய்முறைகளைக் கிழவி விளக்கத் தொடங்கினாள்.

ஒகோ, ஒகோ என்று தலையை ஆட்டிக் கொண்டிருந்த அதிகாரி, ''என்ன சார் இவ்வளவு விசயத்தை வச்சிகிட்டு வெறும் 5 லட்ச ரூபாய்க்கு புராஜெக்ட் போட்டிருக்கீங்க. 20,30 லட்சத்தில பெரிய யூனிட்டா போடலாமே சார்'' என்று செல்லமாகக் கோபித்துக் கொண்டார்.

''உங்கள மாதிரி தொழில் முனைவோருக்காக அடுத்த வாரம் கலெக்டர் ஆபீஸ்ல ஒரு மீட்டிங் போடறோம். உங்க நண்பர்கள், விவசாயிகள் எல்லாரையும் கூட்டிக்கிட்டுக் கட்டாயம் வந்திடுங்க''






படிப்பகம்

www.padippakam.com

என்று சொல்லிவிட்டுக் கிளம்பினார்கள் அதிகாரிகள்.

●●●

அரண்மனை போன்ற கலெக்டர் ஆபீசின் ஏ.சி. அறையில் சுமார் 150 விவசாயிகள் நடுங்கிக் கொண்டிருந்தார்கள். எல்லோருக்கும் டீயும் பிஸ்கெட்டும் வந்தது. டீயை மட்டும் குடித்துவிட்டு ரொட்டியை பேரப்பிள்ளைகளுக்காக மடியில் பத்திரப்படுத்திக் கொண்டார்கள் சில பேர். கலெக்டர் வந்தார். விவசாயிகளிடம் இந்தத் திட்டத்திற்கு உள்ள வரவேற்பைக் கண்டு வியப்பதாகக் கூறி விட்டுப் புறப்பட்டார்.

அடுத்து வந்த தோட்டக்கலைக் கல்லூரிப் பேராசிரியர் மாவட்டத்தில் விளையும் காய்கறிகள், பழங்கள், மூலிகைகளைப் பயன்படுத்தி என்னென்ன தொழில்கள் தொடங்கலாம் என்று விளக்கிப் பேசினார்.

முருங்கைக்காய் பவுடர், தேங்காய் சிப்ஸ், கொய்யா ஜூஸ் போன்ற விநோதமான தயாரிப்புகளைக் கேட்டு விவசாயிகள் அசந்து போனார்கள். ''300 கிராம் பீன்சையும் தக்காளியையும் பதப்படுத்தினால் 460 ரூபாய்க்கு விற்கலாம். காலம் மாறிவிட்டது. இன்னமும் விவசாயிகள் உள்ளூர்ச் சந்தையை நம்பிக் கொண்டிருக்கக் கூடாது. உலகச் சந்தையைப் பற்றி யோசிக்க வேண்டும்...'' என்று பேசிக் கொண்டே போனார் பேராசிரியர்.

தன் தோட்டத்தின் நடுவில் பெரிய தொழிற்சாலை இருப்பது போலவும் அதில் நூற்றுக்கணக்கானவர்கள் வேலை செய்வது போலவும், லாரி லாரியாகச் சரக்குகள் வெளியே செல்வது போலவும், வெள்ளைக்காரர்கள் மூலிகைச் சட்னி தொழில்நுட்பத்துக்காகக் கட்டுக்கட்டாகப் பணத்துடன் காத்திருப்பது போலவும் கனவு காணத் தொடங்கினான் குடியானவனின் மகன். சரவண பவன் அண்ணாச்சி, ஜப்பானியத் தொழிலதிபர் ஒகாயோ கொடாசி போன்ற உழைப்பால் உயர்ந்த உத்தமர்களைப் பற்றி ஜூனியர் விகடனில் படித்த கதைகள் வரிவரியாக அவன் நினைவுக்கு வந்தன.

கடைசி வரிசையிலிருந்து வந்த ஒரு விவசாயியின் குரல் அவனது கனவைக் கலைத்தது. ''நாங்க பாட்டன் பூட்டன் காலத்துலேர்ந்து விவசாயம் பண்றோம். ஒருநாள்கூட நீங்க சொல்ற விலையில எவனும் வாங்குனதில்லையே. கொஞ்சம் நம்புற மாதிரி சொல்லுங்க சார்'' என்றார்.

''ஒரு கிலோ பீன்சை மூணு ரூவாய்க்கு வாங்க நாதியில்ல. பன்றிக்குப் போட்டுகிட்டிருக்கோம். நீங்க 300 கிராம் 460 ரூபாய்ங்கிறீங்க. கிறுக்குப் பய கூட இந்த வெலைக்கு வாங்க மாட்டான் சார்'' என்றார் இன்னொரு விவசாயி.

நபார்டு அதிகாரி குரலை உயர்த்தினார். ''அமெரிக்காக்காரனும் ஜெர்மன் காரனும் கிறுக்குப் பயங்கிறீங்களா? அரசிப்பட்டிக்கும் தேனி சந்தைக்கும் ஓடிக் கிட்டிருந்தா நீங்க சொல்ற விலைதான் கிடைக்கும். வெளிநாட்டுக்கு ஏற்றுமதி பண்ணினாத்தான் நாங்க சொல்ற விலை கிடைக்கும்.''

''உழவர் சந்தைக்கு பஸ் ஏறிச் சரக்கைக் கொண்டு போகவே பெரும் பாடா இருக்கு. உலகச் சந்தைக்கு எந்த பஸ்ல போறது. எவன்கிட்ட விக்கிறது. இதெல்லாம் ஆகிற கதையா'' என்றார் இன்னொரு விவசாயி.

''பாளையம் வட்டாரம் நல்லா படிச்சவங்க ஏரியான்னு சொல்றாங்க. இப்படிப் பேசுறீங்களே. உங்க வட்டாரத்துக்கு மட்டும் ஒரு கோடி ரூபா ஒதுக்கியிருக்கோம். 10 லட்சத்துக்குக் கூட அப்ளிகேசன் வரல. இப்டி இருந்தா எப்பிடி சார் நம்ம ஏரியா முன்னேறும்?'' என்றார் இன்னொரு அதிகாரி.

''கைய நீட்டிக் காச வாங்கினா அடைக்க வேணாமா சார். நீங்க 300 கிராம் 460 ரூபாய்ங்கிறீங்க. கேக்கவே பயமா இருக்கு. ஒண்ணு செய்யிங்க. நாங்க பொருளத் தயாரிச்சுக் குடுத்துடறோம். நீங்க கொண்டு போய் வித்திடுங்க. எங்களுக்கு சீரா ஒரு விலையைப் போட்டுக் குடுத்திருங்க'' என்றார் ஒரு விவசாயி.

குடியானவன் வீட்டுக்கு வந்த அதிகாரி சிரித்த முகத்துடன் பதில் சொன்னார்: ''ஐயா நாங்க கொளந்தான் வெட்டி விட முடியும். மீனு, நண்டு, நத்தையெல்லாம் நீங்கதான் உருவாக்கிக்கிறனும்.''

''நீங்க வேற.. அவரு புடிச்சி வறுத்துத் தரச் சொல்றாரு சார்'' என்று இன்னொரு அதிகாரி சொல்ல எல்லா அதிகாரிகளும் சிரித்தனர்.

''இதெல்லாம் நமக்கு ஒத்து வரா துப்பா'' என்று முனகியபடியே வெளியேறினார்கள் விவசாயிகள். கனவு கலைந்த குடியானவன் மகனும் அவர்களுடன் சேர்ந்து வெளியேறி விட்டான். ஒரு கோடி ரூபாய் அங்கே சீந்துவாரில்லாமல் கிடந்தது.

●●●

இப்படிக் கதையைச் சொல்லி முடித்த வேதாளம் விக்கிரமாதித்தனைப் பார்த்துக் கேட்டது. ''கந்து வட்டிக்குக் கூடக் காசு கிடைக்காமல் கஞ்சித் தொட்டிக்கு அலைமோதும் நாட்டில், ஒரு கோடி ரூபாய்ப் பணத்தை வைத்துக் கொண்டு வருந்தி வருந்திக் கூப்பிட்டாலும் வேண்டாமென்று ஓடுகிறார்களே விவசாயிகள் - அது ஏன்? இந்தக் கேள்விக்குச் சரியான விடை தெரிந்திருந்தும் நீ சொல்ல மறுத்தால் உன் தலை வெடித்துச் சுக்கு நூறாகிவிடும்'' என்றது வேதாளம்.

விக்கிரமாதித்தன் பதில் சொல்லலானான். வேதாளமே நான் ஒரு கதை சொல்கிறேன். 200, 300 ஆண்டுகளுக்கு முன்னால் இந்த நாட்டை பரங்கியர்கள் ஆண்டு வந்தார்கள். இலங்கையில் காடுகளை அழித்துத் தேயிலைத் தோட்டம் போடும் வேலைக்கு விவசாயிகளை வருந்தி வருந்திக் கூப்பிட்டார்கள். யாரும் வரவில்லை.

வெள்ளைக்காரனுக்கோ அவசரமாக ஆள் தேவைப்பட்டது. என்ன செய்யலாம் என்று தனது கங்காணிகளிடம் யோசனை கேட்டான் வெள்ளைக்காரன். ''ஐயா மாசிக் கருவாட்டுக்கும் தேங்காய்க்கும் மயங்காத ஆள் கிடையாது'' என்று சொல்லிக் கொடுத்தார்கள் கங்காணிகள்.

உடனே ஒரு தந்திரம் செய்தானாம் வெள்ளைக்காரன். இலங்கைத் துறைமுகத்திலிருந்து தேயிலைத் தோட்டம் வரை பாதையின் இருபுறமும் மாசிக் கருவாட்டையும், தேங்காயையும் மண்ணுக்குள் புதைத்து வைத்தானாம். ''அங்கே மாசியும் தேங்காயும் மண்ணுக்குள்ளே விளையுது'' என்று தனது விசுவாசிகள் மூலம் கதை கட்டி விட்டானாம்.

இலங்கையில் போய் இறங்கிய விவசாயிகள் வழியெல்லாம் மண்ணைத் தோண்டி மாசியையும் தேங்காயையும் எடுத்துக் கொண்டே போனார்களாம். கடைசியில் நிமிர்ந்து பார்த்தால் தேயிலைத் தோட்டம். அன்றைக்குச் சிக்கியவர்கள்தான். இன்றுவரை அந்த தேயிலைத் தோட்ட அடிமைகள் மீளவே முடியவில்லை.

''புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்பது புதிய மாசிக் கருவாட்டுத் திட்டம். இதில் சிக்கினால் உள்ள நிலத்தையும் இழந்து சொந்த ஊரிலேயே அடிமையாகி விடுவோம்'' என்று புரிந்து கொண்டதனால்தான் குடியானவன் மகனும், விவசாயிகளும் கலெக்டர் ஆபீசிலிருந்து தப்பித்து ஓடி வந்துவிட்டார்கள்.

''கோடி ரூபாய் கொடுத்தாலும் கொத்தடிமையாய் மாற சம்மதிப்பாருண்டோ வேதாளமே!'' என்று விக்கிரமன் கேட்க வேதாளம் மீண்டும் முருங்கை மரம் ஏறியது.

***தன் முயற்சியில் சற்றும் மனந் தளராத விக்கிரமன் மீண்டும் மரத்திலேறி...***



படிப்பகம்

www.padippakam.com

# ஹாலிவுட்டிலிருந்து ஒரு சுயவிமரிசனம்

'பேசிக் இன்ஸ்டிங்ட்' (Basic Instinct), சில ஆண்டுகளுக்கு முன்பு ரசிகர்களைக் கலக்குக் கலக்கிய ஒரு ஹாலிவுட் திரைப்படம். ஆயினும் இதற்குத் திரைக்கதை எழுதிய ஜோ எஸ்தெராஸ் (Joe Eszterhas) இப்படத்தின் தவறான மதிப்பீடுகள் குறித்து தற்போது சுயவிமரிசனம் செய்திருக்கிறார். ஹாலிவுட் என்றாலே ஏகாதிபத்தியச் சீரழிவு என்று மதிப்பிடுவோருக்கு இது ஆச்சரியமாக இருக்கலாம். முற்போக்கு, பிற்போக்கு, கலகம், கேளிக்கை, ஒழுக்கம் எனப் பலவிதப் பரிமாணங்கள் கொண்டதாக ஹாலிவுட்டைப் பார்க்கும் பின்நவீனத்துவவாதிகளுக்கோ இது ஒரு மகிழ்ச்சி! ஒரு வகையில் இது உண்மைதானோ என்று ஐயங்கொள்ளும் வகையில் உள்ளன பின்வரும் செய்திகள்.

இரகசியமாக இந்தியா வந்து இராஜஸ்தான் கிழத்திடம் யோகா பயின்று சென்ற டைட்டானிக் நாயகி கதே வின்ஸ்லட், சிலுவையைப் புணருவதைப் போல் நடித்து, கத்தோலிக்கத்தின் புனிதத்தைக் கட்டவிழ்த்த மடோனா, நர்த்தகி ஒருத்தியுடன் பரதம் ஆடி மூன்றாம் உலகின் கலைமரபை மேற்குலகம் தெரிந்து கொள்ள வைத்த மைக்கேல் ஜாக்சன், பௌத்தத்தைத் தூக்கிப் பிடிக்கும் ஸ்டீவன் செகல், ரிச்சர்டு கிர்ரே, கருப்பு நடிகன் டென்சில் வாஷிங்டனுக்கு ஆஸ்கார் வழங்க வேண்டும் எனக் குரலுயர்த்திய ஜூலியா ராபர்ட்ஸ், ஏசுநாதரின் இறுதி 12 மணிநேரத்தை லத்தீன் மொழியில் படமெடுக்கத் துணிந்த மெல் கிப்சன் என்று ஹாலிவுட்டின் 'பரிமாணங்கள்' பல.

இந்தக் கலக மரபில்தான் 'பேசிக் இன்ஸ்டிங்ட்' உள்ளிட்ட 14 மெகா வெற்றிப் படங்களுக்குத் திரைக்கதை வடித்த, உலகிலேயே அதிக ஊதியம் பெறும் திரைக்கதைச் சிற்பி ஜோ எஸ்தெராஸும் வருகிறார். தனது வெண்திரை மாந்தர்களைக் கவர்ச்சியான புகையிழுப்பாளர்களாகக் காட்டியதன் மூலம், ஊர் பெயர் அறியாத எண்ணிறந்த மனிதர்கள் புகையினால் கொல்லப்படுவதற்குத் துணை போய்விட்டதாக அவர் மன்னிப்பு கேட்கிறார். இந்த இரத்தக்கறை படிந்த கைகளை வைத்தே தனது வங்கிக் கணக்கின் இருப்பை உயர்த்தியது குறித்து வெட்கப்படுகிறார் அந்த 'நல்ல' மனிதர். மேலும் — ''எனது பல திரைக் கதைகளின் உள்ளார்ந்த பகுதியாக சிகரெட் மாறியதன் காரணம் நானே தீவிரமாகப் புகையிழுப்பவன்... புகைப் பழக்கம் என்பது ஒவ்வொரு மனிதனுக்கும் உள்ள தனிப்பட்ட உரிமை என்றே முன்பு நம்பினேன். அதைத் தடை செய்யும் முயற்சிகள் அரசியல் ரீதியில் சரியெனக் கூறுவது தனிநபரின் சுதந்திரத்தை அழிக்கும். இப்படி என்னுடைய கருத்துக்களையும் என் திரைக்கதைகளில் சொல்லியிருக்கிறேன்.''

''பேசிக் இன்ஸ்டிங்ட்' படத்தில் புகைபிடிப்பது செக்சுடன் இணைக்கப்பட்டிருந்தது. அதில் ஷெரோன் ஸ்டோன் (நடிகை) புகைப்பார்... இப்படத்தில் பிரபலமானதும் சர்ச்சைக்குரியதுமான காட்சி ஒன்றில், ஷேரோன் கையில் சிகரெட் இருக்கும். ஆக படத்தை புகையிலை நிறுவனங்கள் வரவேற்றன. 'பேசிக் சிகரெட்' என்ற புதிய பிராண்டையே அறிமுகப்படுத்தின. என் படம் எவ்வளவு பணத்தை அள்ளியதோ அவ்வளவு பணத்தை அவர்களின் சிகரெட்டும் ஈட்டியது. இப்போது நான் செய்த தவறுக்குப் பரிகாரம் செய்வதாகக் கடவுளிடம் உறுதியளித்திருக்கிறேன். என்னைப் போல் ஏனைய படைப்பாளிகளும் இந்தத் தவறு செய்வதைத் தடுத்து நிறுத்த முயல்கிறேன்.''

''ஹாலிவுட் நட்சத்திரம் ஒருவரின் கையிலிருக்கும் சிகரெட் உண்மையில் 12 அல்லது 14 வயதுச் சிறார்களைக் குறிவைக்கும் ஒரு துப்பாக்கிக்கு நிகரானது... இருந்தும் .இதை நியாயப்படுத்தும் புத்தார்வச் சுதந்திரம், கலைச்சுதந்திரம் போன்ற சொற்குவியல்களின் புகைமண்டலப் பின்னணியில் தஞ்சம் கொள்கிறோம். ஆனால் இந்த அலங்கார வார்த்தைகள் அத்தனையும் பொய்!....''

— என்று 'மனதாரப்' பேசுகிறார் இந்தத் திரைக்கதைப் படைப்பாளி. இவருடன் வேறு சில பிரபலங்களும் இந்தப் புகை எதிர்ப்புக் கலகத்தை ஹாலிவுட்டில் எழுப்பி வருகிறார்கள். 1960-இல் வெளிவந்த படங்களைவிட 2000-இல் வெளிவந்த படங்களில் புகையிழுப்புக் காட்சிகள் 50 மடங்கு அதிகரித்திருக்கின்றனவாம். எனவே திரைப்படங்கள் என்பது சிறார்களுக்குச் சிகரெட்டை விளம்பரப்படுத்தும் விசயமாகிவிட்டதே என்று வருத்தப்படுகிறார்கள் இந்தப் பிரபலங்கள்.

இன்னொருபுறம் இப்படிச் சினிமாதான் எல்லாரையும் கெடுக்கிறது என்பது கேலிக்கூத்து என்று சில அறிஞர் பெருமக்கள் எதிர்வாதம் வைக்கிறார்கள். 'புகை பிடிப்பது உடல்நலத்திற்குத் தீங்கானது' என்று தெரிந்தே பிடிப்பவர்களுடைய தனிப்பட்ட பொறுப்பு பற்றித்தான் பேசவேண்டும் என்று வாதிடுகிறார்கள். அமெரிக்காவில் இத்தகைய 'புனிதமான' கருத்துப் போர்கள் வழக்கமானவை.

துப்பாக்கிக் கலாச்சாரம், போதைப் பொருள் பழக்கம், வன்முறை வீடியோ விளையாட்டுக்கள், பாலுணர்வு வக்கிரங்கள் என்று பல பிரச்சினைகளில் தடை செய்ய வேண்டும் என்றும், கூடாது என்றும் தேசிய அளவிலான விவாதங்கள் அனல் பறக்க நடக்கும்.

இங்கே பாபர் மசூதிப் பிரச்சினை, கல்வியில் காவிமயம், பசுவதைப் பிரச்சினை, மதமாற்றம் இன்னபிறவற்றில் வாஜ்பாயியை விட்டு 'தேசீய விவாதம்' செய்யும் இந்துமத வெறியர்கள் இன்னொரு பக்கம் கடப்பாரைச் சேவையில் காரியங்களை முடித்துக் கொள்வார்கள். அதைப் போல அமெரிக்கப் பிரச்சினைகள் குறித்து உரையாடல் நடத்தும் அமெரிக்க அறிவுஜீவிகளை, தனிநபர் உரிமை, சுதந்திரம் என்ற அமெரிக்கச் சட்டத்தின் பிரம்மாஸ்திரத்தை வைத்து எளிதில் வீழ்த்தி விடுவார்கள் அமெரிக்க முதலாளிகள். ஆக பிரச்சினைகளை முடிந்த அளவு பேசிக் கொள்வது மட்டுமே அங்கே ஒரு மரபாகி விட்டது.

அப்படிப் பேசிக் கொள்வதிலாவது ஒரு நேர்மை இருக்கிறதா என்பதே நமது கேள்வி. 'பேசிக் இன்ஸ்டிங்ட்' படத்தில் சிகரெட்டைப் பிரபலமாக்கிச் சிறார்

**அமெரிக்க அறிவுஜீவிகளை, தனிநபர் உரிமை, சுதந்திரம் என்ற அமெரிக்கச் சட்டத்தின் பிரம்மாஸ்திரத்தை வைத்து எளிதில் வீழ்த்தி விடுவார்கள் அமெரிக்க முதலாளிகள். ஆக பிரச்சினைகளை முடிந்த அளவு பேசிக் கொள்வது மட்டுமே அங்கே ஒரு மரபாகி விட்டது.**



படிப்பகம்

www.padippakam.com

களைக் கெடுத்து விட்டதாக ஜோ எஸ்த்ராஸ் வருத்தத்தில் ஹமாம் சோப்பு அளவுக்காவது நேர்மை இருக்கிறதா?

இந்தப் படத்தின் சர்ச்சையும், பிரப லமும், வருமானமும் அதன் புகையி ழுப்புக் காட்சிகளில் இல்லை, பச்சை யான படுக்கைக் காட்சிகளில்தான் இருக் கிறது. ஷேரோன் ஸ்டோனும், மைக்கேல் டக்ளசும் ஒருவுரையொருவர் கடித்துக் குதறுவது போன்ற காட்சிகளை உருவாக் கிய கைதான் உண்மையில் கழுவாய் தேட வேண்டும். மனிதனின் இயல்பான பாலுணர்வை, ஆவேச வெறியாகப் புனையப் பழக்கியது இத்தகைய படங் கள்தானே?

கடந்த 10 ஆண்டுகளாகப் பெருகி வரும் மாத்ரு பூதங்களும், நாராயண ரெட்டிகளும், பாலுணர்வுக் கோளாறு களைக் கேள்வி பதிலாக்கும் பத்திரிக்கை களின் குடும்பப் பிரச்சினைப் பகுதிகளும் என்ன செய்கின்றன? ஹாலிவுட் பாணி படுக்கைக் கலையை அல்லது வக்கிரங் களைக் கல்வி என்ற பெயரில் கற்றுக் கொடுக்கின்றன. சிறார்களுக்குப் பிஞ்சிலே பழுக்க வைப்பதையும், இளை ஞர்களுக்கு மிகையான கற்பனை யையும், தம்பதியினருக்குத் திருப்தியின் மையையும், தோல்வி மனப்பான்மை யையும், பொறாமையையும் ஏற்படுத்து கின்றன.

ஏற்கெனவே பின்தங்கிய சமூகமான இந்தியாவில் ஆண் - பெண்ணைப் பிரித்து வைத்திருக்கும் மரபில், இயல்பா கவே பாலுணர்வு அறியாமையில் மூழ்கி யிருக்கும் மக்களை இவை மேலும் கள்குடித்த குரங்காக்கி விடுகின்றன.

இதனால் அமெரிக்கா பரவாயில்லை என்பதில்லை. அங்கே கூடுதலாகக் குரங்கின் காதில் ஒரு கட்டெறும்பையும் போட்டு விடுகிறார்கள். ஹாலிவுட் உரு வாக்கியிருக்கும் செக்ஸ் வெறி அனைவ ரையும் மாயமானைத் தேடி அலைபவர்க ளாக மாற்றிவிட்டது. ஒரு ஆணும் பெண்ணும் இயல்பாக, இயற்கையாகப் பாலுறவு கொள்ளும் யதார்த்தம், அதீதப் புனைவுடன் பயங்கரமாக, கவர்ச்சியாக, இறுதியில் ஆட்கொல்லி நோயாக மாறுகி றது.

இப்படி உலகெங்கும் ஹாலிவுட் பாணி செக்ஸ் கல்வி காசுபார்ப்பதோடு, நோயும் பரப்புகிறது. இதெல்லாம் ஹாலி வுட்டின் மனிதநேயப் போராளிகளுக்குத் தெரியாமல் போனது ஏன்? ஏனெனில் புகைப்பழக்கம் நேரடியாக நுரையீரலைப் பாதித்து புற்றுநோயைத் தருகிறது. செக்ஸ் வக்கிரமோ நேரடியாக உடலைப் பாதிப்பதில்லை; உள்ளத்திற்கு மகிழ்ச்சி



**புகை புற்று நோயைத் தரும்; ஹாலிவுட் செக்ஸ் வக்கிரமோ உள்ளத்தை ரணமாக்கி விடும். (படத்தில்: நடிகை ஷாரன் ஸ்டோனும், திரைக்கதையாளர் ஜோ எஸ்தொராஸீம்).**

வழங்கும் பெயரில் ரணமாக்குகிறது. இது கூட அமெரிக்க மனித நேயத்திற்குத் தெரி யாமல் போனது ஏன்?

காரணம் — தின்பதற்கும், செரிப்ப தற்கும், கழிப்பதற்கும், பார்ப்பதற்கும், இன்னும் அத்தனைக்கும், அதாவது, மாபெரும் நுகர்வு ரசனையை விரித்துக் கொண்டே இருப்பதில்தான் அமெரிக்கா உயிர் வாழ்கிறது. இதற்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டால் அடுத்த விநாடியே அமெரிக்கா செத்துப் போய்விடும். எனவே அமெரிக்கா உயிர் வாழ்வதற் கான விதியிலிருந்தே அமெரிக்க மனித நேயம் எழுகிறது.

அதனால்தான் அதிக மாத்திரை களைச் சாப்பிடும் பழக்கத்திருந்து மீட்ப தற்கு ஒரு புதிய மாத்திரை, இதய நோய் உள்ளவர்களுக்குக் கொழுப்பில்லாத சிப்ஸ், கலோரிகள் அதிகமுள்ள கோக் பானம் குடிப்பதால் வரும் பிரச்சினைக ளுக்குத் தீர்வாக டயட் கோக், அப்புறம் பாதுகாப்பான பாலுறவுக்கான ஆணுறை மட்டுமல்ல பெண்ணுறை என்று உடல் நலிவடைந்தோருக்கான அமெரிக்க 'மனிதநேயக்' கண்டுபிடிப்புகள் தொடரு கின்றன. சிகரெட்டுக்கு மட்டும் அப்படி ஒரு மாற்று வரவில்லை என்பது அதன் தற்போதைய சோகம்.

இத்தகைய பண்பாட்டுப் பிரச்சினை களில் புகை மீது மட்டும் பகையுடன் சீறும் அத்தகைய ஹாலிவுட் கலைஞர்களும், இந்தக் கட்டுரையில் முதல் பத்தியில் பார்த்த கலகக்காரர்களும் உண்மையில் கலகக்காரர்களல்ல. ஆம். அமெரிக்க அரசும், முதலாளிகளும் ஏதோ போனால் போகட்டுமென்று தள்ளுபடி செய்யும் ஆபத்தில்லாத பிரச்சினைகளில் மட்டுமே அவர்கள் கலக விளையாட்டை ஆடலாம்.

அரேபியர்களையும், வியத்நாமியர்க ளையும், கம்யூனிஸ்டுகளையும் இது வரை பல கோடி முறை சுட்டுக் கொன்ற ஹாலிவுட்டின் பொம்மைத் துப்பாக் கியின் மீது ஒரு நாய்க்கும் கேவலம் ஒரு பொய்க்கோபம் கூட வரவில்லை. ஆனால் ஹாலிவுட் நடிகன் கையிலி ருக்கும் சிகரெட் மட்டும் ஒரு சிறுவனைக் குறிவைக்கும் துப்பாக்கி என்பது அயோக்கியத்தனமில்லையா? மூன்றாம் உலக நாடுகளின் மக்களையும், போராளி களையும் சிகரெட் பிடிக்காமல் கொன்று குவிப்பது மட்டும் மனதிற்கு ஒழுக்கம் கலந்த உற்சாகமளிக்கிறது என்றால் அந்த மனம் எவ்வளவு அருவெறுப்பாக இருக்கும்? இதுவே இவர்களது ரத்தக் கறை படிந்த கைகள் சொத்து சேர்த்த கதையின் இலட்சணம்.

இதற்கும் மேல் ''சிகரெட்டைப் புகைப்பது ஒரு தனிமனிதச் சுதந்திரம் என்று தவறாக நினைத்தேன்'' என்று தத்துவம் பேசும் நமது கட்டுரை நாயக ருக்கும் எந்தக் காலத்திலும் எந்தச் சுதந்தி ரமும் இருந்தது கிடையாது. அந்த அதிர்ச் சியூட்டும் உண்மை என்னவென்றால் அமெரிக்காவில் எழுதப்படும் திரைக்க தைகள் ஒரு இயக்குநருக்கோ, ஸ்டுடியோ முதலாளிக்கோ, அச்சுக்கோ, எந்த எழு வுக்கும் தரப்படவேண்டுமென்றால் ஒரு நிபந்தனை இருக்கிறது. அது, அக்கதை ''அமெரிக்க நலனுக்கு எதிரானது இல்லை'' என்று அமெரிக்க அரசு சான்றிதழ் தரவேண்டும். இந்தச் சான்று கிடைக்காதவை குப்பையிலோ, படைப் பாளியின் பாழடைந்த டிரங்குப் பெட்டி யிலோ மட்டும் வாழலாம்.

நல்ல வேளை, கோடம்பாக்கத்தில் அனாதையாகச் சுற்றி வரும் திரைக்கதை இளைஞர்கள் பலர் தண்ணியிலிருக்கும் தயாரிப்பாளர்களிடம்தான் அழ வாய்வலிக்கக் கதை சொல்லி அழ வேண்டியிருக்கிறது. அமெரிக்கா போல முதலில் ஜெயலலிதாவிடமும், முரளி மனோகர் ஜோஷியிடமும்தான் கதை சொல்ல வேண்டும் என்ற நிலைமை இல்லை! அப்படிப் பார்த்தால், அமெரிக் காவை விட இந்தியா ஜனநாயக நாடாகத் தெரிகிறதே!

● வேல்ராசன்



படிப்பகம்

www.padippakam.com

# தனியார்மயமாகும் கல்வி புதிய மனுதர்மம் — ④

*ப. சிவக்குமார்*

"உலக வங்கி, ஆசிய வளர்ச்சி வங்கி ஆகியவற்றின் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் பொருளாதாரச் சீர்திருத்தத்தைச் செய்ய வேண்டிய கட்டாயத்தில் கனத்த இதயத்தோடு ரேஷனில் வழங்கும் அரிசியின் விலையை உயர்த்தியுள்ளோம்"

"மானியச் சுமையைக் குறைக்க பொருளாதாரச் சீர்திருத்த நடவடிக்கைகள் தொடரப்படும். அவ்வப்போது அதுகுறித்துத் தகவல்கள் தெரிவிக்கப்படும். பொருளாதாரச் சீர்திருத்த நடவடிக்கையின் துவக்கம்தான் அரிசிவிலை உயர்வு. நேரடிக் கொள்முதல் திட்டத்தை நிறுத்திவிட்டு, மத்தியத் தொகுப்புக்கு மட்டும் கொள்முதல் செய்ய முகவராகச் செயல்பட முடிவு செய்யப்பட்டுள்ளது. அதனால் அரசுக்குக் கணிசமான பணம் மிச்சமாகும்."

"2005-ல் வலக வர்த்தகக் கழக ஒப்பந்தப்படி வெளிநாட்டுத் தனியார் பல்கலைக் கழகங்கள் அனுமதிக்கப்பட உள்ளது. இவற்றுடன் போட்டி போடும் அளவிற்கு நமது அரசுக் கல்லூரிகளின் தரம் உயர்த்தப்பட வேண்டும். பல்கலைக் கழகங்களுடன் அரசுக் கல்லூரிகளை இணைப்பதுதான் இதற்கு ஒரே தீர்வாகும்"

— இவையெல்லாம் கடந்த சில தினங்களாகத் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா மற்றும் அவரது அமைச்சக அறிவிப்புகள். 'கட்டுமானச் சீரமைப்பை (SAP)' மிக வேகமாகச் சேவைத்துறைகளில் அமலாக்குவதில் தமிழ்நாடு அரசு முனைப்பாக இருப்பதும் உலகவங்கி மற்றும் ஆசிய வங்கியின் நிர்ப்பந்தங்களுக்கு அடிபணிந்து கோடிக்கணக்கில் கடன் நோக்கித் தவமிருப்பதும் புலனாகும்.

சாலைப் பராமரிப்பு தனியாரிடம் விடப்பட்டுள்ளதால், பத்தாயிரம் சாலைப் பணியாளர்கள் வேலை இழந்து இருப்பதும், வறட்சியால் குத்துயிரும் குலையுயிருமாய் உள்ள விவசாயிகளின் கொஞ்ச நஞ்ச எதிர்பார்ப்புக்களையும் கொள்முதல் திட்ட மாற்றத்தால் தவிடு பொடியாக்கியிருப்பதும் 7000 அரசுக் கல்லூரி ஆசிரியர் மற்றும் ஊழியர் பணியிடங்களைப் பல்கலைக் கழகப் பணியிடங்களாகக் கணக்கை மாற்றி உலக வங்கிக்குச் சமர்ப்பிக்கத் திட்டமிடுவதும் "கட்டுமானச் சீரமைப்பை (SAP)" தமிழக அரசு வேகமாக அமலாக்குவதே அல்லாமல் வேறொன்றும் இல்லை. மன்மோகன் சிங், நரசிம்மராவ் காலம் தொடங்கி வேகமாக அமலாக்கப்படும் கட்டுமானச் சீரமைப்புகள் இந்தியாவின் மாநில அரசுகளையும், மத்திய அரசையும் காலனி ஆதிக்கத்திற்கு மீண்டும் உட்படுத்துவதேயல்லாமல் இதனை வேறெப்படிச் சொல்வது?

கட்டுமானச் சீரமைப்பு எந்த அளவிற்குச் சேவைத் துறைகளை வளரும் நாடுகளில் சிதைத்து வருகிறது என்பதையும் குறிப்பாகக் கல்வித்துறையில் மாற்றங்கள் தோற்றுவிக்கிறது என்பதையும் காணலாம். அதற்குமுன் 'கட்டுமானச் சீரமைப்பு'க் காலத்திற்கு முன்னாலேயே இந்தியப் பொருளாதாரக் கொள்கைகள் உலக வங்கி நிர்ப்பந்தத்தினால் தீர்மானிக்கப்பட்டன என்பதை உணர வேண்டும்.

> **கல்லூரிக் கல்வி கொடுக்கும் பொறுப்பைத் தட்டிக் கழிக்க நினைக்கும் மத்திய, மாநில அரசுகளின் மனதில் முதலில் தோன்றியது 'தன்னாட்சி' எனும் தாரக மந்திரம்தான். பின்னர் கல்லூரிகளைத் தரப்படுத்தும் குழு நியமிக்கப்பட்டு நட்சத்திரத் தகுதி வழங்கப்பட்டது. தரப்படுத்தும் குழு, தன்னாட்சி வழங்கல் எல்லாமே புதிய கல்விக் கொள்கையின் பரிந்துரைகள்தான்.**

'சோசலிசச் சிற்பி' என வர்ணிக்கப்பட்ட நேருவின் அமைச்சரவையிலிருந்த நிதி அமைச்சர் டி.டி.கிருஷ்ணமாச்சாரி 1957 ஆம் ஆண்டு 600 மில்லியன் டாலர் கடன் கேட்டு உலக வங்கித் தலைவர் இயுஜென் பிளாக்கைச் சந்திக்கச் சென்றபோது நியூயார்க்கில் அளித்த பேட்டியைக் கவனிப்போம். "இந்தியா திட்டமிட்டுள்ள சோசலிச அமைப்பு என்பதைக் கம்யூனிசமாகக் கற்பனை செய்து நீட்டிக்க வேண்டியதில்லை. தனியாரின் முயற்சிகள் முக்கியப் பங்காற்றும் வகையில் செயல்பட அனுமதிக்கும் அமைப்புதான் அது. தனியார் சொத்துக்களை மதிப்பதும் அந்தச் சொத்துகள் அரசுடைமையாக்கப்பட்டால் உரிய நிவாரணம் வழங்கும் அமைப்பு அது. அமெரிக்காவின் சமூக ஓர்மைக்கு ஒத்துவராத எதுவும் இந்த அமைப்பில் இல்லை."

தனியாருக்குச் சாமரம் வீசும் இந்தக் கொள்கை அறிவிப்புக்குப்பின் இந்தியத் தொழிற்கொள்கை மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் உருவாக்கப்பட்டன. 60:40 என்ற விகிதத்தில் வெளிநாட்டுக் கம்பெனிகள் அனுமதிக்கப்பட்டன. வெளிநாட்டுக் கம்பெனிகளுக்கு முதன் முதலாக வரிச்சலுகைகள் அறிவிக்கப்பட்டன. இந்த அமலாக்கங்களைக் கண்காணிக்க டெல்லியில் உலகவங்கியின் அலுவலகம் தோற்றுவிக்கப்பட்டது. உலக வங்கி தலைமையில் ஐ எம் எஃப், ஆசிய வளர்ச்சி வங்கி, விவசாய வளர்ச்சிக்கான பன்னாட்டு நிதியம், ஐரோப்பிய நாடுகளுக்கான குழு ஆகிய அமைப்புக்களையும், அமெரிக்கா, இங்கிலாந்து, ஜெர்மனி, ஜப்பான், நெதர்லாந்து, நார்வே, பெல்ஜியம், கனடா, இத்தாலி, டென்மார்க் ஆகியவற்றை உறுப்பு நாடுகளாகக் கொண்டு "இந்திய உதவி அமைப்பு" (AID INDIA CONSORTIUM) 1958-இல் உருவாக்கப்பட்டது.

இந்திய அரசின் பொருளாதாரக் கொள்கைகள் அதன் வெளிப்பாடான தொழிற் கொள்கைகள், கல்விக் கொள்கை, சேவைத்துறை பற்றிய அணுகுமுறை போன்றவை 1947க்குப் பின் பத்து ஆண்டுகளுக்கு உள்ளாகவே ஏகாதிபத்தியப் பிடிக்குள் சிக்கிவிட்டதை இதிலிருந்து புரிந்து கொள்ளலாம். கட்டுமானச் சீரமைப்பு என்ற பெயரில் இன்று செய்யப்படும் அதிரடி மாற்றங்களை எளிதாக அமலாக்க, தொடக்கத்தில் இருந்தே இந்தியப் பொருளாதாரக் கட்டுமானங்களை உலக வங்கி கையாண்டு வந்தது சாதகமாக அமைந்து விட்டது என்பதை நாம் தெரிந்து கொள்ள



படிப்பகம்

www.padippakam.com

வேண்டும்.

உலக வங்கியிடம் கடன் வாங்கும் சுமையால் நாடுகள் ஐ.எம்.எஃப். மற்றும் உலக வங்கியால் கழுத்து நெறிக்கப்பட்டு எவ்வாறு சேவைத் துறை, குறிப்பாக, கல்விக்கான செலவினங்களைக் குறைக்கின்றன எனக் காணலாம்.

## இந்தியாவில் உயர் கல்விக்கான செலவு (சதவீதத்தில்)

| ஆண்டு | அரசுநிதி | உள்ளாட்சி அமைப்பு நிதி | பல்கலைக்கழக நிதி | மாணவர் கட்டணம் | அறக்கட்டளை மற்றும் பிற |
|---|---|---|---|---|---|
| 1950-51 | 57.1 | 10.9 | - | 20.4 | 11.6 |
| 1960-61 | 68.0 | 6.5 | - | 17.1 | 8.4 |
| 1970-71 | 76.7 | 3.6 | 1.4 | 12.9 | 5.9 |
| 1979-80 | 80.8 | 5.0 | 1.3 | 8.7 | 4.2 |
| 1984-85 | 86.2 | 2.5 | 1.2 | 7.3 | 2.8 |
| 1985-86 | 86.6 | 2.5 | 1.2 | 7.0 | 2.7 |
| 1986-87 | 86.8 | 2.7 | 1.1 | 6.9 | 2.5 |

ஜாம்பியா 1993–96–ல் வாங்கிய கடனுக்காகத் திரும்பச் செலுத்தும் தொகை 335 மில்லியன் டாலர்கள். தொடக்கக் கல்விக்காகச் செலவழிக்கும் தொகையோ 82 மில்லியன் டாலர்கள்தான். மொத்தத் தேசிய வருமானத்தில் 10 சதம் கடனுக்காகச் செலவழித்தால் 2.5 சதம் மட்டுமே தொடக்கக் கல்விக்குச் செலவழிக்கிறது ஜாம்பியா. உலகவங்கிக் கடன் சுமையால் அவதிப்படும் ஜாம்பியாவில் வறுமைப் பிடியில் சிக்கியுள்ள மக்கள் அத்தியாவசிய உணவுத் தேவைக்கான செலவைச் சந்திக்கக் குழந்தைகளைப் பள்ளிக்கனுப்பவில்லை. வேதனையான செய்தி என்னவென்றால் தங்கள் பெற்றோர்களைக் காட்டிலும் கல்வி அறிவு குறைந்தவர்களாக ஜாம்பியக் குழந்தைகள் உருவாகப் போகிறார்கள் என்பதுதான்.

தான்சானியாவின் நிலைமையோ இன்னும் மோசமானது. தொடக்கக் கல்விக்காகச் செலவழிப்பதைப் போல் 4 மடங்கு அதிகம் உலக வங்கிக் கடன் சேவைக்காகச் செலவழிக்கிறது தான்சானியா. ஏறத்தாழ 22 லட்சம் குழந்தைகள் பள்ளிப் படிப்பு இல்லாமல் உள்ளனர்.

நிகரகுவா நாட்டில் தொடக்கக் கல்விச் செலவினம்போல் 5 மடங்கு அதிகமாக உலக வங்கிக் கடன் சேவைத் தொகைக்காகச் செலவிடப்படுகிறது.

எத்தியோப்பியாவில் தலா 2.5 டாலர் தொடக்கக் கல்விக்குச் செலவழிக்கப்படுகிறதென்றால் உலகவங்கிக் கடனுக்காகத் தலா 6 டாலர் செலவழிக்கப்படுகிறது. இங்கே தொடக்கக் கல்வி பெற வேண்டிய 90 லட்சம் குழந்தைகள் பள்ளிப் படிப்பை எட்டிப்பார்க்கவில்லை.

சோமாலியா அனுபவம் நமக்குப் பாடம். 80களில் எத்தியோப்பியாவுடன் நடந்த போருக்குப்பின் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால் உலகவங்கி மற்றும் ஐ.எம்.எஃப்.-இன் நிபந்தனைகளையெல்லாம் ஏற்றுக் கட்டுமானச் சீரமைப்பைச் சோமாலியா மேற்கொண்டது. ஒவ்வொரு சோமாலியன் தலை மீதும் 281 டாலர்கள் கடன் சுமை விழுந்தது.

உணவுக்கான மானியம் குறைக்கப்பட்டது. உணவுப் பொருட்கள் இறக்குமதி ஊக்குவிக்கப்பட்டது. உள்நாட்டு விவசாயச் சாகுபடிகள் புறந்தள்ளப்பட்டு ஏற்றுமதி நோக்கில் பழங்கள், காய்கறிகள் மற்றும் பருத்தி பயிரிடப்பட்டன. 1975ல் இருந்ததைவிட 75% குறைவாக உடல் நலத்துக்குச் செலவிடப்பட்டது. கல்விக்கான நிதி ஒதுக்கீடு குறைக்கப்பட்டது. ஏறத்தாழ 25சதம் தொடக்கப் பள்ளிகள் கல்விச் சாதனங்கள் மற்றும் நூல்கள் இன்றி மூடப்பட்டன. பொதுத்துறை நிறுவனங்களில் வேலைவாய்ப்பு குறைக்கப்பட்டு உண்மையான கூலியின்றி வேலைவாய்ப்புமின்றி பஞ்சமும் பட்டினியும் தலைவிரித்தாடத் தொடங்கியது.

பின்தங்கிய வளரும் நாடுகளில் சிலவற்றில் ஐ.எம்.எஃப் மற்றும் உலக வங்கி ஆகியவற்றின் நெருக்குதலால் அடிப்படை ஆரம்பக் கல்வி பற்றிக் கூடக் கவலைப்படாமல் கட்டுமானச் சீரமைப்ப மேற்கொள்ளப்படுவதைக் கண்டோம் இந்தப் பின்னணியில் மத்திய அரசின் பொருளாதார மற்றும் கல்விக் கொள்கைகளும், மாநில அரசின் பொருளாதா மற்றும் கல்விக் கொள்கைகளும் பார்க்கப்பட வேண்டும் அப்பொழுதுதான் ஒடுக்கப்பட்ட மக்களையும், தொழிலாளர்களையும், விவசாயிகளையும், ஆசிரியர் அலுவலர்களையும், வேலைவாய்ப்பிழந் இளைஞர்களையும் ஒருங்கிணைத்து உலகமயமாதலின் தாக்குதலுக்கெதிரான போராட்ட தொடுக்க வேண்டிய அவசியம், அவசர புரியும்.

தேசிய மொத் வருமானத்தில் 3. சதம் மட்டுமே செ வழிக்கும் இந்திய



மைதானமே தேர்வு அறையாக
''வெயில் வானம் மேலே சுடுமணல் கீழே''



படிப்பகம்

www.padippakam.com

உலக அரங்கில் கல்விக்கான செலவின முதலீட்டைப் பார்க்கும்போது 115-வது இடத்தை வகிக்கிறது. 10 கோடிகள் மக்கள் தொகைக்குமேல் உள்ள நாடு களைக் கணக்கில் கொண்டால் இந்தியா கடைசியில் உள்ளது.

ஆறாவது திட்டத்தில் கல்விக்கான மொத்தச் செலவினத்தில் 20.89% உயர் கல்விக்கு ஒதுக்கப்பட்டது. ஆனால் எட்டாவது திட்டத்தில் 11.20%மாகக் குறைந்துவிட்டது. மேலும் அரசின் நிதி, பல்கலைக்கழகப்பங்கு, ஊராட்சி, மாநக ராட்சிப் பங்கு என ஒப்பிட்டு உயர் கல்வியில் மாணவர் கட்டணம் என்று பார்த்தால் பின்வரும் செலவினப் பகிர் தலைக் காணலாம். 1950-களில் ஒப்பிட்டுப் பார்க்கையில் மாணவர் கட்டணம் மூலம் வருகின்ற தொகை 80-களில் குறைவாக இருப்பதைக் காணலாம். (பார்க்க: பெட்டிச் செய்தி)

''உயர்கல்விக்கான மானியக் குறைப்பு உடனடித் தேவையாகும். அரசு மானியம், நிதி ஒதுக்கீடு ஆகியவற்றில் ஆரம்பக் கல்விக்கே முக்கியத்துவம் அளிக்க வேண்டும். உயர்கல்விக்கான மாணவர் கட்டணம் குறைவாக உள்ளது'' எனக் கல்விக்கான உலகவங்கிக் கூட்டங் களில் திரும்பத் திரும்பக் கூறியதன் விளைவே, 1986 புதிய கல்விக் கொள்கை மற்றும் செயலுக்கான திட்டத்தில் (New Education Policy and Programme of Action) தன்னாட்சிக் கல்லூ ரிகளை ஊக்குவித்தல், சுயநிதிக் கல்லூரி களை வளர்த்தல், உயர்கல்விக்கான நிதி ஆதார மாற்றைத் தேடல் எனப் பல மாநி லங்களில் ஊக்குவிக்கப்பட்டன. தமிழ் நாடு இதிலெல்லாம் முதலிடம் வகிக்கி றது.

அரங்கநாயகம் கல்வி அமைச்சராக இருந்தபோது தன்னாட்சிக் கல்லூரிகள் ஊக்குவிக்கப்பட்டன. பல தனியார் கல் ரிகள், சென்னை லயோலா கிறித்தவக் கல்லூரி, கோவை பி.எஸ்.ஜி. கல்லூரி, திருச்சி செயின்ட் ஜோசப், மதுரை அமெ ரிக்கன் கல்லூரி போன்றவை குறிப்பிடத் தக்கவை. அப்போது கல்வி அமைச்சர் மற்றும் பல்கலைக்கழகத் துணை வேந்தர் களும் சொன்ன காரணம் ''பல்கலைக்கழ கங்களுடன் ஏன் கல்லூரிகள் இணைக்கப் படவேண்டும்? கல்லூரிகள் சுதந்திரமாக இயங்க வேண்டுமானால் தன்னாட்சி தான் தீர்வு. பல்கலைக்கழகங்கள் தேர்வு நடத்தும் அமைப்புக்களாக உள்ளன. அவை ஆய்வில் கவனக் குவிப்பு செலுத்த வேண்டுமெனில் கல்லூரிகள் இணைப்பு (Affiliation) தவிர்க்கப்பட வேண்டும். மேலும் தன்னாட்சிக் கல்லூரி



சரிந்து விழும் ஆரம்பக் கல்வி
ஓட்டைக் கூரை; இட நெரிசல்;
புறக்கணிக்கும் அரசாங்கம்.

எனில் பல்கலைக்கழக மானியக்குழு விடம் நிறைய நிதி பெறலாம்.''

கல்லூரி ஆசிரியர்கள் தன்னாட்சிக் கல்லூரி என்பது உயர்கல்வித் துறையில் சில நகர்ப்புறக் கல்லூரிகளைச் 'சிறப்புத் தீவுகளாக' (Islands of Excellence) உரு வாக்கும் முயற்சி எனவும் கல்லூரிக் கல்வித் துறையில் இரட்டைக் கல்வி முறைக்கான வழி எனவும் எதிர்த்தனர். 87-88-இல் கல்லூரி ஆசிரியர்கள் போராடிக் கொண்டிருந்தபோது அவசர அவசரமாக அரசுக் கல்லூரியான மாநிலக் கல்லூரி தன்னாட்சி ஆக்கப்பட்டது. இந் தியா முழுமையும் ஏறத்தாழ 120 தன் னாட்சிக் கல்லூரிகள் எனில் தமிழ்நாட் டில் மட்டும் அதில் ஏறத்தாழ 45 சதம் உள் ளது.

தற்போது கும்பகோணம், கோவை, இராணிமேரி, பாரதி மகளிர், சேலம் ஆடவர், பெரியார் ஈவெரா, மதுரை மீனாட்சி, தஞ்சை சரபோசி, புதுக் கோட்டை மன்னர் கல்லூரி, அரசுக் கல்லூ ரிகளும் தன்னாட்சிக் கல்லூரிகளாக இயங்குகின்றன. இந்தியா முழுமையும் ஏறத்தாழ 120 தன்னாட்சிக் கல்லூரிகள் எனில், தமிழ்நாட்டில் மட்டும் அதில் ஏறத்தாழ 45 சதம் உள்ளது. இந்தத் தன்னாட்சிக் கல்லூரிகளுக்கெனப் பல்க லைக்கழக மானியக்குழு ஆண்டுதோறும் 8 லட்சம் உதவி தருகிறது. இந்த உதவி திண்டிவனம், ஆத்தூர், பூலாங்குறிச்சி, இராமநாதபுரம் போன்ற கிராமப்புற அரசுக் கலைக்கல்லூரிகளுக்கில்லை.

கல்லூரிக் கல்வி கொடுக்கும் பொறுப்பைத் தட்டிக் கழிக்க நினைக்கும் மத்திய, மாநில அரசுகளின் மனதில் முதலில் தோன்றியது 'தன்னாட்சி' எனும் தாரக மந்திரம்தான். பின்னர் கல்லூரி களைத் தரப்படுத்தும் குழு நியமிக்கப் பட்டு நட்சத்திரத் தகுதி வழங்கப்பட்டது. தரப்படுத்தும் குழு (National Accredition Council - NAC), தன்னாட்சி வழங்கல் எல்லாமே புதிய கல்விக் கொள்கையின் பரிந்துரைகள்தான்.

மொத்தமுள்ள 67 அரசுக் கல்லூரி களில் மாநிலக் கல்லூரி, இராணிமேரி, பாரதிமகளிர், குடந்தை ஆடவர், மன்னார் கல்லூரி புதுக்கோட்டை, பெரியார் ஈவெரா, திருச்சி குடந்தை மகளிர், மதுரை மீனாட்சிக் கல்லூரி, மயி லாடுதுறை, சேலம் ஆடவர், திருவாரூர், கோவை ஆகிய 12 கல்லூரிகள் மட்டும் நட்சத்திரத் தகுதி பெற்றுள்ளன.

பல்கலைக்கழக மானியக் குழு எதிர் காலத்தில் நிதி வழங்க நட்சத்திரத்தகுதி தேவை எனக் கூறியுள்ளது. இந்தப் பன்னிரண்டு கல்லூரிகளில் ஒன்றைத் தவிர எல்லாமே தன்னாட்சிக் கல்லூரிக ளாக இருப்பதைக் காணலாம்.

தன்னாட்சி, நட்சத்திரத் தகுதி, அரசுக் கல்லூரிகளில் சுயநிதி வகுப்பு என கட்டு மானச் சீரமைப்பு தமிழகத்தில் நடை பெற்ற போதெல்லாம் தீர்மானங்கள் மூலம் மட்டுமே எதிர்ப்புத் தெரிவித்த கல்லூரி ஆசிரியர் சங்கங்கள் வலுவான எதிர்ப்புப் போராட்டங்களை நடத்த வில்லை. கேரள ஆசிரியர்கள் ''தேசீயத் தரம் பிரிக்கும் குழுவே திரும்பிப் போ!'' (NAC GO BACK) எனக் குறைந்தஅளவு குரலெழுப்பியதைக் கூட இங்குள்ள ஆசி ரியர்கள் செய்யவில்லை.

கிராமப்புற அரசுக் கல்லூரிகள் சில வற்றில் இருந்த பாடப்பிரிவுகள் மூடப் பட்டு வேறு கல்லூரிகளுக்கு மாற்றப்படு வதும் மூன்றாண்டுகளுக்குமுன் நடந்தது. திருப்பூர் ஆடவர் அரசுக் கலைக் கல்லூ ரியில் இயற்பியல் பாடப்பிரிவில் ஒரு வகுப்பு மூடப்பட்டு திருத்தணி அரசுக் கல்லூரிக்கு மாற்றப்பட்டது. இதற்கும் பெரிய எதிர்ப்பில்லை.

இவை எல்லாமே உயர் கல்வித் துறையில் 'கட்டுமானச் சீரமைப்பின்' முயற்சிகளாகவே பார்க்க வேண்டும்; இதன் உச்சகட்டமாகவே தற்போதைய அரசுக் கல்லூரிகளைப் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளாக மாற்றும் முயற் சியைப் பார்க்கவேண்டும்.

— தொடரும்



படிப்பகம்

www.padippakam.com

அப்பாவின் செய்கைகளை
நினைக்கையில் இன்றைக்கும்
பிரமிப்பாக இருக்கும்...

காரைவீட்டு அய்யாவின்
வயலுக்கு உரத்தைப் போட்டுவிட்டு,
எஞ்சிய சாக்குகளை
எங்களுக்கு விரிப்புகளாக்கும்
அவரின் லாவகம்.

''தினமும் வயலில்தான்
வேலை செய்கிறாய்,
பிறகேனப்பா...
நம்வீட்டில் மட்டும்
நாள் முழுக்கச் சோளக் கஞ்சி?''
என்று எப்போதாவது
கேட்கத் தோணும்...
நடுச்சாமம் வீட்டுக்கு வரும்
அப்பாவின் முகம் பார்க்க
பாவமாய் இருக்கும்.

பிடித்ததைக் கேட்டு
அழுது, அழுது நான்
தூங்கிப் போனாலும்,
எனக்குப் பிடித்த
டவுசரும், பனியனும்
எப்படியாவது
வாங்கி வைத்துவிடுவார்
விடிவதற்குள்.

காலையில் நான் எழுவதற்குள்
அந்தப் புதிய
ஜவுளிக்கடைப் பையில்
தூங்கிக் கிடக்கும்....
என் உடைந்துபோன சிலேட்டும்
அட்டைபோன புத்தகங்களும்.

புதுடவுசரும், பனியனும்
என் விழிப்பிற்காக,
தலையருகே காத்திருக்கும்.

விறகுகளை வெட்டி முடித்த
அதேநேரத்தில்தான்
பம்பரம் செதுக்கி
என் உள்ளங்கையில்
சுற்ற விடுவார்....
கண்ணருகே கையைக்
கொண்டு வந்து,
பம்பரத்தையே பார்த்து நிற்பேன்.
அதுவும் என் உள்ளங்கையில்
கம்பீரமாய்ச் சுற்றிக் கொண்டிருக்கும்.

எங்கப்பாவைத் தவிர
எங்கள் மாடு யாரையும் முட்டும்,
அதன் கூரிய கொம்பொன்றில்
எந்தப் பயமும் இன்றி
அமர்ந்திருக்கும் ஒரு
வண்ணத்துப்பூச்சி.

அப்பாவுடன்
மழைநாட்கள்
மறக்க முடியாதவை...
தூங்குமிடங்கள் ஈரமில்லாமல் இருக்க
வீடு முழுவதும்
அலுமினியத் தட்டுக்களைக்
கவசங்கள் போல்
ஆங்காங்கே வைப்பார்,
மழைத்துளிகள் பட்டுத்தெறிக்கும்
அந்தச் சத்தத்தில்தான்
எங்களின் இரவுத்தூக்கம்
ஆரம்பமாகும்.
அப்பா மட்டும் ஏனோ தூங்காமல்
விட்டத்தையே
பார்த்துக் கொண்டிருப்பார்.

போன வருசச் சாமிகும்பிடுக்கு
எடுத்த டவுசர்தான், இருப்பினும்
பின் பக்கம் கிழிந்து போனது.
வாத்தியார்
''இன்'' செய்யச் சொன்னால்தான்
மானம் போய்விடும்...
கிழிந்திருக்கும் இடத்தில்
கைகளை நுழைத்துக்
'கடுதாசி'' போடுவார்கள்
பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள்...

அப்பொழுது
அப்பாவை நினைத்து
அழுதிருக்கிறேன்.

ஆனால்,
காரவீட்டு அய்யாவின்முன்,
அப்பா குனிந்து நின்றால்மட்டும்
எனக்குக் கோபமாய் இருக்கும்.



# தலைமுறை

கவிதையும் ஓவியமும்: முகிலன்

படிப்பகம்

ஆசிரியரும் வெளியிடுபவரும்: வி. வல்லபேசன், 3, செகந்நாதபுரம், நான்காவது தெரு, சேத்துப்பட்டு, சென்னை - 600 031.

www.padippakam.com

PUTHIYA KALACHARAM
(TAMIL MONTHLY)
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPERS
FOR INDIA UNDER No: 42647/87
Regd. No: TN/Chief PMG - 303 / 2002

# தொடர்கிறது அமெரிக்காவின் உலக மேலாதிக்கத்திற்கெதிரான போர்!



"ஈராக்கை ஆக்கிரமிக்காதே"
ரோம் (மேலே), லண்டன் (கீழே) : இத்தாலி - இங்கிலாந்து மக்களின் ஆர்ப்பாட்டம்!

படிப்பகம்